www.padippakam.com


# தொழிலாளர் பாதை

2/-

● மாதமிரு இதழ் — 415 ● 1991 டிசம்பர் 30 திங்கட்கிழமை



[illegible] உலகத் தொழிலாளர்
மகாநாட்டு பிரசுரங்கள்

★ ஏகாதிபத்திய யுத்தத்தையும்
காலனித்துவத்தையும் எதிர்!
(நா.அ அ.கு,வின் விஞ்ஞாபனம்) விலை 10/-

★ ஆகஸ்ட் சதியின் பின்னர் சோவியத் யூனியன்
எங்கே செல்கிறது? விலை 25/-

★ பேர்ளின் உலக மகாநாட்டின்
முனநோக்கு. விலை 30/-

கிடைக்குமிடம்:
90, 1வது மாளிகாகந்த ஒழுங்கை, கொழு்பு-10.


## உலகவங்கி தாக்குதல்களைத் திணிக்க

# இனவாத இரத்தக் களரிகளுக்கு 'திட்டம்'

தமிழர் விரோத இனவாத இரத்தக் களரிகளில் முழு நாட்டினையும் தோய்த்து எடுக்கும் புதிய ஆத்திரமூட்டும் இயக்கங்களில் ஏகாதிபத்தியச் சார்பு யூ. என். பி. அரசாங்கமும்,சி.ல.சு.க.வும்,மற்றும் இனவாதக் கும்பல்களும் ஈடுபட்டுள்ளன. இதற்கு எதிராக பாட்டாளி வர்க்க அனைத்துலகவாத வேலைத்திட்டத்தின் அடிப்படையில் அணிதிரளுமாறு இலங்கை — தமிழ் ஈழம் தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களைப் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் வேண்டுகின்றது.

இந்த முதலாளித்துவ இனவாத இயக்கத்தின் இலக்கு சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ஏகாதிபத்திய ஆட்சியாளர்களின் கட்டளைகளை அமுல் செய்வதும், அதன் மூலம் பேரழிவினைச் சிருஷ்டிப்பதும்,சிங்கள-தமிழ் தேசிய இனங்கள் இரண்டினைச் சேர்ந்த தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களைக் காட்டுமிராண்டித்தனமாக நசுக்கித் தள்ளுவதுமே,

இன்றைய புதிய இனவெறிக் கூச்சல்களின் அச்சாணி என்ன தெரியுமா? பிற்போக்கு யூ. என். பி. அரசாங்கத்தின் முக்கிய முண்டுகோலும்,இ.தொ.கா. தலைவரும், அமைச்சருமான எஸ். தொண்டமான் முன்வைத்துள்ள 'யுத்தத்தினை நிறுத்தி அமைதியை நிலைநாட்டும்' மோசடி வேலைத்திட்டமாகும்.

தொண்டமான் முதலாம் நம்பர் ஏகாதிபத்தியக் கைக்கூலி. அவரைக் கொண்டு விடுதலைப் புலிகள் தலைமையின் வங்குரோத்தினையும், பிற்போக்கினையும் உரிய முறையில் பயன்படுத்தி, தமிழீழ விடுதலைப் போராட்டத்தினைச் சிதறடிப்பதற்கான புதிய படுகுழிகளைத் தோண்டுவதே யூ. என். பி. அரசாங்கத்தின் திட்டம்.

தொண்டமான் வட — கிழ் மாகாணங்களை இணைத்து, விடுதலைப் புலிகள் இயக்கத்திடம் கையளிக்கவும், தமக்கேன ஒரு 'மலையநாட்டை' அமைக்கவும் சூழ்ச்சி செய்து வருகின்றார் என்ற இனவெறியை தூண்டும்பிரச்சாரத்தில் சி. ல. சு. க. கட்சியினரும் புதிதாக அமைக்கப்பட்ட ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் முதலாளிகளும் மற்றும் இனவாதக் கும்பல்களும் குதித்துள்ளன. இந்த இனவெறிப் பிரச்சாரத்துக்குப் பரந்த களத்தினை அமைத்துக் கொடுக்கும் விதத்தில் முதலாளித்துவ 'ஐலன்ட்' பத்திரிகை (1991 டிசம்பர் 22 ஞாயிறு) அமைச்சர் தொண்டமானுடன் ஒரு பேட்டியை



ஆர், பிரேமதாச

நடாத்தியது. அதில் ''உங்களின் யோசனை ஒரு காலத்தில் செயல்முறைப்படுத்தப்படுமிடத்து சிங்களப் பெரும்பான்மையினர் பதிலடி கொடுக்கமாட்டார்கள் என நீங்கள் நினைக்கிறீர்களா''? என ஆத்திரமூட்டும் விதத்தில் கேள்வி எழுப்பியிருந்தது.

### 'மலையநாடு' பேச்சு

இந்த 'மலையநாடு' பேச்சுக்களுடன் இனவாதப் பிரச்சாரம் மேலும் புடம்போடப்பட்டு, தோட்டத்துறைக்கு விஸ்தரிக்கப்பட்டது. பசறை, கரவனெல்ல பகுதியில் புலிகள் இயக்க அங்கத்தினர் ஆயுதங்களுடன் கைப்பற்றப்பட்டனர் என்ற பிரச்சாரத்தினை கட்டவிழ்த்துவிட்ட யூ. என். பி. அரசாங்கமும் முதலாளித்துவப் பத்திரிகைகளும் இராணுவ – பொலிஸ் ரோந்து நடவடிக்கைகளை பலப்படுத்தியதோடு, தோட்டப்புறங்களில் அநேகஇடங்களில் சோதனை, காவல் அரண்களையும் ஏற்படுத்தியுள்ளது. இதைத் தொடர்ந்து தோட்டங்களுள் செல்வதோ, தோட்டங்களில் இருந்து வெளியேறுவதோ கடினமாகியுள்ளது. இராணுவ பயங்கர இயக்கம் இங்கெல்லாம் ஆரம்பமாகியுள்ளது.

இப்புதிய இனவாத ஆத்திரமூட்டும் நடவடிக்கைகள் சமசமாஜ — கம்யூனிச — நவசமசமாஜ — இ.தொ.கா. தலைவர்களின் ஒத்துழைப்புடன் யூ. என். பி. அரசாங்கம் வடக்கு—கிழக்கில் நடாத்தி வரும் காட்டுமிராண்டி இனவாத யுத்தத்தில் சுமார் 20.000 பொதுமக்களும் விடுதலைப் புலிகளும் கொல்லப்பட்டதோடு, இன்னும் பல



எஸ்; தொண்டமான்

இலட்சம் மக்கள் அகதிகளாக தள்ளப்பட்டுள்ள நிலையிலேயே இடம்பெறுகின்றன என்பதை நாம் நினைவில் கொண்டாக வேண்டும்.

ஏகாதிபத்தியவாதிகளிடம் இருந்து ஆட்சி கைமாறிய நாளிலிருந்து இந்த 'தேசிய' ஆட்சியாளர்கள் சிங்கள தமிழ் மோதுதலை தூண்டும் இனவாத ஆயுதத்தினை ஆட்சி நீடிப்புக்கான கருவியாகப் பயன்படுத்தி வந்துள்ளனர். இன்றைய நிலையில் ஏகாதிபத்திய, காலனித்துவ சுரண்டல்களுக்கு வாய்ப்பான நிலைமைகளைச் சிருஷ்டிக்கும் 'கொம்பிரதோர்' ஏஜன்டுகளாக தமது நிலைமையை உறுதி செய்யவே இந்த இரத்தக் களரி ஆயத்தங்கள் ஆரம்பமாகியுள்ளன. எனவேதான் நாம் இந்த ஆயத்தங்களின் இலக்கு, தமிழ் தேசிய இனத்தினரை ஒடுக்கித் தள்ளுவது



வே. பிரபாகரன்

மட்டுமன்றி 'ஏகாதிபத்தியக் கட்டளைகளின் அமுலில் ஈடுபட்டு வரும் தமக்கு எதிராக தொழிலாள — ஒடுக்கப்படும் மக்களின் பெரும் கிளர்ச்சி ஏற்படுமோ என்ற பிரேமதாச அரசாங்கத்தினதும், முதலாளிகளதும் நியாயமானபீதியே காரணம் எனக் கூறுகின்றோம்.

'இலங்கைக்கு உதவி வழங்கும் குழுவின்' அடுத்த கூட்டத்தினை திட்டமிட்டது போல் 1992 பெப்ரவரியில் நடாத்தாமல் மேலும் தள்ளிப் போடப் போவதாக ச. நா. நி. மும், உலக வங்கியும் மிரட்டியுள்ளன. "இலங்கைக்கு அவசியப்படும் 45 கோடி டாலரில் 37.5 கோடி டாலர்களை இறுக்கிப் பிடித்துக் கொண்டுள்ள வங்கியாளர்கள் தனியார்மயமாக்கமும் தேசியமயமாக்க ஒழிப்பும் முற்றுப் பெறவேண்டும் என பிரேமதாச அரசாங்கத்தினை நெருக்கி வருகின்றார்கள். இதன் பேரில் தோட்டத்துறை, புகையிரதம், அரச வங்கிகள் இவற்றினை தனியார்மயமாக்கும் நடவடிக்கைகளைப் பிரேமதாச அரசாங்கம் விரைவுபடுத்தியுள்ளது. இந்தத் தொழில் அழிப்பு நடவடிக்கைகளால் இலட்சக் கணக்கானோர் வேலையற்றோர் பட்டியலில் விரைவில் சேர்ந்து கொள்ளவுள்ளார்கள். அத்தோடு அரசின் புள்ளிவிபரங்களின்படி வருடாந்தம் 250,000 இளைஞர்கள் வேலையற்றோர் கும்பலில் சேர்ந்து கொண்டுள்ளார்கள்என்பதும் குறிப்பிடத்தக்கது. முழுநாட்டையும் ஒரு ஏற்றுமதி வலயமாக்கும் பிரேமதாச திட்டத்தின் கீழ் ஏகாதிபத்தியவாதிகள் குறைந்த கட்டணத்தில் உழைப்பைச் சுரண்டும் நிலைமையை இது உண்டுபண்ணுகின்றது.

கடந்த காலங்களில் தொழிலாள வர்க்கத்தின் பல்வேறு தட்டினரிடையேயும் ஏற்பட்ட அபிவிருத்திகள், இந்த ஏகாதிபத்திய திட்ட அமு

(9-ம் பக்கம் பார்க்க)

### அமெரிக்க ஒலிபரப்பு நிலையத்துக்கு இடமளியாதே!

சிலாபம் இரணவிலைக் கிராமத்தில் 'வொயிஸ் ஒப் அமெரிக்கா' என்ற பேரில் உளவு சேவை நிலையம் ஒன்றை அமைக்க பிரேமதாச அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது. இந்த ஒலிபரப்பு நிலையத்துக்கும், ஹோட்டலுக்குமென கிராமவாசிகளின் 400 ஏக்கர் நிலம் பறிக்கப்படவுள்ளது. 1985—86ல் இருந்தே இம்முயற்சி இடம் பெற்று வந்ததோடு அன்று கிராமவாசிகள் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்துடன் சேர்ந்து நடாத்திய பிரச்சார இயக்கத்தினால் இத்திட்டம் ஒத்திப்போடப்பட்டது. அன்று அம்பலமான தகவல்களின்படி இந்நிலையம் இந்தியாவினூடாக சோவியத் யூனியனின் தென்பாகத்துக்கு ஒலிபரப்புச் செய்யும் சக்தி வாய்ந்தது எனவும் இராணுவ உளவு நடவடிக்கை, சிக்னல் வழங்கும் நிலையமாக இதைப் பயன்படுத்த முடியும் என்பதும் தெரிய வந்தது. இந்த யுத்த முகாம் ஆபத்துக்கும், நிலம் கொள்ளையடிப்புக்கும் எதிராக புரட்சிக் கம்யூனிஸ்ட் சழகம் ஆரம்பித்துள்ள இயக்கத்தில் பங்குகொள்ளுமாறு பு. க. க வேண்டுகின்றது.

## வடக்கு — கிழக்கில் இருந்து இராணுவத்தை வெளியேற்று!

படிப்பகம்

# மலையக மக்கள் முன்னணி தலைவர்களை விடுதலை செய்!

ஜூலை 4ம் திகதியில் இருந்து கைது செய்யப்பட்டு தொடர்ந்து சிறைவைக்கப் பட்டுள்ள மலையக மக்கள் முன்னணி தலைவர்களான பீ. சந்திரசேகரம், பீ. ஏ. காதர், வீ. தர்மலிங்கத்தினை உடன் விடுதலை செய்யும்படி கோரும் பிரச்சார இயக்கத்தினை தொழிலாள வர்க்க இயக்கம் ஆரம்பிக்க வேண்டுமென புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் 'தொழிலாளர் பாதை'யும் வேண்டுகின்றன.

கூட்டுப்படைத் தலைமை யலுவலகத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் சம்பந்தப் பட்டதாகக் கூறப்பட்ட வரதனுடன் உறவு கொண்டிருந்தனர் என்ற பெரிதும் குழப்பமான குற்றச்சாட்டின் பேரில் இவர்கள் கைதாகி 6 மாதங்கள் கழிந்துவிட்டன.

ம. ம. மு. தலைமையுடன் ஆழமான அரசியல் வேறுபாடுகளைக் கொண்ட புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம், இந்தப் பொலிஸ்-இராணுவப் பாய்ச்சல் இடம்பெற்ற வேளையில் இதன் நோக்கத்தினை தெளிவுபடுத்துகையில் கூறியதாவது: "வரதனுடன் தொடர்பு இருந்தால் என்ன இல்லாவிட்டால் என்ன சந்திரசேகரம், காதர், தர்மலிங்கம் கைது செய்யப்பட்டமை தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிரான யூ. என். பி. அரசாங்கத்தின் சதியாகும். இந்தத் தலைவர்கள் யூ. என். பி. அரசாங்கத்திற்கு எதிராகத் தொழிலாளர்களை அணி திரட்டுவதில் ஈடுபட்டு வந்தவர்கள் அல்லர். எனினும் தொழிலாள வர்க்கத்துக்கு எதிராகக் கொடிய பயங்கரத் தாக்குதலைத் தொடுக்க தமிழர் விரோத இனவாதிகளுக்கு வாய்ப்பினைச் சிருஷ்டிப்பது அவசியமாகியுள்ளது ... ('ஆசிரியர் குழு அறிக்கை 'தொழிலாளர் பாதை 12/7/91)

இந்தத் தலைவர்களில் ஒருவரான வீ. தர்மலிங்கம் சிறையில் இருந்து விடுதலையாகும் பொருட்டு சமர்ப்பித்த மேன்முறையீடு இவர்கள் எத்தகைய காந்திய அஹிம்சாவாதிகள் என்பதைப் பறைசாற்றியுள்ளது. "வரதன் வசித்துவந்தவீட்டினைபொலிசாருக்குக் காட்டிக் கொடுத்தது நான்தான். இன்னும் பல உதவிகளை நான் செய்துள்ளேன். ஆதலால் என்னை சிறையில் வைத்திருத்தல் சட்ட விரோதமானது" (வீரகேசரி நவம்பர் 7, 1991)

தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராக முதலாளி வர்க்கத்துக்கு உளவு பார்ப்பவர்களின் மட்டத்திற்குத்தாம் கீழிறங்கியுள்ளதை அவர்களே ஒப்புக் கொண்டுள்ளார்கள், இந்தபோதிலும் தோட்டத் துறை பூராவும் இடம்பெறும் தனியார் மயமாக்கத்துக்கு எதிரான தொழிலாளர்களின் கிளர்ச்சிகளைச் சிதறடிக்கும் அவசியம் யூ என் பி. அரசாங்கத்துக்கு ஏற்பட்டுள்ளதால் எதுவித சலுகைகாட்டவும் அரசு தயார் இல்லை.

கடந்த மாதத்தில் பதுளை, பசறை பிராந்தியத்தில் 'புலிப்படை' பீதியை தூண்டி விட்டு 32 தொழிலாளர்களை ஆயுதப்படைகள் கைது செய்துள்ளது. இங்ஙனம் கைது செய்யப்பட்டவர்கள் அப்பாவி தொழிலாளர்கள் என யூ.என்.பி. அரசாங்க அமைச்சரான எம். எஸ். செல்லச்சாமியும், ஈ.பி.ஆர்.எல்.எப். பும் குறிப்பிட்டிருந்தது தெரிந்ததே.

தோட்டத் தொழிற்சங்க கூட்டுக் கமிட்டி உட்பட தோட்டப்புற சகல தொழிற் சங்கத் தலைமைகளும் ம. ம. மு. தலைவர்களை விடுதலை செய்யக்கோரும் எந்த வொரு போராட்டத்திலும் இறங்காததோடு அத்தகைய போராட்டத்தினை தொடர்ந்து எதிர்த்தும் வருகின்றார்கள். தமது சொந்த சங்கத்தினைக் கூட இப்பிரச்சாரத்தில் இறந்தவரை மலையக மக்கள் முன்னணி எதிர்கிறது. ஆனால் முழுத் தோட்டத் துறையையும் புதிய காலனித்துவமயமாக்கலின் ஓர் அங்கமாக வெளிநாட்டு, உள்நாட்டு கம்பனிகளிடம் திருப்பி ஒப்படைக்கும் தயாரிப்பாக இடம்பெற்றுள்ள இக்கைதுகளையும், தடுத்துவைத்தலையும் தோற்கடிப்பதும், தொழிற்சங்க இயக்கத்தினை காப்பாற்றுவதும் அவசியம்.

இத் தலைவர்களை விடுதலை செய்யக் கோரும் வர்க்க நடவடிக்கைகளை சகல தோட்டங்கள், பட்டினங்களிலும் ஆரம்பிக்குமாறு சமசமாஜ, கம்யூனிஸ், நவசமசமாஜ, இ.தொ.கா, ஜ.தொ.கா தலைமைகளை நெருக்குவது அவசியம். அப் பிரச்சார இயக்கத்தினை உடன் ஆரம்பியுங்கள். இப் பிரச்சாரத்தில் ஈடுபட்டுவரும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் சேருமாறு 'தொழிலாளர் பாதை' வேண்டுகின்றது.

**இந்தியா:**

## நரசிம்மராவ் அரசாங்கத்தின் 'புதிய பொருளாதாரக் கொள்கை'க்கு எதிராக 1 கோடி தொழிலாளர் வேலை நிறுத்தம்

நரசிம்மராவ் அரசாங்கத்தின் புதிய பொருளாதாரக் கொள்கைக்கு எதிராக இந்தியாவின் தொழிற்சங்கங்களின் கூட்டுக்கமிட்டி நவம்பர் 29ம் திகதி நடாத்திய பாரத் 'பந்த்'தில் 120 லட்சத்திற்கு மேலான தொழிலாளர்கள் பங்கு பற்றியுள்ளதாக கூட்டுக் கமிட்டியின் பேச்சாளரும் சி. ஐ. டி. யுவின் பொதுச் செயலாளருமான எம். கே. பாண்டே தெரிவித்துள்ளார்.

பந்த்தில் AITUC,CTUI, HMS, TUCC, UTUC, UTUC (LS) தொழிற்சங்கங்கள் கலந்துகொண்டதோடு அரசாங்க சார்பு INTU B.M.S N.L.O தொழிற்சங்கங்கள் வேலை நிறுத்தத்தில் பங்கு வகிக்காத போதும் அச்சங்கங்களின் அங்கத்தவர்கள் பலர் போராட்டத்தில் பங்குபற்றியுள்ளதாக பாண்டே தெரிவித்துள்ளார்.

உருக்குத் தொழிற்சாலையில் உள்ள தொழிலாளர்கள் இவ்வேலை நிறுத்தத்தில் முழுமையாக பங்கு பற்றியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. நூர்காபூர், பேன்பூர், நூர்கொலா, பாக்காரோ ஆலையில் உள்ள எல்லாத் தொழிலாளர்களும் வேலைநிறுத்தத்தில் பங்கு பற்றியுள்ளார்கள், பெரும்பான்மையான இந்திய நிலக்கரிச்சுரங்கதொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில்பங்கு பற்றியுள்ளார்கள். IQC,BHEL BEL,HMT, தொழிற்சங்கத்தை சேர்ந்த 20 லட்சம் பொது நிர்வாகத் துறையை சேர்ந்த தொழிலாளர்களும், பெருந் தொகையான வங்கி ஊழியர்களும் வேலைநிறுத்தத்தில் பங்கு பற்றியுள்ளார்கள்.

பந்த் ஆரம்பிப்பதற்கு முன்னோடியாகவே பல தொழிலாள போராளிகள், பொலிசாரினால் இந்தியா பூராவும் கைது செய்யப்பட்டிருந்தும் வேலை நிறுத்தம் வெற்றி அளித்துள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது. தமிழ்நாட்டில் நவம்பர் 28ம் திகதி 400க்கு மேற்பட்டோர் கைது செய்யப்பட்டிருந்தார்கள், செங்கல்பட்டில் 150 பேரும், சேலத்தில் 200 பேரும், சிவகங்கையில் 200 பேரும் கைதுசெய்யப்பட்டிருந்தார்கள்.



பேர்ளின் தொழிலாளர் மகாநாட்டிற்கு முன்னோடியாக இந்திய சோ. தொ. க. நடாத்திய மகாநாடு.

நான்காம் அகிலத்தின அனைத்துலகக் குழுவுடன் ஐக்கியம் கொண்ட சோசலிச தொழிலாளர் கழகம் நவ.29 திகதிய ஒரு நாள் பந்த்தில், 'தொழிலாளர் - விவசாயிகள் அரசாங்கம் அமைப்பதற்கான கால வரையறையற்ற பொது வேலை நிறுத்தமாக்க போராடு!' என்ற போராட்ட சுலோகத்துடன் தலையிட்டது.

இந்திய சோ. தொ. க. வின் 'தொழிலாளர் பாதை' 1991 நவம்பர் இதழின் முதல் பக்க தலைப்புச் செய்தி இவ்வேலை நிறுத்தம்பற்றி கூறுவதாவது: "நரசிம்மராவின் சிறுபான்மை அரசாங்கத்தைக் கவிழ விடாது ஒருபுறம் காப்பாற்றி கொண்டும், மறுபுறம் அதன் புதிய பொருளாதாரக் கொள்கைக்கு எதிராகத் திரண்டு எழுந்து வரும் தொழிலாளர்கள், விவசாயிகள், மற்றும் ஒடுக்கப்படும் மக்களின் போராட்டங்களைக், கட்டுப்படுத்தும் நோக்கத்துடன்- அதற்கு வழி காண - சி. பி. ஐ (எம்), சி.பி.ஐ. ஸ்டாலினிசக் கட்சிகள் நடத்த இருக்கும் நவம்பர் 29 "ஒருநாள் பாரத் பந்த்தை" தொழிலாளர் விவசாயி அரசாங்கத்தை அமைப்பதற்கு இட்டுச் செல்லும் காலவரையற்ற அகில இந்திய பொது வேலை நிறுத்தமாக மாற்றப் போராடுமாறு தொழிலாளர் விவசாயிகள் ஒடுக்கப்படும் மக்கள் இளைஞர்கள் மற்றும் புரட்சிகர புத்திஜீவிகளுக்கும் சோசலிச தொழிலாளர் கழகம் வேண்டுகோள் விடுக்கின்றது. அத்துடன் சிபிஐ (எம்) சி. பி. ஐ. ஸ்டாலிசக் கட்சித் தலைமைகளையும் சி. ஐ. டி. யு. ஏ. ஐ. டி. யு. சி ஸ்டாலினிசதொழிற்சங்கஅதிகாரத்துவத் தலைமைகளையும் முதலாளித்துவக் கட்சிகளுடனான உறவைத் துண்டிக்குமாறும், தொழிலாளர் நிர்ப்பந்திக்க வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுக்கின்றது"

நரசிம்மராவ் அரசாங்கத்தின் புதிய பொருளாதாரக் கொள்கையின் சதியினை விபரிக்கையில் அந்த அறிக்கை மேலும் கூறுவதாவது: "பணத்தின் மதிப்பைச் 20% குறைக்க ராவின் அரசாங்கம் அந்நிய முதலாளிகள் உள்நாட்டு முதலாளிகளுடன் சேர்ந்து கொண்டு, இந்தியத் தொழிலாள வர்க்கத்தை மேலும் ஒட்டச் சுரண்டுவதற்கு ஏதுவாக, வெளிநாட்டு வங்கிகள் மீதான கட்டுப்பாடுகளை நீக்கி உள்ளது. ஸ்டாலினிஸ்டுகள் ஆதரித்து தாங்கிப்பிடித்த ஜனதா அரசாங்கம் 41% வெளிநாட்டு மூலதனத்திற்கு கதவு திறந்த நிலையில் ராவின் அரசாங்கம் இன்னும் ஒருபடி போய் 51% கதவு திறந்துள்ளது. அந்நிய மூலதன வரவாலும் பன்னாட்டு இராட்சத கம்பனிகளின் நுழைவாலும் உள்நாட்டு தொழில் நிறுவனங்கள் போட்டியிட முடியாது நலிவடையும் அதே நேரத்தில் அரச நிறுவனங்களைத் தனியார்மயமாக்கல் முதலாளிகளின் கொள்ளைச் சுரண்டலுக்கு இந்தியத் தொழிலாள வர்க்கத்தை பலியிடப் போகின்றது.

"எதிர் காலத்தில் அரசின் பணிகள் சுகாதாரம் போன்ற சமூக நலத் துறைகளுடன் கட்டுப்படுத்தப்படும். வர்த்தகம், தொழில் போன்ற துறைகள் தனியார் துறைக்கென ஒதுக்கப்படும் என்று மத்திய நிதி அமைச்சர் மன்மோகன் சிங் கூறியுள்ளார்.

"அடிப்படை உணவுப் பொருட்களின் உற்பத்திக்கான உரமானியம் போன்றவற்றில் ஏற்படுத்திய வெட்டானது உணவுப் பொருட்களின் விலையைப் பன்மடங்கு உயர்த்தியுள்ளது. போக்குவரத்துக் கட்டணம் முதற்கொண்டு சரக்குக் கட்டணம்

(10-ம் பக்கம் பார்க்க)

www.padippakam.com

www.padippakam.com

# தோழர். கீர்த்தி பாலசூரியவின் மறைவின் நாலாண்டு நிறைவு: வரலாற்று அவசியத்தினால் வழிநடாத்தப்பட்ட வாழ்க்கை

## விஜே டயஸ்

'கம்கறு மாவத்த'வில் வெளியான கட்டுரையிலிருந்து ஆக்கப்பட்டது.

டிசம்பர் 18-ம் திகதியுடன் தோழர். கீர்த்தி பாலசூரிய மரணமாகி நான்கு ஆண்டுகள் பூர்த்தியாகின்றன. நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் ஒரு தலைவரும், புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் ஆரம்பம் தொடக்கம் தமது வாழ்க்கையின் இறுதி நாள் வரை அதன் பொதுச் செயலாளராகவும் விளங்கிய அவர் உலகத்தொழிலாள வர்க்கத்தின் முன்னணிப் பயணத்துக்கு ஆற்றிய பங்களிப்பு இன்று முன்னொருபோதும் இல்லாத விதத்தில் பெரிதும் மதிக்கப்படுகின்றது.

18 வயதுப் பள்ளி மாணவனாக விளங்கிய நாளில் இருந்து மார்க்சிச உலகக் கண்ணோட்டத்தினை அடிப்படையாகக் கொள்ள ஈர்க்கப்பட்ட அவர், தமது வாழ்நாள் முழுவதையும் மார்க்சிசத்துக்கு எதிரான சகல தாக்குதல்களில் இருந்தும் அதனைக் காப்பாற்றவும், அபிவிருத்தி செய்யவும் அர்ப்பணம் செய்தார்.

மார்க்சிசம் செல்லாக் காசாகிவிட்டது என்ற கோசத்தினை உலகம் பூராவும் கொண்டு செல்ல பிற்போக்கின் சகல ஏஜன்டுகளும் துடிக்கும் இவ்வேளையில் தோழர். கீர்த்தியின் நனவான முழு வாழ்க்கையும் அக்கூச்சலுக்கு எதிரான பலம்வாய்ந்த பதிலாகும். உலகத் தொழிலாள வர்க்கத்துக்கும் ஒடுக்கப்படும் மக்களுக்கும் விடிவுக்கான பாதையைக் காட்ட மார்க்சிசம் தவிர வேறு கோட்பாடு கிடையாது. மார்க்சிசத்தின் செல்லுபடியற்ற தன்மை பற்றிப் பிதற்றுவோர் உலகத் தொழிலாள வர்க்கத்தினதும் ஒடுக்கப்படும் மக்களதும் எதிர்காலம் என்ன என்ற பிரச்சினையை அடியோடு மறந்து போய்விடுகிறார்கள்.

மார்க்சிசத்தின் செல்லுபடியற்ற தன்மை பற்றிக் கூச்சல் போடுவோர் யார்? மார்க்சிசத்தைத் திரிபு செய்ய செயற்பட்ட ஏகாதிபத்திய ஏஜன்டுகளே. இன்று இவை உலக வர்க்கப் போராட்டத்தின் அபிவிருத்தி காரணமாகவங்குரோத்தடைந்துள்ளன: கவிழ்ந்து கொட்டியுள்ளன.

1950பதுகளின் கடைப்பகுதியிலும் 60பதுகளின் முற்பகுதியிலும் மாஓவாதம், காஸ்ட்ரோவாதம் அத்தோடு குளிர் யுத்த காலகட்டத்தில் மாஸ்கோ ஸ்டாலினிஸ்டுகள் செய்தவைதான் மார்க்சிசம் எனக்காட்ட எடுக்கப்பட்ட கடும்முயற்சிகளை உலகமார்க்சிச இயக்கமான நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு எதிர்த்துப் போராடியது. இப்போராட்டத்தில் அனைத்துலகக் குழு, 1914ல் இருந்து சமூக ஜனநாயகவாதிகளின் தேசிய வெறிக்கு எதிரான லெனினின்போராட்டத்தினையும், 'தனிநாட்டில் சோசலிசம்,பற்றிய தேசியவாதகோட்பாட்டின் அடிப்படையில் செயற்பட ஆரம்பித்த ஸ்டாலினிஸ்டுகளுக்கு எதிரான லியொன் ட்ரொட்ஸ்கியின் போராட்டத்தின் படிப்பினைகளையும் அடிப்படையாகக் கொண்டது. சமூக ஜனநாயகக் கட்சியின் மாபெரும் காட்டிக் கொடுப்பின் பின்னர் (1914) ருஷ்ய போல்ஷிவிக் கட்சி,சமூக ஜனநாயகக் கட்சி எனும் பேரைக் கொண்டிருப்பதைக் கூட லெனின் எதிர்த்தார். கட்சிப் பெயரைக் கம்யூனிஸ்ட் கட்சி என மாற்றிய லெனின் மூன்றாம் அகிலத்தினை கம்யூனிஸ்ட் அகிலம் என அழைத்தார். ட்ரொட்ஸ்கி மார்க்சிசக் கோட்பாடு, வேலைத்திட்டத்தின் அடிப்படையில் உலகக் கட்சியை நான்காம் அகிலம் எனப் பிரகடனம் செய்தார்.



தோழர் கீர்த்தி பாலசூரிய தோழர். ஸ்பைக்குடன் — அவுஸ்திரேலிய சோசலிச லேபர் லீக் கூட்டமொன்றில்,

1938ல் இடம்பெற்ற நான்காம் அகிலத்தின் ஸ்தாபக மகாநாடு நியாயமானதா என்ற சந்தேகத்தை எழுப்பிய ஐசாக் டியூச்சர் போன்ற ஐயவாதிகளுக்கு பதிலளிக்கையில் ட்ரொட்ஸ்கி, நான்காம் அகிலத்தினை பிரகடனம் செய்ய வேண்டிய அவசியமில்லை எனவும் ''அது வாழ்ந்து கொண்டுள்ளது: போராடுகின்றது'' எனப் பதிலளித்தார். அவ்வாறே நான்காம்அகிலத்தைக் கரைத்துவிடச் செயற்பட்ட சகல வகையான திரிபுவாதிகள், ஒடுகாலிகளுக்கு எதிராக அனைத்துலகக் குழு 1953ல் இருந்து 38 ஆண்டுகள் தொடர்ந்து போராடியது. அதன் மூலம் நான்காம் அகிலமாக நிற்பதற்கு அவசியமான சக்தியைப் பெற்றுள்ளது. இது வெறும் அகநிலை அறிக்கை அன்று. 1991 நவம்பர் 16-17ம் திகதிகளில் பேர்ளினில் நடைபெற்ற உலகத் தொழிலாளர் மகாநாடு இதை ருசுப்படுத்தியுள்ளது.

மார்க்சிசம் செத்துப்போய் விட்டது எனப் போதிக்கும் ஏகாதிபத்திய ஜெகோவாவின் சாட்சியாளர்களுக்கு இந்த அபிவிருத்தி ஒரு பலம் வாய்ந்த அடியல்லவா? மார்க்சிசம் செத்துப்போயிருந்தால் அது தனது ஆளுமையை உலகத் தொழிலாள வர்க்கத்தின் முன்னேற்றமான தட்டினரிடையே ஸ்தாபித்துக்கொண்டது எப்படி? ட்ரொட்ஸ்கிசத்துக்குத் தடை செய்யப்பட்ட பிராந்தியமாக விளங்கிய சோவியத் யூனியன்,கிழக்கு ஐரோப்பா உட்பட உலகின் சகல பகுதிகளிலும் உள்ள தொழிலாளர்களை ஈர்த்துக் கொண்டது எப்படி? தோழர். கீர்த்தி பாலசூரிய தமது முழு நனவான வாழ்க்கையையும் தொழிலாள வர்க்கத்தினுள் மார்க்சிசத்தினை அபிவிருத்தி செய்யத் தியாகம் செய்யக் காரணம் என்ன? மார்க்சிசத்தின் இறப்புப் பற்றிக் கூச்சல் போடுவோர் இக்கேள்விகளுக்குப் பதிலளிக்க முடியுமா?

### சமசமாஜ துரோகம்

1960பதுகளில் லங்கா சமசமாஜக் கட்சி பப்லோவாத ஐக்கிய செயலகத்தின் துரோகத்தின் பெறுபேறாக முதலாளித்துவ சிறீலங்கா சுதந்திரக் கட்சி கூட்டரசாங்கத்தில் நுழைந்தது. 21 கோரிக்கைகள் இயக்கத்தினை காட்டிக் கொடுத்த அவர்களின் வர்க்க உடனுழைப்புஅரசியல்தொழிலாள வர்க்கத்தின் முன்னேற்றமான தட்டினரிடையேயும், தீவிரவாத இளைஞர்களிடையேயும் பெரும் கொதிப்பை உண்டுபண்ணியது. இக்கட்டத்தில் மண்டேலின் பப்லோவாதிகள் செல்வாக்கிழந்த சமசமாஜக் கட்சியைக் கைவிட்டு, கூட்டரசாங்கத்தை எதிர்த்த புரட்சிகர சமசமாஜக் கட்சியை L. S. S. P (R) அணைத்துக் கொள்ள உடனடியாகச் செயற்பட்டனர். இதன் மூலம் சமசமாஜக் கட்சியின் துரோகத்தின் நிச அரசியல் அர்த்தம் தொழிலாள வர்க்கத்தின் எந்தவொரு தட்டினரிடையேயும் கலந்துரையாடப்படுவதைத் தடுப்பதே அவர்களின் நோக்கமாக இருந்தது.

இக்குழப்பநிலை அதிக காலம் செல்வதற்குள் புரட்சிகர சமசமாஜக் கட்சியின் தலைவர்களான எட்மண்ட் சமரக்கொடியும், மெரில் பெர்னாந்துவும் யூ. என். பி அரசாங்கத்துக்கு எதிராக 1964ல் கொணரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் யூ. என். பி. யுடன் சேர்ந்து வாக்களித்தனர். இதனால் கூட்டரசாங்கத்துக்கு ஆரம்பத்தில் எதிர்ப்புக்காட்டி வந்த பல தீவிரவாத இளைஞர் பிரிவினர் 1964ல் கூட்டரசாங்கத்துக்கு ஆதரவாக இடம்பெற்ற தொழிலாளர் ஆர்ப்பாட்ட ஊர்வலத்துடன் அடியுண்டு போயினர்.

தோழர். கீர்த்தி இக்குழப்பநிலை தொழிலாள வர்க்க இயக்கத்தினுள் குடிகொண்டிருந்த காலப்பகுதியிலேயே காலடி வைத்தார். எனினும் கீர்த்தி கூட்டரசாங்க அரசியலின் அர்த்தத்தினை ஆயும் முயற்சியை அவர் 21 கோரிக்கைகளின் காட்டிக் கொடுப்புடனோ அல்லது தீவிரவாத மாணவ, இளைஞர் போராட்டங்களுக்கு நேரிட்ட தலைவிதியுடனோ நிறுத்திக் கொள்ளவில்லை. உலகத் தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களின் வரலாற்று நலன்களுக்கு முரணான எந்த அரசியல் கோட்பாட்டினால் இத்துரோகம் ஏற்பட்டது என்பதைப் புரிந்து கொள்ள அவர் போராடினார். அந்த விதத்தில் அவர் மனித இனத்தின் உலக வரலாற்று நலன்களின் அடிப்படையிலேயே அரசியலில் ஈடுபட்டார் எனக் கூறலாம். அவரின் விசேட சிறப்பம்சம் அதுவே.

### தேசியவாத தீவிரவாத எதிர்ப்பு

சமசமாஜக் கட்சியின் கூட்டரசாங்கத்துக்கு எதிராக புரட்சிகர சமசமாஜக் கட்சியின்பால் ஈர்க்கப்பட்ட இளைஞர்கள் புரட்சிகர மார்க்சிசம் பக்கம் வழிப்படுத்தப்படுவதைத் தடுக்கச் செயற்பட்ட தேசியவாத, தீவிரவாத அரசியலுக்கு எதிரான ஈவிரக்கமற்ற போராட்டத்தில் தோழர்.கீர்த்தி ஈடுபட நேரிட்டது. இப்போராட்டத்தில் இந்திய போல்ஷிவிக் - லெனினிஸ்ட் கட்சி முன்னணி உறுப்பினராக விளங்கிய ட்ரொட்ஸ்கிஸ்டானதோழர்.வில்பிரட் பெரெய்ராவின் (ஸ்பைக்) ஆதரவு கீர்த்திக்கு கிடைத்தது. இலங்கையினுள் நான்காம் அகிலத்தின் தொடர்ச்சி பற்றிக் குறிப்பிடும் போது இது மிகவும் வரலாற்று முக்கியத்துவம் மிக்க ஒரு உறவாகும். இப்போராட்டத்தின் மூலம் ட்ரொட்ஸ்கிசத்தினை மீண்டும் ஒரு தடவை தேசியவாத, தீவிரவாத சேற்றினுள் புதைக்க எடுக்கப்பட்ட முயற்சிக்கு எதிரான அரசியல் பலம் கிடைத்தது. இதன் மூலம் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தினை நிறுவுவதற்கான கோட்பாட்டு, அரசியல் அத்திவாரம் இடப்பட்டது.

மண்டேலின் அரசியல் 'லைசென்சு' பெற்ற பேர் போன பப்லோவாதியான வி. காராளசிங்கம், புரட்சிகர தொழிலாளர் வர்க்கப் பாதையைத் தேடிக் கொண்டிருந்த இளைஞர்களை குழப்பியடிப்பதில் ஈடுபட்டிருந்தார். இந்த இளைஞர் பகுதியினரைக் கொண்ட ''சக்தி'' குழுவை தொழிலாள வர்க்க இயக்கத்திலிருந்து அந்நியப்படுத்தி அநாதைகளாக்கும் முயற்சியில் அவர் இறங்கியிருந்தார். இக்கட்டத்தில் காராளசிங்கம் தேசியவாத இளைஞர்களின் புரட்சிகரத் தலைமை என்ற சூத்திரத்தினை முன்வைத்திருந்தார். இம்முன்னோக்கு 1960பதுகளின் கடைப்பகுதியில் ஐரோப்பா பூராவும் வெடித்த இளைஞர், மாணவர் போராட்டங்களுடன் மண்டேல் தயார் செய்த 'மாணவர் சக்தி,' 'இளைஞர் சக்தி' பற்றிய சூத்திரமாகும்.

1960பதுகளின் கடைப்பகுதியில் வி. காராளசிங்கம் மண்டேலின் முன்னுரையுடன் வெளியிட்ட 'கூட்டரசாங்க அரசியல்' என்ற நூலை நவ சமசமாஜ துரோகிகள் தமது

(9-ம் பக்கம் பார்க்க)

படிப்பகம்

# சோசலிசப் புரட்சியின் உலகக்

**நவம்பர் 16—17ம் திகதிகளில் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு பேர்ளின் நகரில் நடாத்திய உலக தொழிலாளர் மகாநாட்டில் அமெரிக்க வேர்க்கர்ஸ் லீக்கின் தேசிய செயலாளர் தோழர். டேவிட் நோர்த் சமர்ப்பித்த அரசியல் அறிக்கை.**



தோழர். டேவிட் நோர்த் மகாநாட்டில் உரை நிகழ்த்துகின்றார்.

பாரசீக வளைகுடா யுத்தத்தின் பின்னர் அனைத்துலகக்குழு இந்த மகாநாட்டினை நடாத்தத் தீர்மானித்ததில் இருந்து 8 மாதங்கள் கழிந்துவிட்டன. இந்த மகாநாட்டினைத் தயாரிப்பதற்கு எமது பகுதிகள் உலகம் பூராவும் நடாத்திய செயல் முறைக்கு அவசியமான அரசியல் தகவமைவினைவழங்கியவிஞ்ஞாபனத்தினை அது பிரசுரித்து 6 மாதங்களுக்கு மேலாகிவிட்டது.

இந்தத் தயாரிப்பு வேலைகள் விஞ்ஞாபனத்தினை 18 மொழிகளில் பிரசுரித்தமை, ஒருதொகைமுன்னோடி மகாநாடுகள், கூட்டங்களை நடாத்தியமையை உள்ளடக்கிக் கொண்டுள்ளன. அவற்றில் இவ்விஞ்ஞாபனத்தின் அரசியல் போக்கு கலந்துரையாடப்பட்டு நிறைவேற்றப்பட்டது. இம்மகாநாடு அனைத்துலகக் குழுவினால் இதுகாறும் நடாத்தப்பட்ட மிகவும் உத்சாகம்மிக்கதும், வெற்றிகரமானதுமான அனைத்துலகப் பிரச்சார இயக்கத்தின் பெறுபேறாகும் என்பதில் பிரச்சினைக்கே இடமில்லை.

ஆனால் இம்மகாநாடுவெறுமனே கடந்த மார்ச்சில் இடம்பெற்ற 11வது தொடர் கூட்டத்தில் ஆரம்பமான வேலையின் பெறுபேறு அன்று. எம்மை பேர்ளினுக்குக் கொணர்ந்துள்ள பயணம், அதற்கு நீண்டகாலத்திற்கு முன்பே ஆரம்பமாகிவிட்டது. இதை ஆரம்பித்தவர்கள் கற்பனை செய்து பார்த்திருக்கக் கூடியதற்கும் வெகு தூரத்துக்கு அப்பால் இது இட்டுச் சென்றுள்ளது. நாம் இப்போது அந்த மைற்கல்லைவெற்றிகொண்டு இங்கு வந்துள்ள வேளையில் இம்மகாநட்டின் முக்கியத்துவத்தினை நான்காம் அகிலத்தின் முழு வரலாற்றினதும் அடிப்படையில் மட்டுமே புரிந்து கொள்ள முடியும்.

இம்மகாநாடு, நான்காம் அகிலத்திற்கும், தொழிலாள வர்க்கத்திற்கும் ஒரு வரலாற்று வெற்றி. பல தசாப்தங்களின் பின்னர் முதற்தடவையாகட்ரொட்ஸ்கிச — அதாவது புரட்சிகர சோசலிச வேலைத்திட்டத்தின் அடிப்படையில் உலகின் அநேக பாகங்களைச் சேர்ந்த தொழிலாளர் வர்க்கத்தினைப் பிரதிநிதித்துவம் செய்யும் பேராளர்களைக் கொண்ட நான்காம்அகிலத்தின்அனைத்துலக மகாநாட்டினை அணிதிரட்டுவதும், கூட்டுவதும் சாத்தியமாகியுள்ளது.

இது நான்காம் அகிலத்தினதும், அனைத்துலகத் தொழிலாள வர்க்கத்தினதும் உலக சோசலிசத்துக்கான போராட்டத்தினதும் மிகப் பயங்கரமான எதிரிகள் — அதாவது சோவியத் யூனியன் ஸ்டாலினிச ஆட்சியும், உலகம்பூராவுமுள்ள அதன் அரசியல் ஏஜன்டுகளும் — ஒரு பேரழிவுமிக்க அரசியல் வீழ்ச்சிக்குள்ளாகியுள்ள நிலையிலேயே கூட்டப்பட்டுள்ளது. ஒரு அரைநூற்றாண்டுக்கும் முன்னரே ஸ்டாலினிசத்தின் தலைவிதியைப் பற்றி ட்ரொட்ஸ்கி தீர்க்கதரிசனமாகக் குறிப்பிட்டவை- செல்வாக்கிழந்துபோன அதிகாரத்துவ இயந்திரத்தில் ஒரு கல்லின் மேல் மறு கல்லு எஞ்சியிராது—முழுமனே ருசுவாகியுள்ளது.

அனைத்துலகத் தொழிலாளர் இயக்கத்தின் வரலாற்றில் பேர்ளின் கொண்டுள்ள இடத்தைக் கணக்கில் கொள்ளும் போது புரட்சிகர சோசலிஸ்டுகளின் ஒரு அணிதிரள்வுக்கு அது சகலவிதத்திலும் பொருத்தமான ஒரு இடமாகும், ஆனால் இம்மகாநர்ட்டை நடாத்தும் இடம் அரசியல் சக்திகளின் உறவின் பாரிய மாற்றத்தின் ஒரு பலம்வாய்ந்த அடையாளமாகும். இரண்டு வருடத்துக்குச் சற்று முன்னதாக இங்கு ஒரு ட்ரொட்ஸ்கிஸ்ட் கைது செய்யப்படாமல் பகிரங்கமாக ஒரு அரசியல் வார்த்தையைத் தன்னும் உதிர்க்க வாய்ப்பிருக்கவில்லை. தோழர். ஓஸ்கார் ஹிப்பி கிழக்கு ஜேர்மன் ஸ்டாலினிஸ்டுகளின் சிறைகளில் 8 ஆண்டுகள் வாடினார் என்பதை யாரால் மறக்க முடியும்?

ஆனால் இன்று நான்காம் அகிலம், ஸ்டாலினிச ஆட்சியின் மாஜி தலைநகரும்—இன்னும் சொல்வதானால் அதன் அரசியல் தலைமைக்காரியாலயத்தில் கூடுகின்றது.

## நான்காம் அகிலத்தின் ஸ்தாபக மகாநாடு

இந்த மகாநாட்டில் கலந்து கொள்ளத் தோழர்கள் உலகம் பூராவும் இருந்து வந்துள்ளார்கள் என்ற உண்மையைக் கணக்கில் கொள்ளும் போது, இரண்டுநாளில் எமது நிகழ்ச்சிநிரலை நாம் பூர்த்தி செய்ய நேரிட்டுள்ளதையிட்டு வருந்துகின்றோம். ஆனால் 1938 செப்டம்பரில் நான்காம் அகிலத்தினை ஸ்தாபித்தவர்கள் தமது வேலையை ஒரே நாளில் பூர்த்தி செய்ய நெருக்கப்பட்டதை நாம் நினைவுகூர்வோமாக. எத்தகைய கஷ்டமான அரசியல் நிலைமைகளின் கீழ் அவர்கள் கூடினார்கள் என்பதை மகாநாட்டிற்கு முன்னைய 15 மாதங்களுள் ஸ்டாலினிச ஜீ. பீ. யூ. ஏஜன்டுகளால் படுகொலை செய்யப்பட்ட லியொன் செடோவ், ஈர்வின் வூல்வ், ருடோல்வ் கிளைமென்ட்டினை மகாநாட்டின் கௌரவத் தலைவர்களாக பேராளர்கள் தெரிவு செய்தனர் என்ற துக்ககரமான வெளிப்பாடு காட்டுகின்றது,

ஆரம்ப அறிக்கையில் பீரி நெவில் கூறியதாவது:

''கிளமென்டின் துன்பகரமான மரணம் காரணமாக வழக்காறான அறிக்கை இல்லை. கிளமென்ட் விரிவான எழுத்து வடிவிலான ஒரு அறிக்கையைத் தயாரித்து வந்தார். அது விநியோகிக்கப் படவிருந்தது ஆனால் ஏனைய பத்திரங்களுடன் இது காணாமல் போய்விட்டது.''

ஸ்தாபக மகாநாடு நடைபெற்ற நிலைமைகள், ஐரோப்பியத் தொழிலாள வர்க்கத்தின் தோல்வியினால் ஆளுமைக்குள்ளான ஒரு புறநிலை நிலைமையின் கசப்பான விளைவாகும். ஸ்தாபக மகாநாட்டின் ஓராண்டின் பின்னர் இரண்டாம் உலக யுத்தம் வெடித்தது. 1940 ஆகஸ்டில் ட்ரொட்ஸ்கி ஒரு ஜீ. பீ. யூ. ஏஜன்டினால் படுகொலை செய்யப்பட்டார். ஐரோப்பா பூராவும் நான்காம் அகிலத்தின் காரியாளர்கள் சட்டவிரோத நிலைமைக்குள் தள்ளப்பட்டனர்; பாசிஸ்டுகள், ஸ்டாலினிஸ்டுகள் அத்தோடு நாம் மறந்துவிட முடியாத 'ஜனநாயக' ஏகாதிபத்தியவாதிகளால் ஒரேயடியாக வேட்டையாடப்பட்டனர். அமெரிக்காவில் கூட ட்ரொட்ஸ்கிச இயக்கத்தின் தலைவர்கள் தேசத் துரோகக் குற்றச்சாட்டின் பேரில் குற்றவாளிகளாகக் காணப்பட்டுச் சிறையில் தள்ளப்பட்டனர். தோழர் பில் பிரெஸ்ட் சோசலிசத் தொழிலாளர் கட்சியின் ஒரு இளம் அங்கத்தவராக அந்த வழக்கில் கலந்து கொண்டார்.

இருப்பினும் துன்புறுத்தல்களுக்கிடையேயும் ட்ரொட்ஸ்கியினால் இடப்பட்ட நான்காம் அகிலத்தின் வேலைத்திட்ட அத்திவாரம், யுத்தம் தோற்றுவித்த பிரமாண்டமான சவால்களுக்கு நின்று பிடித்ததோடு, உலகக் கட்சியின் அரசியல் ஓரினத்தன்மை பேணப்பட்டது. இரண்டாம் உலக யுத்தத்தின் முடிவில் நான்காம் அகிலத்தை ஒருஒன்றிணைந்த உலக இயக்கமாக மீளநிர்மாணித்துக் கொள்ள முடிந்தது. அது அதன் முதலாம், இரண்டாம் உலக காங்கிரசுகளை 1946ம் 1948ம் ஆண்டுகளில் நடாத்தியது. ஆனால் அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கும் கிரேம்ளினுக்கும் இடையேயான அரசியல் தீர்வின் அடிப்படையில் உலக முதலாளித்துவத்தினை மறுஸ்திரப்பாட்டுக்குக் கொணர்வதன் பிரதிபலிப்பாகத் தோன்றிய ஒரு சந்தர்ப்பவாதப் போக்கினால் அன்று பாசிச, ஸ்டாலினிச, 'ஜனநாயக' ஏகாதிபத்திய பொலிசினால் சாதிக்க முடியாது போனதை — நான்காம் அகிலத்தை நாசமாக்குவதை — பெரிதும் சாதிக்க முடிந்தது.

டிட்டோவின் கீழ் யூகோசலவியாவின் அபிவிருத்திகளில் இருந்தும், கிழக்கு ஐரோப்பாவில் சொத்து உறவுகளின் தேசியமயமாக்கலின் மூலமும் மைக்கேல் பப்லோவும் அவரது அன்றைய நெருங்கிய சகாவான ஏர்ணஸ்ட் மண்டேலும் ட்ரொட்ஸ்கி புரிந்து கொள்ளத் தவறிய ஒரு புரட்சிகர உள்வல்லமையை ஸ்டாலினிசம் கொண்டுள்ளதுஎன்ற முடிவுக்கு வந்தனர். ட்ரொட்ஸ்கி வலியுறுத்தியது போன்று ஸ்டாலினிச அதிகாரத்துவங்களும் அவற்றின் கூட்டுக் கட்சிகளும் தொழிலாளர் இயக்கத்தில் உள்ள ஏகாதிபத்தியத்தின் முக்கிய ஏஜன்சியாகவன்றி, சோசலிசத்தின் வெற்றிக்கு அவசியமான உத்வேகத்தினை வழங்கும் வண்ணம் தள்ளப்பட்டுள்ளன என்றனர்.



ஏகாதிபத்திய யுத்தத்துக்கும்

## பப்லோ - மண்டேலின் திரிபுவாதத் திட்டம்

பப்லோவும், மண்டேலும் தெளிவுபடுத்திய திட்டத்தின்படி சோசலிசம் இறுதியில் ஒரு புறத்தில் ஏகாதிபத்தியத்துக்கும் மறுபுறத்தில் சோவியத் யூனியன், கிழக்கு ஐரோப்பிய அரசுகளுக்கும் இடையேயான ஒரு பிரளய யுத்தத்தின் உப - விளைவாகச் சாத்தியமாக வேண்டியுள்ளது. யுத்தத்தின் தாக்கம் காரணமாக ஸ்டாலினிச அதிகாரத்துவங்கள் வெகுஜனங்களை முதலாளித்துவத்திற்கு எதிரான ஒரு உலகளாவிய புரட்சிகரப் போராட்டத்திற்கு இட்டுச் செல்ல நெருக்கப்படுவர் என அவர்கள் கூறினர். இப்போக்கானது பல நூற்றாண்டு காலத்தில் சோசலிச சமுதாயமாக அபிவிருத்திகாணும் அதிகாரத்துவசீர்குலைந்த தொழிலாளர் அரசுகளை சிருஷ்டிப்பதுடன் உச்சக் கட்டத்தை அடையும் என பப்லோவும் மண்டேலும் வலியுறுத்தினர்.

பப்லோவும் மண்டேலும் 'புறநிலை சமூக யதார்த்தம் முக்கியமாக முதலாளித்துவ ஆட்சியையும் ஸ்டாலினிச உலகினையும் உள்ளடக்கியுள்ளது' என்ற விநோதமானதும், அவமானம் நிறைந்ததுமான முடிவுக்கு வந்தனர். ஆதலால் பாட்டாளி வர்க்கத்தின் வர்க்கப் போராட்டத்தினை இனியும் வரலாற்று முன்னேற்றத்தின் இயக்க சக்தியாகக் கொள்ள முடியாது என்று

www.padippakam.com

# ...ட்சியாக நான்காம் அகிலத்தை கட்டி எழுப்பு!



துவத்துக்கும் எதிரான உலக தொழிலாளர் மகாநாட்டு மேடை

தொழிலாள
பு வரலாற்
னை நிரா
ரின் நடை
க்கரீதியான
பப்லோவும்
ன் சுயாதீன
அபிவிருத்தி
தினை நிரா
களின் சந்
ன்நோக்கின்
அவர்கள்
உபாய
நான்காம்
கரைத்து
சென்றது.
சமூக
ளிடமிருந்து
வர்க்கத்தின்
ன்காம் அகி
து இனியும்
டிய அல்லது
ண்டிய பணி
ட்டது.

லாக பப்
டேலும்
த்தின் கிளை
லிசக் கட்சி
தொழிலாள
ஆதிக்கம்
எந்தவொரு
த்தினுள்ளும்
டியும் அவ
ரி அபிவிரு
க்கும் படியும்

கிலத்தினுள்
மையின்மைக்
கள் வளர்ச்சி
தன் காரண
களின் முன்
பெற்ற மூன்
காங்கிரசில்
லின் திரிபு
டம் சவாலி
இன்றுவரை
ஒரு ஒன்று
இயக்கமாக
அனைத்து
காங்கிரசே.

திரிபுவாத
பாரதூர

மான தாக்கங்கள் உடனடியாகப் புரிந்து கொள்ளப்படாத நிலையில் தமது கலைப்புவாதப் போக்கினை நடைமுறைப்படுத்த பப்லோவும் மண்டேலும் எடுத்த முயற்சி ஒரு அரசியல் வெடிப்புக்கு இட்டுச் சென்றது. பப்லோ போக்கின் ஆதரவாளர்கள் தமது பகுதிகளைபரந்த ஸ்டாலினிச, சமூக ஜனநாயக அமைப்புக்களுள் கரைத்து விட முயன்றதால் 1953இள வேனிற் காலத்தில் நான்காம் அகிலம் பூராவும் ஒரு நிஜ உள்நாட்டு யுத்தம் இடம் பெற்றது. அன்று உலக ட்ரொட்ஸ்கிச இயக்கத்தில் பெரிதும் அனுபவமும், மதிப்பும் கொண்ட புள்ளியாக விளங்கிய ஜேம்ஸ். பீ. கனனின் தலையீட்டினால் மட்டுமே பப்லோ-மண்டேல் கன்னைக்கு உறுதியான எதிர்ப்பினை மரபுவழி ட்ரொட்ஸ்கிஸ்டுகள் காட்டுவது சாத்தியமாகியது.

## கனனின் 1953 ‘பகிரங்கக் கடிதம்’

உண்மையில் இன்று - நவம்பர் பதினாறு அனைத்துலகக் குழுவின் உதயத்திற்கு இட்டு சென்ற சம்பவத்தின் 38வது ஆண்டு நிறைவினைக் குறிக்கிறது. ‘மிலிடன்ட்’ பத்திரிகையின் 1953 நவம்பர் 16 பதிப்பு உலகம் பூராவுமுள்ள ட்ரொஸ்கிஸ்டுகளுக்கு ஒரு கடிதத்தைப் பிரசுரித்தது. அதில் அவர்கள் பப்லோ, மண்டேல் தலைமையிலான கன்னை “பல்வேறு நாடுகளிலும் வரலாற்று ரீதியில் நிர்மாணிக்கப்பட்ட ட்ரொட்ஸ்கிசக் காரியாளர்களை உடைக்கவும், பிளக்கவும், சிதைக்கவும், நனவாகவும், வேண்டுமென்றும் இன்று தொழிற்பட்டு வருகின்றது” என எச்சரிக்கை செய்தது.

அந்தக் கடிதம் மேலும் குறிப்பிட்டதாவது: “பப்லோ திரிபுவாதத்துக்கும் மரபுவழி ட்ரொட்ஸ்கிஸ்டுகளுக்கும் இடையேயான பிளவுப் போக்குகள் அவ்வளவு ஆழமானதாக இருந்ததால் அரசியல் ரீதியில் அல்லது அமைப்பு ரீதியில் சமரசம் சாத்தியமாக இருக்கவில்லை. பப்லோ கன்னை அவர்கள் சகல மரபுவழிட்ரொட்ஸ்கிஸ்டுகளையும் நான்காம் அகிலத்திலிருந்து வெளியே தள்ள அல்லது வாய்ப்பூட்டும் கைவிலங்கும் மாட்ட சபதம் பூண்டுள்ளதை வெளிக்காட்டியது.”

ஒரு கிழமையின் பின்னர் 1953 நவம்பர் 23ல் பாரிசில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் பிரித்தானிய; பிரான்ஸ் பகுதிகளின் தலைவர்கள் உட்பட மரபுவழி ட்ரொட்ஸ்கிஸ்டுகள் பப்லோவாதிகளின் கட்டுப்பாட்டுக்குட்பட்ட பழம் அனைத்துலகச் செயலகத்தின் அதிகாரத்தை முறைப்படி நிராகரித்ததோடு அனைத்துலகக் குழுவை நான்காம் அகிலத்தின் ஒரு புதிய அரசியல் மையமாக ஸ்தாபிதம் செய்தனர்.

பிளவின் பல மாதங்களின் பின்னர் கனன் எழுதிய கடிதத்தில் பப்லோ, மண்டேலுடனான பிளவின் அடிப்படையான முக்கிய அரசியல் கோட்பாட்டு விவகாரங்களை அவர் விளக்கினார். இக்கடிதத்தில் அவர் அன்று ஜெர்மெயின் என்ற பெயரால் அழைக்கப்பட்ட மண்டேலின் நிலைப்பாடுகளைச் சிறப்பாக ஆய்வு செய்தார். இங்கு மேற்கோள் காட்டுவது பெறுமதி வாய்ந்தது. கனன் எழுதியதாவது:-

“எமது இலக்கு ஜெர்மெயினின் இலக்கில் இருந்து அடிப்படையில் வேறுபட்டது. இறுதி ஆய்வில் அது புரட்சிகர முன்னணிப் படையணியின் பாத்திரத்திற்கும் தொழிலாளர் இயக்கத்தில் உள்ள ஏனைய போக்குக்களுடனான அதன் உறவும் பற்றிய ஒரு வேறுபட்ட கோட்பாட்டை நோக்கிச் செல்கிறது. இப்பிரச்சினையில் தான் மூலச்சிறப்பு வாய்ந்தவர் என ஜெர்மெயின் நினைக்கிறார். இதைப் பற்றி அவர் ‘குவாட்டரியம் இன்டர் நஷனலில்’ ஒரு கட்டுரை கூட எழுதினார். ஆனால் நடைமுறையில் அவர் கோட்பாட்டைச் சமரசம் காண வைக்கிறார். நனவான முன்னணிப் படையணியின் கட்சி, புரட்சிகரப் போராட்டத்தின் தலைவன் என்ற முறையில் அதன் பாத்திரம் பற்றிய லெனின் - ட்ரொட்ஸ்கி கோட்பாட்டின் நிபந்தனையற்ற ஆதரவாளர்கள் நாம் மட்டுமே. இன்றைய சகாப்தத்தில் இக்கோட்பாடு சூடேறிய நிசத்தன்மையைப் பெறுவதோடு ஏனைய சகலதையும் தாண்டிச் செல்கின்றது.

“தலைமைப் பிரச்சினை மிகவும் நீண்டசெயற்பாடான வர்க்கப் போராட்டத்தின் தன்னியல்பான வெளிப்பாடுகளுக்கோ அல்லது முதலாளித்துவம் சிறப்பாகப் பலவீனமான இந்த அல்லது அந்த நாட்டில் ஆட்சியைக் கைப்பற்றிக் கொள்வதற்கோ கட்டுப்பட்டுவிடவில்லை. இது அனைத்துலகப் புரட்சியின் அபிவிருத்தியையும் சமூகத்தின் சோசலிச மாற்றத்தையும் பற்றிய ஒரு பிரச்சினையாகும். இவை தன்பாட்டில் இடம்பெறும் என்பதை ஒப்புக் கொள்வதானது மார்க்சிசத்தினை அடியோடு கைவிடுவதாகும். இல்லை, அது ஒரு நனவான செயல்பாடாகவே இருக்க முடியும். ஆதலால் அதற்கு வரலாற்று போக்கின் நனவான மூலகங்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் மார்க்சிசக் கட்சியின் தலைமை இன்றியமையாது வேண்டப்படுகின்றது. வேறு எந்தவொரு கட்சியும் அதைச் செய்யமாட்டா. தொழிலாளர் இயக்கத்தில் உள்ள எந்தவொரு போக்கும் ஒரு திருப்தியான பதிலீடாக அங்கீகரிக்கப்பட முடியாது. அதன் காரணமாக ஏனைய சகல கட்சிகள், போக்குகள் பற்றிய எமது நிலைப்பாடு சமரசம் காண முடியாத பகைமையானது.”

கனன் மேலும் எழுதியதாவது: “நான்காம் அகிலம் இன்று ஓர் காரியாளர் அமைப்பாகும். அதன் தாக்குதல் பலமும் வரலாற்று நியாயப்படுத்தலும் அதன் வேலைத்திட்டத்திலிருந்தும் அதன் தத்துவார்த்த ஒரினத்தன்மையில் இருந்துமேபெறப்படுகின்றது. பப்லோவாதம் ஊடுருவக்கூடியதும் செல்வாக்குச் செலுத்தக் கூடியதுமான ஒரு வெகுஜன இயக்கமாக அன்றி நான்காம் அகிலத்தினை செல்வாக்கிழக்கச் செய்து, அதன் காரியாளர்களை சீர்குலைக்கும் ஒரு திரிபுவாதப்போக்காகவே உள்ளது. புரட்சிகரப் பணி, பெரிதும் ஒரு சிறுபான்மைப் போக்காக இருந்துவரும் இப்போக்குடன் ‘கூடி வாழ்வதன்றி’ இதைச் சிதறடிப்பதேயாகும்.”

கனனினால் எழுதப்பட்ட சிறந்த வார்த்தைகளுள் இவையும் அடங்கும் என என்னால் கூறமுடியும்.

கனனும் சோசலிசத் தொழிலாளர் கட்சியும் நான்காம் அகிலத்தினுள் பப்லோ—மண்டேல் போக்குக்குத் துரிதமான தோல்வியை எதிர்பார்த்தனர். 1953 நவம்பரில் சந்தர்ப்பவாதிகளுக்கும் மரபுவழி போக்கினருக்கும் இடையே ஏற்பட்ட முறைப்படியான பிளவு, நான்காம் அகிலத்தினுள் நீண்டதொரு போராட்டத்தின் ஆரம்பத்தை மட்டுமே குறித்தது என்பதை அவர்களால் முன்னோடியாக கண்டிருக்க முடியாது. ஒரு சில வருடங்களில் சோ.தொ.க (S·W.P) பப்லோ - மண்டேல் போக்குக்கு அடிபணிந்து போகும் என அவர்கள் கற்பனை செய்யவில்லை.

## யுத்தத்தின் பின்னைய செழிப்பு

நான்காம் அகிலத்தினுள் இருந்த மிகவும் அனுபவம் வாய்ந்த பல காரியாளர்களை கூட வெற்றிகொண்ட சந்தர்ப்பவாதத்தின் பெருக்கம், வெறுமனே தனிப்பட்டவர்களின் பலவீனங்களையன்றி உலக அரசியல் நிலைமையில் ஆழமாக வேரோடியிருந்தஒரு புறநிலைப் போக்கினை வெளிக்காட்டியது. பப்லோவாதத்தின் அடிப்படையான பிற்போக்குப் பண்பு ஒவ்வொரு ஆண்டும் கடந்த செல்லச் செல்ல மேலும் மேலும் அம்பலமாகும் நிலையிலும் கூட அதன் செல்வாக்கினைப் பலப்படுத்தும் புறநிலைச் சூழ்நிலையை யுத்தத்தின் பின்னைய செழிப்பும் ஏகாதிபத்தியத்துக்கும் கிரேம்ளின் அதிகாரத்துவத்துக்கும் இடையேயான உலக அரசியல் ஏற்பாடுகளும் வழங்கின.

அமெரிக்காவில் நிலவிய பாதகமான நிலைமையின் தாக்கங்களின் கீழ் தடுமாறிக் கொண்டிருந்த சோசலிசத் தொழிலாளர் கட்சி 1957 அளவில் பப்லோவாதப் போக்குக்கு மேலும் மேலும் அப்பட்டமாக அடிபணிந்து போகத் தொடங்கியது. அதன்படி 1953ல் பப்லோவிடம் திரும்பிச் செல்வதற்கில்லை எனச் சொல்லியிருந்த கனன், பப்லோவாத அனைத்துலகச் செயலகத்துடன் ஐக்கியத்துக்கான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பது நல்லயோசனை எனக் கூறும் கடிதம் ஒன்றை லங்கா சமசமாஜக் கட்சியின் லெஸ்லி குணவர்தனவுக்கு எழுதினார்.

1959ல் சோசலிச லேபர் லீக்கினை அமைத்த பிரித்தானிய ட்ரொட்ஸ்கிஸ்டுகள் பப்லோவிடம் குழிபறித்து போவதை எதிர்த்தனர். சோசலிசத் தொழிலாளர் கட்சி, இந்தப் பேரழிவுப் பாதையில் இறங்குவதைத் தடைசெய்ய அவர்கள் முயன்றனர். 30 ஆண்டுகளுக்குமுன்னர்-1961ல் சோசலிச லேபர் லீக் “ட்ரொட்ஸ்கிசத்தினுள் பப்லோவாத திரிபுவாதத்தினை ஒரு போக்காகக் கணித்த காலப்பகுதியினை ஒரு முடிவுக்குக்கொணரும் காலம் வந்துவிட்டது” என்பதை அங்கீகரிக்கும்படி சோசலிசத் தொழிலாளர் கட்சியை வேண்டியது. அந்த ஆலோசனை சரியானது என்பதில் சந்தேகத்திற்கிடமில்லை. அவர்கள் ஹங்கேரியன் புரட்சியில் பப்லோவாதிகள் ஸ்டாலினிஸ்டுகளுக்கு திரைமறைவு வழங்கி வகித்த பாத்திரத்தினையும் காலனித்துவ மக்களின் மாபெரும் போராட்டங்களில் பிற்போக்குத் தேசிய முதலாளி வர்க்கத்தின் அவமானமிக்க பரிந்துரையாளர்களாக முன்னொருபோதும் இல்லாத விதத்தில பப்லோவாதிகள் தோன்றியதிலிருந்துதிரட்டிய அனுபவத்தினையும் அடிப்

(6-ம் பக்கம் பார்க்க)



லெனின்



லக்ஸ்சம்பேர்க்



ட்ரொட்ஸ்கி

படிப்பகம்

# சோசலிசப் புரட்சியின் உலக கட்சியாக...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

படையாகக் கொண்டிருந்தனர்.

பப்லோவாதிகளின் கொலைகாரக் கொள்கைகளுக்கிடையேயும் சோசலிசத் தொழிலாளர் கட்சி 1963 ஜூனில் மறு ஐக்கியத்துக்குச் செல்வதை நிறுத்த முடியாது போனதோடு அது ஐக்கிய செயலகத்தை நிறுவியது. இந்த மறு ஐக்கியத்தின் துன்பகரமான அரசியல் விளைவுகள் தோன்ற அதிக காலம் செல்லவில்லை. சரியாக ஒரு வருடத்தின் பின்னர் இலங்கையின் பப்லோவாத அமைப்பான லங்கா சமசமாஜக் கட்சி திருமதி பண்டாரநாயக்காவின் முதலாளித்துவ அரசாங்கத்தினுள் நுழைந்தது.

அக்காலப் பகுதியை மீளாய்வு செய்கையில் சந்தர்ப்பவாதத்துக்கும் புரட்சிகர மார்க்சிசத்துக்கும் இடையேயான சக்திகளின் உறவுகள் பின்னையதற்குப் பாதகமாக இருந்தமை இன்று தெளிவாகியுள்ளது. இறுதி ஆய்வுகளில் பப்லோவாதிகளின் செல்வாக்கு, யுத்தத்தின் பின்னைய கால ஒழுங்குமுறையின் விசித்திரமான குணநலன்கள் காரணமாகச் சிறப்பாக பின்தங்கிய நாடுகளில் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போலித் தீவிரவாத தோரணையில் ஸ்டாலினிச அமைப்புக்களுக்கும்குட்டி முதலாளித்துவ சக்திகளுக்கும் மக்கள் மேல் இன்னமும் இருந்துவந்த எஞ்சிய அதிகாரத்தினை அடிப்படையாகக் கொண்டிருந்தது. பப்லோவாதிகள் தொழிலாள வர்க்கத்தினுள் ஒரு சுயாதீனமான புரட்சிகரத் தலைமையின் அபிவிருத்தியைத் தடுக்கும் பொருட்டு கியூபாவில் காஸ்ட்ரோ தொடக்கம் அல்ஜீரியாவில் பென்பெல்லா, பர்மாவில் நீவின், சீனாவில் மாஓசேதுங் வரையிலான சக்திகளுடன் கலந்துறவாடியதோடு அவற்றைத் தூக்கியும் பிடித்தனர்.

பிரித்தானியாவில் சோசலிச லேபர் லீக்கின் வளர்ச்சிக்கிடையேயும் அதன் அனைத்துலகச் சக — சிந்தனையாளர்கள் எண்ணிக்கையில் சிலராகவே இருந்தனர். மரபுவழி ட்ரொட்ஸ்கிஸ்டுகள் பெரிதும் தனிமைப்படுத்தப் பட்டனர். அத்தோடு அவர்கள் 1966ன் கடைகெட்ட டேட் விவகாரம் போன்ற அனைத்துலக ரீதியில் தயார் செய்யப்பட்ட பப்லோவாதிகளின் தொடர்ச்சியான ஆத்திரமூட்டல்களுக்கும் உள்ளாகினர்.

தமது சகல காட்டிக் கொடுப்புக்களுக்கு மத்தியிலும் உலக ட்ரொட்ஸ்கிசத்தின் அதிகாரபூர்வமான பிரதிநிதிகளாகவேஷம் போடுவதிலும், அனைத்துலகக் குழுவின் பிரதிநிதிகள் 'அதிதீவிர இடதுசாரி குறுங்குழுவாதிகள்' அன்றி வேறொன்றுமல்ல எனத் தள்ளுபடி செய்வதிலும் வெற்றிகண்ட பப்லோவாதிகளின் நாசகார நடவடிக்கைகளுக்கு நான்காம் அகிலமும், தொழிலாள வர்க்கமும் பெரும் விலை கொடுக்க நேரிட்டது.

அனைத்துலகக் குழு 1985 முன்னோக்குப் பிரேரணையில் விளக்கியுள்ளது போல் 1960 பதுகளின் இறுதியில் ஆரம்பமாகி 1970 பதுகளின் முதல் அரைப்பகுதி வரை நீண்ட உலக நெருக்கடியினால் வழங்கப்பட்ட சந்தர்ப்பங்களின் முழு வாய்ப்பினையும் பெற்றுக்கொள்ள நான்காம் அகிலத்தினால் முடியாது போனதற்கு முக்கிய காரணம் பப்லோவாதிகளால் ஏற்படுத்தப்பட்ட அரசியல் பேரழிவே.

பேராளர்கள் சமீபகால வரலாற்றுடன் போதுமான அளவு அறிமுகமானவர்கள். அனைத்துலகக் குழுவின் உள்ளான சந்தர்ப்பவாதப் போக்கின் வளர்ச்சி பற்றி விரிவாக விபரிக்க வேண்டிய அவசியம் இல்லை. அறுபதுகளின் கடைப்பகுதியில் இருந்து சந்தர்ப்பவாதம் அனைத்துலகக்குழுவின் உள்ளே கணிசமான அளவு முன்னேற்றம் கண்டதை நீங்கள் அறிவீர்கள். முதலாவதாக ஓ.சீ.ஐ. நான்காம் அகிலத்தினை பிரச்சினைக்குள்ளாக்கியது. சோசலிச லேபர் லீக்கினால் இது எதிர்க்கப்பட்ட போதிலும் அதன் தலைமை ஓ.சீ.ஐ. அமைப்புடனான வேறுபாடுகளை அவற்றின் அடிவேருக்கு இட்டுச் சென்று அணுகுவதை கைவிட்டது. அதற்குப் பதிலாக அரசியல் பிரச்சினைகளைத் தெளிவுபடுத்த இடமளியாத 1971 திடீர் பிளவுக்குச் சென்றது. அதிக காலம் செல்வதற்குள் அப்பட்டமான பப்லோவாதப் பண்பு கொண்ட நிலைப்பாட்டினை சோசலிச லேபர் லீக்கும் அபிவிருத்தி செய்யத் தொடங்கியது.

## ஹீலி, பண்டா சுலோற்றரின் சந்தர்ப்பவாதம்

1970பதுகளிலும் 1980பதுகளின் ஆரம்ப காலத்திலும் சோசலிச லேபர் லீக், தொழிலாளர் புரட்சிக் கட்சியின் தலைமையின் கீழான அனைத்துலகக் குழுவின் வரலாறு ஹீலி, பண்டா, சுலோற்றர் மரபுவழி ட்ரொட்ஸ்கிசத்தினை மேலும் சந்தர்ப்பவாதிகளுக்கு இட்டுச்சென்ற வரலாறாகும். 1963 பப்லோவாத மறுஐக்கியத்துக்கு எதிரான போராட்டத்தில் அடைந்த மாபெரும் தேட்டங்கள் முறைமுறையாகக் காட்டிக் கொடுக்கப்பட்டன. அனைத்துலகக் குழுவின் உள்ளேயே மரபுவழி ட்ரொட்ஸ்கிஸ்டுகள் கிட்டதட்ட ஒரு அரைச் சட்ட விரோதப் போக்காகத் தள்ளப்பட்டனர்.

முதலாளித்துவத்தேசியவாதிகளுக்கு வேகமாக இயைந்து போவதற்கு எதிராக அனைத்துலகக் குழுவின் உள்ளே நிரந்தரப் புரட்சி வேலைத்திட்டத்தினை முன்வைப்பது பல ஆண்டுகளுக்குச் சாத்தியமாகவில்லை.

ஆனால் அனைத்துலகக் குழுவின் உள்ளே இன்னமும் கடந்தகால கோட்பாட்டுப் போராட்டங்களின் மரபுகள் இருந்து வந்தன. கிட்டத்தட்ட ஒரு தசாப்தத்துக்கு முன்னர் 1982ல் தொழிலாளர் புரட்சிக் கட்சியின் பப்லோவாதப் போக்குக்கு எதிராக வளர்ச்சி கண்ட ட்ரொட்ஸ்கிச எதிர்ப்பின் அடிப்படை இதுவே. ஆரம்பத்தில் இந்த எதிர்ப்பு தனிமைப்பட்டதாயும் அனைத்துலகக் குழுவின் உள்ளே ஆதரவற்றதாயும் தோன்றியது. இன்று தெரிவது போல் வியப்புக்கிடமான குறுகிய காலத்தில் 1982 — 1985க்கும் இடையே நிலைமை அடியோடு மறுவழமாகத் திருப்பப்பட்டது. தொழிலாளர் புரட்சிக் கட்சி அரசியல் கப்பல் விபத்துக்குள்ளாகியது. 1985 இலையுதிர் காலத்தில் ஒரு சில வாரங்களுள் மரபுவழி ட்ரொட்ஸ்கிஸ்டுகள் அனைத்துலகக் குழுவினுள் தமது கட்டுப்பாட்டினை மீண்டும் உறுதி செய்தனர்.

முன்னைய சந்தர்ப்பவாத ஆதிக்கம் ஆழமான புறநிலை வேர்களைக் கொண்டிருந்ததைப் போலவே அனைத்துலகக் குழுவின் உள்ளேயான உறவின் மாற்றங்கள் உலக நிலைமையில் ஏற்பட்ட மாற்றங்களின் ஒரு பிரதிபலிப்பாகும். அனைத்துலகக் குழுவின் உள்ளேயான 1982—85 போராட்டம் கிட்டத்தட்ட போலந்து சம்பவங்களின் பின்னர் 1985 மார்ச்சில் கொர்பச்சேவ் ஆட்சியைக் கைப்பற்றிய காலம் வரையிலான சோவியத் அதிகாரத்துவத்தின் நெருக்கடியுடன் இணைந்துள்ளது.

தொழிலாளர் புரட்சிக் கட்சியின் சந்தர்ப்பவாதிகளதும், உலகம் பூராவுமுள்ள பப்லோவாதிகளதும் அந்தஸ்தினைப் பலவீனமாக்குவதில் ஸ்டாலினிசத்தின் வளர்ச்சி கண்ட நெருக்கடி முக்கிய காரணிகளுள் ஒன்றாக விளங்கியது. உதாரணமாக அனைத்துலகக் குழுவினுள் போராட்டம் வெடித்த வேளையில் முக்கிய பப்லோவாத தலைவர்களில் ஒருவரான ஜக் பார்ன்ஸ் — பொலிசார் அடைந்து கிடக்கும் சோசலிசத் தொழிலாளர் கட்சித் தலைவர்—தொழிலாளர் புரட்சிக் கட்சியின் போக்குப் பற்றி வேர்க்கஸ் லீக் அதனது விமர்சனத்தினை முன்வைத்து இரண்டுமாதங்களின் பின்னர்—1982 டிசம்பரில் ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினார் ஒரு தசாப்தத்தினுள் தம்மை ட்ரொட்ஸ்கிஸ்ட் எனக் கருதும் எவருமே இருக்கமாட்டார்கள் என அவர் அதில் பிரகடனம் செய்தார். பார்ன்ஸ், நான்காம் அகிலம் பொருத்தமற்றது எனவும் அது கிரெனடா 'நியூ ஜுவல் இயக்கம்,' நிகரகுவா சன்டினிஸ்டா கட்சி, எல்சல்வடோர் பரபுன்டோ மார்டி, அத்தோடு பெருமளவுக்கு தென் ஆபிரிக்க ஆபிரிக்க தேசியகாங்கிரசைக் கொண்ட ஒரு 'பரந்த லெனினிச அனைத்துலகம்என அவர் அழைத்த ஒன்றினால் ஒதுக்கித் தள்ளப்பட்டு விடும் எனப் பிரகடனம் செய்தார்.

பார்ன்ஸ் ஒரு 'பரந்த லெனினிச அனைத்துலகத்தினை' அமைக்கப் பிரேரித்த இந்த இயக்கங்களுக்குப் பின்னர் என்ன நடந்தது? ஒரு சில மாதங்களுள் நியூ ஜுவல் இயக்கம் அதன் மூளையைச் சிதறடித்து விட்டு அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கிரனடா ஆக்கிரமிப்புக்கான சாக்குப் போக்கினை வழங்கியது. சன்டினிஸ்டாக்கள் ஆட்சியை நிகரகுவா முதலாளி வர்க்கத்திடம் சரணடையச் செய்தனர். பரபுன்டோ மார்ட்டி பல்லாண்டுகளாக சல்வடோர் பாசிஸ்டுகளுடன் பயனற்ற பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டுள்ளது. அத்தோடு ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் அப்பட்டமாகவும் சரியான முறையிலும் பிற்போக்கு முதலாளித்துவக் கட்சியாக வெளிப்பட்டுள்ளது.

அரசியல் அபிவிருத்திகளின் புறநிலைத் தாக்கத்துடன் அடியோடு முரண்பட்டுக் கொண்ட பப்லோவாத முன்நோக்கின் முழு வங்குரோத்தும் அம்பலமாகுவதற்கு ஒரு தசாப்தம் மட்டுமே தேவைப்பட்டது, தொழிலாளர் புரட்சிக் கட்சியினாலும் ஏற்கப்பட்ட இந்தமுன்நோக்கினைக் கொண்ட பப்லோவாதிகள் தொழிலாள வர்க்கத்தினைத் தாக்குவதற்கும் அவர்களின் முன்னைய தீவிரவாத வேடங்களைக் களைவதற்கும் உலக முதலாளித்துவத்தினால் மேலும் மேலும் வெளிப்படையாக அழைக்கப்பட்ட அமைப்புக்களை அடிப்படையாகக் கொண்டு ஒரு 'பரந்த அனைத்துலகத்தினை' அமைக்க முயன்றனர். பப்லோவாதிகளால் வாழ்த்தி வரவேற்கப்பட்ட இந்த குட்டி முதலாளித்துவ, தேசியவாத அமைப்புக்களின் பலவீனங்களிற்கு ஸ்டாலினிசத்தின் நெருக்கடி பின்னணியாக விளங்கியது. இந்த அமைப்புக்களை அரசியல் ரீதியில் ஏந்திப் பிடிக்க உதவிய முண்டுகோல்களை வழங்க இவை மறுத்தன.

பப்லோவாதிகள் அரசியல் வங்குரோத்துள் காலடி வைத்ததோடு இதுவரை காலமும் மிகவும் பாதகமான நிலைமைகளின் கீழ் செயற்பட்டு வந்த மரபுவழி ட்ரொட்ஸ்கிஸ்டுகள் இன்று நின்றுகொண்டுள்ள இடத்துக்கு எம்மைக் கொணர முடிந்த ஒரு தீர்க்கமான போராட்டத்தினை முன்னெடுத்துச் செல்வது சாத்தியமாகியது.

## நா.அ அ.கு.வின் போராட்டம் நிருபணம்

நாம் இந்த மகாநாட்டினை 1953ல் இருந்து அனைத்துலகக் குழு தொடுத்து வந்த போராட்டம் நிருபணமாகியுள்ள நிலைமையின் கீழ் நடாத்துகின்றோம். மேலும் அந்தப் போராட்டம் சிறப்பாகக் கடந்த 9 ஆண்டுகளுக்கு மேலாக நான்காம் அகிலத்தினை அதன் வேலைகளை ஒரு பொதுப் புரட்சிகர வேலைத்திட்டத்தின் அடிப்படையில் உலகம் பூராவும் நடாத்தக் கூடிய அரசியல் ரீதியில் ஓரினத்தன்மையான ஒரு அமைப்பாகமீள இணைத்துள்ளது.

இன்று நாம் ஒரு பரந்த ட்ரொட்ஸ்கிச இயக்கத்தின் ஒரு கன்னையாகக் கூடவில்லை. இன்று இந்த மண்டபத்தில் கூடியுள்ளோர் நான்காம் அகிலத்தினதும் உலக ட்ரொட்ஸ்கிசத்தினதும் அதிகாரபூர்வமான பிரதிநிதிகளாவர். அனைத்துலகக் குழு இப்பொழுது பப்லோவாதிகளுடன் தீர்க்கமான முறையில் கணக்கு வழக்குகளைத் தீர்த்துக் கொள்வது சாத்தியமாகியுள்ளது. கனன் 38 ஆண்டுகளின் முன்னர் செய்ய முயற்சித்ததையும், சோசலிஸ்ட் லேபர் லீக் 30 ஆண்டுகளின் முன்னர் செய்ய வேண்டுமெனக் கூறியதையும்—அதாவது நான்காம் அகிலத்தில் இருந்து பப்லோவாத சந்தர்ப்பவாதத்தினைத் துடைத்துக் கட்டுவதை நாம் செய்துள்ளோம்.

ஸ்டாலினிசத்துக்கும் மார்க்சிசத்துக்கும் இடையே ஏதோ ஒரு தொடர்பு உள்ளது என்ற பொய்யுக்கு எதிராக ட்ரொட்ஸ்கிஸ்டுகள் அரைநூற்றாண்டுக்கு மேலாகப் போராடினர். இன்று நாம் அதற்குக் குறையாத தீர்க்கமான முறையில் மண்டேலின் அரசியலுக்கும் கிளிப் சுலோட்டரின் மோசடிமிக்கதும் பரிதாபகரமானதுமான 'தொழிலாளர் அனைத்துலகம்' போன்ற அதனுடன் இணைந்த சந்தர்ப்பவாதப் போக்குகளுக்கும் ட்ரொட்ஸ்கிசம், நான்காம் அகிலத்துடன் அடியோடு எதுவித தொடர்பும் கிடையாது என்பதை உறுதி செய்கின்றோம். இந்த அரசியல் உண்மையில் இருந்து நாம் அவசியமான அமைப்பு ரீதியான முடிவுகளுக்கு வருகின்றோம்,

மண்டேலுக்கும் பப்லோவாதிகளுக்கும் எதிரான போராட்டம் வெறும் கோட்பாட்டு அம்சங்கள் அல்லது சில வேலைத்திட்டப் பிரச்சினைகள் சம்பந்தமாக சோசலிசக் கட்டுமானத்தினுள் இடம்பெறுவதுஅல்ல. மாறாக இது வேறுபட்ட வர்க்க சக்திகளுக்கும் அவற்றின் வரலாற்று இலக்குகளுக்கும்இடையேயான ஒரு மோதுதலாகும். கடந்த பல ஆண்டுகளாக மண்டேலின் போக்கு வகித்த பாத்திரத்தின் மூலம் உச்சக் கட்டத்தினை அடைந்துள்ளது போல் அதன் முழு வரலாற்றுப் பரிணாமம் மூலம் இது வெளிப்பாடாகியுள்ளது.

மார்க்சிஸ்டுகள் என்ற முறையில் பப்லோவாத அமைப்புக்கள் பற்றிய எமது அரசியல் மதிப்பீடுகள் தீர்க்கமான வரலாற்று நிகழ்வுகளின்பரீட்சைக்குள்ளாவதை அடிப்படையாகக் கொள்ள வேண்டும். மண்டேல் பற்றிய எமது மதிப்பீடுகள் அகநிலை உணர்வுகளின் உந்துதலால் தோன்றுபவை அல்ல. அல்லது அவரின் போக்கு பற்றிய எமது குணநல ஆய்வுகள் ஒரு கோபாவேஷ திட்டலின் வெளிப்பாடும்அன்று. மாறாக நாம் புறநிலை உண்மையை போதுமானளவு வெளிப்படுத்

(7-ம் பக்கம் பார்க்க)

www.padippakam.com


# சோசலிசப் புரட்சியின் உலக கட்சியாக...

(6ம் பக்கத் தொடர்ச்சி)

தும் அரசியல் வரைவிலக்கணத்தினைப் பிரயோகிக்கின்றோம். வெறும் 'திரிபுவாதி' அரசியல்வாதியாக நாம் மண்டேலை உரிய முறையில் வரைவிலக்கணம் செய்ய முடியாது. காரணம் அப்பதம் மண்டேலுடனான தகராறு முக்கியமாக கோட்பாட்டுப் பண்பு கொண்டதெனக்காட்டுவதே. அவர் 'வெறுமனே' மரபுவழி மார்க்சிசக் கருத்துப்பாடுகளில் இருந்து விலகிவிட்டார் என்றும் இந்த அல்லது அந்த தவறு இருந்தபோதிலும் அவர் எந்தவிதத்திலும் ட்ரொட்ஸ்கிசத்தினதும் புரட்சிகர சோசலிசத்தினதும் எல்லைக்குள் இருந்து வருகின்றார் எனவும் அது காட்டுவதே.

## மண்டேல் ஒரு முதலாளித்துவ அரசியல்வாதி

ஆனால் நிலைமை எந்த விதத்திலும் அவ்வாறு அன்று. பல தசாப்தங்களாக அவர் மார்க்சிசத்தினை திரிபுசெய்ததன் விளைவாக மண்டேல் வார்த்தையின் முழு அர்த்தத்தில் ஒரு முதலாளித்துவ அரசியல்வாதியாகியுள்ளார். நன்கு தெளிவாகச் சொன்னால்—இறுதி ஆய்வில் அவர் முதலாளித்துவச் சொத்து முறையை, உற்பத்திச் சாதனங்களில் முதலாளித்துவ சொத்துடமையைப் பேணுகின்றார். மிகச் சமீப காலத்தில் —அதாவது இந்த அடிப்படைப் பிரச்சினை தொழிலாள வர்க்கத்துக்குப் பெரும் முக்கியத்துவம் பெற்றுள்ள சமயத்தில் அவர் ஆற்றிய அரசியல் வேலை இதை வெளிப்படுத்தியுள்ளது.

நாம் சில உதாரணங்களை நோக்குவோம். கிழக்கு ஐரோப்பாவில் முதலாளித்துவத்தினை புனருத்தாரணம் செய்வதற்கான களத்தினை தயார் செய்வதாக மண்டேலினதும், பப்லோவாத அமைப்புக்களதும் பணி உள்ளது. லெவ் வலசாவின் கீழ் போலந்து தொழிலமைச்சராக விளங்குபவரும் சர்வதேச நாணய நிதியத்தின் சிக்கனத்திட்டத்தினை அமுல் செய்வதற்கு முக்கிய பொறுப்பாக உள்ளவருமான ஜக்குரான், ஏர்ணஸ்ட் மண்டேலின் ஒரு அரசியல் சீடராவார். லெவ் வலசா கூட ஜக்குரானின் மார்க்கமாக மண்டேலினால் சிருஷ்டிக்கப்பட்ட ஒரு 'ப்ரால்ஸ்டீன்' என ஒருவர் நியாயப்படுத்திக் கூற முடியும்.

செக்கோசலவாக்கியாவில் ஏர்ணஸ்ட் மண்டேலின் ஒரு நெருங்கிய சகாவான பப்லோவாதி பீட்டர் உல், வகலாவ் ஹவல் அரசாங்கத்தில் அரச தகவல் துறை அதிபராக செயற்படுகின்றார்.

முதலாளித்துவ அடிப்படையில் ஜேர்மனியை மீண்டும் ஒன்றிணைக்கும் தமது திட்டத்தினை அமுல்படுத்தும் பொருட்டு மேற்கு ஜேர்மன் முதலாளி வர்க்கத்துக்கு அவசியப்பட்ட மூச்சுவிடும் அவகாசத்தினை வழங்கும் முகமாக மண்டேலும் அவரது அரசியல் சகாக்களும் ஆற்றிய நேரடிப்பாத்திரம், முன்னைய ஜேர்மன் ஜனநாயகக் குடியரசின் 1989/90 சம்பவங்கள் மூலம் அம்பலமாகியது.

1989 நவம்பர் 4ம் திகதி அனைத்துலகக் குழுவின் ஜேர்மன் பகுதியான B.S.A.ஸ்டாலினிச ஆட்சியாளர்களுக்கு எதிரான முதலாவது மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் தலையிட்டது. ஸ்டாலினிசத்துக்கு எதிரான அரசியல் போராட்டத்தினைக் கிழக்கு ஜேர்மன் தொழிலாளர்கள் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொணராத நிலையில் ஆட்சியின் சரிவின் பெறுபேறானது ஒரு நிச தொழிலாளர் ஆட்சியை ஸ்தாபிதம் செய்வதற்குப் பதிலாக முதலாளித்துவத்தினைப் புனருத்தாரணம் செய்வதாகவிருக்கும் என எமது தோழர்கள் விடுத்த வேண்டுகோளில் எச்சரிக்கை செய்திருந்தனர். ஆயிரக்கணக்கில் விநியோகிக்கப்பட்ட BSAன் வேண்டுகோள் ஒரு பலம்வாய்ந்த செல்வாக்கினைப் பெற்றதோடு, கிழக்கு ஜேர்மன் தொழிலாள வர்க்கத்தின் இயக்கத்தினை ஒரு சோசலிசத் திசையில் அபிவிருத்தி செய்வதற்கான ஒரு அரசியல் அடிப்படையையும் வழங்கியது.

இரண்டு அல்லது மூன்று நாட்களுள் ஏகொன் கிரென்ஸ் அரசாங்கம், B. S. A.ன் செல்வாக்கினை எதிர்கொள்ளும் பொருட்டு மண்டேலை கிழக்கு ஜேர்மனியுள் கொணர்ந்தது. ஸ்டாலினிஸ்டுகள் முன்னணிக் கிழக்கு ஜேர்மன் பத்திரிகையில் அவரைப் பேட்டி கண்டதோடு அந்தப் பேட்டியில் அவர் B . S. A. ஐ குறிப்பாக 'வெளிப்புற பிரச்சாரகர்கள்' எனவும் கிழக்கு ஜேர்மன் 'உள்நாட்டு விவகாரங்களில்' தலையிட அவர்களுக்கு எதுவித அலுவலும் கிடையாது எனவும் கண்டனம் செய்தார். உண்மையில் பல தசாப்தங்களாக மண்டேல் தொடர்பு வைத்திருந்த ஸ்டாலினிஸ்டுகள், அவர் மேல் நம்பிக்கை வைக்க முடியும் என்பதை அறிந்திருந்தனர். அத்தோடு அவர் முதலாளித்துவ அடிப்படையில் ஜேர்மனியை மீண்டும் ஐக்கியப்படுத்த வழியமைக்கும் பொருட்டு ஜேர்மன் ஸ்டாலினிஸ்டுகளுடன் கலந்துறவாடத் தமது சக்திக்குட்பட்ட சகலதையும் செய்யத் தயாராக இருப்பதாக அறிவித்தல் விடுத்தார்.

இரண்டாவது உதாரணமாக நாம் குறிப்பிடுவது, முக்கியத்துவத்தில் எந்தவிதத்திலும் குறைந்துவிடாத வகையில்மண்டேலும் பப்லோவாத அமைப்புக்களும் மிகைல் கொர்பச்சேவ் ஆட்சிக்குவழங்கிய அரசியல் ஆதரவாகும். ஏர்ணஸ்ட் மண்டேல் எழுதிய ஒரு நூலில் அவர் பெரெஸ்ரொய்கா வேலைத்திட்டத்தினைச் வெகுவாகப் புகழ்ந்தார். பெரெஸ்ரொய்கா முதலாளித்துவப் புனருத்தாரண வேலைத்திட்டம் என்பதில் எதுவித சந்தேகத்துக்கும் இடம் கிடையாது என அனைத்துலகக் குழு தெளிவாக எச்சரிக்கை செய்திருந்த வேளையில் மண்டேல், கொர்பச்சேவ் வேலைத்திட்டம் யதார்த்தமாகுமிடத்து அது சோவியத் தொழிலாள வர்க்கத்தின் ஒரு வரலாற்று முன்னேற்றத்தினைப் பிரதிநிதித்துவம் செய்யும் எனப் பிரகடனம் செய்தார்.

மண்டேலின் நீண்டகால சகபாடியான தாரிக் அலி பெரெஸ்ரொய்காவைப் புகழ்ந்து எழுதிய ஒரு நூலினை பொரிஸ் யெல்ட்சினுக்கு சமர்ப்பணம் செய்தார். அது பப்லோவாத வேலைத்திட்டம் முதலாளித்துவப் புனருத்தாரணம் என்பதற்கு நல்ல அத்தாட்சி. மண்டேலின் வேலைத்திட்டத்திற்கும் யெல்ட்சினின் வேலைத்திட்டத்திற்கும் இடையே அடிப்படையான வேறுபாடு கிடையாது. தொழிலாள வர்க்கத்தினைத் தவறான வழியில் திருப்பவும் குழப்பியடிக்கவும் அவசியமான விதத்தில் வேலையைப் பகிர்ந்து கொண்டு, ஒரே வீதியின் இருபுறத்திலும் செயற்பட்டு வருகின்றார்கள்.

## யூகோசலவியா பற்றி மண்டேல்

இனி நாம் யூகோசலவியா பற்றிய மண்டேலின் நிலைப்பாட்டை ஆராய்வோம். சில வாரங்களுக்கு முன்னர் மண்டேலினால் பிரசுரிக்கப்படும் 'இன்டர்நஷனல் வியூபொயின்ட்' சஞ்சிகை, யூகோசலவியாவில் ஏகாதிபத்திய நேரடித் தலையீட்டை வேண்டியது. யூகோசலவியாவில் இடம் பெறும் சம்பவங்கள் தொடர்பாக அது முற்றிலும் பிற்போக்கானதும், கடைகெட்டதுமான நிலைப்பாட்டை வகித்தது. ஜேர்மன் முதலாளி வர்க்கத்தின் நிலைப்பாட்டினைப் பிரதிபலிக்கும் விதத்தில் மண்டேல் சேர்பியன் சோவினிசத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்த போதிலும் குரோஷியன் சோவினிசம் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. உண்மையில் இந்தமோதுதலை மூளச்செய்வதில் ஏகாதிபத்தியத்தின் பாத்திரம் பற்றி அவர் எதுவும் கூறவில்லை. இந்த பப்லோவாத சஞ்சிகை, இச்சகல தேசியவாத, ஸ்டாலினிச கன்னைகளும் உலக ஏகாதிபத்தியத்தின் வேறுபட்ட பிரிவினரால் இயக்கப்படுகின்றன என்பதைக் குறிப்பிடாவண்ணம் பார்த்துக் கொண்டது.

மேலும் மண்டேலின் சஞ்சிகை, சுதந்திர குரோஷியாவில் உருவாக்கப்படும் ஆட்சியின் பண்பைக் கவனத்தில் கொள்ளாமல் குரோஷியன் சுயநிர்ணயம் நிபந்தனையின்றி ஆதரிக்கப்பட வேண்டும் என பிரகடனம் செய்தது. வேறு வார்த்தையில் சொன்னால் தொழிலாளர்களைக் கொன்று தள்ளும் ஒரு பாசிச ஆட்சி குரோசியாவில் ஸ்தாபிக்கப்படும் நிலையிலும் கூட மண்டேல்வாதிகள் குரோஷியாவின் சுயநிர்ணய உரிமையை நிபந்தனையின்றி ஆதரிப்பர். இது அடிப்படை வர்க்கப் பிரச்சினைகளை புறக்கணிக்கும் ஏகாதிபத்திய சார்பு நிலைப்பாடாகும்; ஆதலால் அது பெரிதும் பிற்போக்கானது.

1934ல் சார் கருத்துக்கணிப்பு தொடர்பாகட்ரொட்ஸ்கி வகித்த நிலைப்பாட்டை நினைவு கூர்வோம். ஹிட்லரின் வெற்றியின் பின்னர் அச்சமயத்தில் முதலாம் உலகப் போரின் முடிவில் ஜேர்மனியிடமிருந்து கைப்பற்றப்பட்ட சாரின் அந்தஸ்து பற்றிய பிரச்சினை எழுந்தது. பிரித்தெடுக்கப்பட்ட ஒரு பிரச்சினை என்ற முறையில் உண்மையில் மார்க்சிஸ்டுகள் சாரின் சுயநிர்ணய உரிமையையும் அது விரும்புமிடத்து திரும்பவும் ஜேர்மன் கட்டுப்பாட்டுக்குள் செல்லும் உரிமையையும் அங்கீகரித்தனர். மேலும் இது இந்நிலைமைகளின் கீழ் அது சாரையும் அதன் தொழிலாள வர்க்கத்தினையும் பாசிஸ்டுகளின் அதிகாரத்துக்கு மாற்றுவதாக இருக்கும். ட்ரொட்ஸ்கி சாரில் தொழிலாள வர்க்கத்தின் அடிப்படை வர்க்க நலன்களுக்கு எதிராகச் சென்ற தேசியவாதச் சுலோகங்களை கடுமையாக எதிர்த்தார். ஆனால் இங்கு மண்டேல் குரோஷியன் ஆட்சியின் பண்பைப் பற்றிக் கணக்கில் எடுக்காமல் குரோஷியாவில் சுயநிர்ணயத்தினை ஸ்தாபிதம் செய்யும்படி அழைப்பு விடுப்பதைக் காண்கின்றோம்.

இனி கடைசி உதாரணம். ஒரு கொலையாளி எப்போதும் அவனது கொலை அரங்குக்கே திரும்புவான் என்று ஒரு புகழ் பெற்ற பழமொழி உண்டு. இலங்கைத் தீவில் மண்டேலினதும் கையாட்களதும் நடவடிக்கைகள் மூலம் இது நிஜமாகி வருகின்றது. மிகச் சமீபத்தில் N. S. S. P என்ற நவ சமசமாஜக் கட்சி அமைப்புக்கும் மண்டேலின் ஐக்கிய செயலகத்துக்கும் இடையே ஒரு விநோதமான காதல் மலர்ந்துள்ளது. நவ சமசமாஜக்கட்சி ஐக்கிய செயலகத்தின் அதிகாரபூர்வமான பிரிவாகப் பிரகடனம் செய்யப்படவுள்ளது. நவசமசமாஜக் கட்சி 1987ல் ஜயவர்தனா ஆட்சியுடன் வட்ட மேசை மகாநாட்டில் கலந்துறவாடிய ஒரு கட்சியாகும். அத்தோடு தமிழ் விடுதலை இயக்கத்தினை நசுக்கும் பொருட்டு இந்தியர்கள் இலங்கையை ஆக்கிரமிக்க வழிவகுக்க உதவியது. மேலும் இக்கட்சி சகல முதலாளித்துவக் கட்சிகளுடனும் இலங்கை இராணுவத்தில் உள்ள மூலகங்களுடனும் நெருக்கமான அரசியல் உறவுகளைக் கொண்டுள்ளது. நவசமசமாஜக் கட்சித் தலைவர் இலங்கை பாசிச ஜெனரல்களுடன் குட்டிப் பெயரால் அழைக்கப்படும் உறவுகளைக் கொண்டுள்ளார். நவசமசமாஜக் கட்சியானது இந்தியாவிலும் இலங்கையிலும் வெகுஜன இயக்கம் அந்தப் பிராந்தியத்தில் ஏகாதிபத்தியவாதிகளின் சகல நலன்களுக்கும் அச்சுறுத்தலாக உள்ள நிலையிலும் பழைய முதலாளித்துவ அரசியல் அமைப்புகள் சிதறுண்டு போகும் நிலைமையின் கீழும் ஏகாதிபத்தியத்தின்சார்பில் முக்கிய பாத்திரத்தினை வகிக்கும்பொருட்டுபோஷித்து வளர்க்கப்பட்ட ஒரு அமைப்பாகும். சரியாக இத்தருணத்திலேயே நவசமசமாஜக் கட்சிக்கு 'ட்ரொட்ஸ்கிச' நற்சான்றிதழை வழங்கி, மக்கள் இடையேஅதன்ஆளுமையைத் தாங்கிப் பிடிக்க மண்டேல் விரைந்துள்ளார். இதன்படி மண்டேல் முதலாளித்துவக் கையாட்களால் தலைமை தாங்கப்படும், உண்மையில் பிற்போக்கான இந்த அமைப்பினை ஐக்கிய செயலகத்தின் சமீபத்திய மகாநாட்டுக்கு வரவேற்றதோடு நவசமசமாஜக் கட்சியை அதன் உத்தியோகபூர்வமான பிரதிநிதியாகவும் அறிவித்துள்ளது.

இந்தச் சம்பவங்களின் பரிசோதனையின் கீழ் நான்காம் அகிலத்தினை பப்லோவாதத்திலிருந்து பிரித்து வைக்கும் பிரிகோடானது புரட்சியை எதிர்ப்புரட்சியிலிருந்து பிரிக்கும் பிரிகோடாகும் என நாம் அங்கீகரிக்க வேண்டும். முன்னைய காலப்பகுதியில் திரிபுவாதத்திலிருந்து தோன்றி தொழிலாள வர்க்கத்தினுள் ஏகாதிபத்தியத்தின் ஒரு திட்டவட்டமான முண்டுகோலாகச் சமூகஜனநாயகம் வளர்ச்சி கண்டது போல் பப்லோவாதம் அதன் பயணப் பாதையில் ஒரு முதலாளித்துவப் போக்காக வரையறுக்கப்பட்டுள்ளது.

இந்த வரைவிலக்கணத்தினை நாம் பயன்படுத்துவது புதியதும், கசப்பானதுமான ஒரு பண்புப் பெயரைத்தேடிக் கொள்வதற்கு அன்று. இது பப்லோவாத அமைப்புக்களைப் பற்றிய ஒரு விஞ்ஞான பூர்வமான மதிப்பீட்டினைச் செய்வதும், அவசியமான அரசியல் முடிபுகளைப் பெறுவதும் பற்றிய ஒரு பிரச்சினையாகும். நாம் அவசியமான வர்க்க மதிப்பீடுகளைச் செய்யத் தவறின் நாம் தொழிலாள வர்க்கத்தினைத் தவறான வழியில் இட்டுச் செல்பவர்களாவோம், இது என்ன என்பதை நாம் தொழிலாள வர்க்கத்துக்குச் சொல்வது எமது பணி.

## நான்காம் அகிலத்தின் அபிவிருத்தியில் புதிய கட்டம்

பேர்லின் மகாநாடு, நான்காம் அகிலத்தின் அபிவிருத்தியில் ஒரு புதிய கட்டத்தைக் குறிக்கின்றது. இன்று அனைத்துலகக் குழுதான் இந்த முழு உலகிலும் உள்ள ஒரே நிச உலக ட்ரொட்ஸ்கிச அமைப்பாகும். அனைத்துலகக் குழு, நான்காம் அகிலத்தினுள் உள்ளேயான ஒரு வெறும் போக்கல்ல: நான்காம் அகிலமே அதுதான். இந்த மகாநாட்டுடன் அனைத்துலகக் குழு, சோசலிசப் புரட்சியின் ஒரு உலகக் கட்சி

(8-ம் பக்கம் பார்க்க)

படிப்பகம்

# சோசலிசப் புரட்சியின் உலக கட்சியாக...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

யாக நான்காம் அகிலத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்கும். பேராளர்கள் இன்று அனைத்துலகத் தொழிலாள வர்க்கத்துக்கு நான்காம் அகிலத்தின் அதிகாரபூர்வமான பிரதிநிதிகளாகப் பேசுகின்றார்கள்.

இந்த அபிவிருத்தி எமது அரசியல் போராட்டத்தின் நீண்ட வரலாற்றில் இருந்து தோன்றுகின்றது. இவை மறுக்க முடியாத அரசியல் உண்மைகளால் முழுமனே நிலை நாட்டப்பட்டுள்ளன. இந்தப் புதிய அரசியல் உறவினை நிலைநாட்டுகையில் நாம் தொழிலாள வர்க்கத்தின் உள்ளே ட்ரொட்ஸ்கிச இயக்கத்தின் அனைத்துலக வேலைத்திட்டம், செயற்பாடுகள் பற்றிய அவசியமான அரசியல் தெளிவுக்குத் தீர்க்கமான முறையில் பங்களிப்புச் செய்கின்றோம். அதே சமயம் பப்லோவாதிகளின் ஆத்திர மூட்டல்களில் இருந்து தீர்க்கமான முறையில் ட்ரொட்ஸ்கிசத்தினைப் பிரிக்கின்றோம்.

இந்த அடிப்படையில் நாம் உலகம் பூராவும் தொழிலாள வர்க்கம் ஒரு வரலாற்றுப் பண்பு கொண்ட மாபெரும் போராட்டங்களுள் காலடி வைத்துள்ள கட்டத்தில் தொழிலாள வர்க்கத்தின் அரசியல் ரீதியில் பெரிதும் முன்னேற்றமான பிரிவினரின் ஒரு கவர்ச்சிக் கம்பமாக நான்காம் அகிலத்தினை நிலைநாட்டுவோம்.

1980ல் ஹீலி தமது அரசியல் பித்தலாட்டத்தின் உச்சக்கட்டத்தில் அனைத்துலகக் குழு அதனை நான்காம் அகிலத்தின் ஒரு 'உயிரணு'வாக மட்டுமே கொள்ளவேண்டும் என திடீரென அறிவித்தார். அதன் மூலம் அவர் கருதுவது என்ன என்பதை தெளிவுபடுத்தவில்லை. ஆனால் அவரின் நடைமுறை அவர் கருதுவது என்ன என்பதை காட்டியது. அவரின் கருத்தின்படி அனைத்துலகக் குழு உண்மையில் பல சிறிய பிரச்சாரக் குழுக்களில் ஒன்றன்றி வேறொன்றுமல்ல. அத்தோடு நாம் பரந்த இயக்கங்களுள்—அவை ஸ்டாலினிஸ்டுகள், சமூக ஜனநாயகவாதிகளின் ஆளுமைக்குட்பட்டிருந்தால் என்ன அல்லது ஒடுக்கப்படும் நாடுகளில் முதலாளித்துவ தேசியவாதிகளின் ஆளுமைக்குட்பட்டிருந்தால் என்ன கரைக்கப்படவேண்டும்.

1985ல் நா. அ. அ. கு. இக் கருத்துப்பாட்டினை நிராகரித்தது. எந்தவிதத்திலும் நான்காம் அகிலத்தின் எதிர்காலம், பப்லோவாத அமைப்புக்களின் துண்டு துணுக்குகளுடன் மறுஅணிதிரள்வை அடிப்படையாகக் கொள்ளமாட்டாது. உலகக் கட்சியின் எதிர்காலம், இன்று இங்கு கூடியுள்ளவர்களினால்பிரதிநிதித்துவம் செய்யப்பட்டுள்ள நான்காம் அகிலத்தின் சக்திகளினால் தொழிலாள வர்க்கத்தினுள் செய்யும் மிகப் பலம் வாய்ந்த திருப்பத்திலேயே தங்கியுள்ளது.

இம்மகாநாட்டின் மாபெரும் முக்கியத்துவம், அனைத்துலகத் தொழிலாள வர்க்கம் மாபெரும் போராட்டங்களுள் காலடி வைக்கும் ஒரு கட்டத்தில் ஒரு ட்ரொட்ஸ்கிச வேலைத் திட்டத்தின் அடிப்படையில் நான்காம் அகிலத்தினை மறுசீரமைக்கவும் மீளஇணைக்கவும் முடிந்துள்ளமையே.

தோழர்களே, புறநிலைமையின் பல முக்கிய அம்சங்களைப் பற்றி விரிவாகப் பேச இன்று போதுமான அளவு நேரம் இல்லை. இவை விஞ்ஞாபனத்திலும், பிரேரணைகளிலும் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. ஏனைய பேச்சாளர்கள் அவை பற்றிப் பேசுவார்கள். ஆனால் இம்மகாநாட்டின் அடிப்படையாக அமைந்த அனைத்துலகக் குழுவினால்முன்வைக்கப்பட்ட முன்நோக்கு, ஆறு மாதங்களுக்கு முன்னர் நாம் கற்பனை செய்திருக்கக் கூடியதற்கு மேலாக நிரூபணம் ஆகியுள்ளதோடு, ருசுப்படுத்தப் பட்டுள்ளது. அந்தப் பத்திரத்தில் நாம் ஆய்வு செய்த சகல போக்குக்களும் — ஆழமாகிவரும் பொருளாதார நெருக்கடி, முக்கிய ஏகாதிபத்திய சக்திகளிடையே உக்கிரமாகிவரும் குரோதம், உலக முதலாளித்துவ அமைப்பு ஒரு முழுமையாகவளர்ச்சி கண்டுவரும் சமபலமின்மை — கடந்த ஆறு மாதங்களுள் இந்தச் சகல போக்குக்களும் மிக வேகமாக வளர்ச்சி கண்டுள்ளன.

சமீபத்திய நேட்டோ கூட்டத்தில் இடம்பெற்ற கலந்துரையாடல் இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் என்றுமில்லாத முறையில் முதலாளி வர்க்கம் பிளவுண்டு போயுள்ளதைச் சுட்டிக் காட்டுகிறது. ஜேர்மனியின் முதலாளித்துவ மறு ஐக்கியத்தையும், பின்னர் பாரசீக வளைகுடா யுத்தத்தினையும் தொடர்ந்து வந்த மனோபாவமும் வெற்றிக் களிப்பும் பெரிதும் சிதறுண்டு போய்விட்டன. அதனிடத்தில் நம்பிக்கையீனமும் தகவமைவின்மையும் குடிகொண்டன. இன்று உலக முதலாளித்துவம் முகம் கொடுக்கும் மாபெரும் ஆபத்து, நிச்சயமின்மையும் முன் கூட்டியே ஹாஸ்யம் கூறமுடியாத சம்பவங்களே என புஷ் குறிப்பிட்டுள்ளார். பாரசீக வளைகுடா யுத்தம் ஒரு புதிய உலக ஒழுங்கினை ஆரம்பித்து வைப்பதற்கு மாறாக முன்னைய தன் வெடிப்பினை மேலும் உக்கிரமாக்கியுள்ளது. அமெரிக்க முதலாளி வர்க்கம் யுத்தம் அமெரிக்கப் பொருளாதாரத்திற்கு ஊக்கமளிக்கும் என நம்பியிருக்கையில் பொருளாதாரப் பின்னடைவு முற்றுப்பெற மறுப்பதோடு, முன்னரைவிட மிகவும் ஆபத்தானதும், உலகளாவிய பரிமாணத்தையும் கொண்டுள்ளது.

உலக ஏகாதிபத்திய மையமான அமெரிக்காவினுள் சமூக நெருக்கடி தொடர்ந்து ஆழமாகி வருகின்றது. வெள்ளிக் கிழமை பிரசுரமான 'புலட்டின்' பத்திரிகையில் வெளியாகியுள்ள ஒரு கட்டுரை மூலம் இதனை விளக்க விரும்புகின்றேன்.

''அக்டோபர் 1ல் அமுலுக்கு வந்த புதிய மிச்சிக்கன் பொது உதவி நன்மைகள் பறிக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான வேலையற்ற தொழிலாளர்கள் சேமநல ஹோட்டல்கள், சேரி வீடுகளிலிருந்து வெளியேற்றப்பட்டு வருகின்றார்கள். அரசும், உள்ளூராட்சி சபைகளும், நீதிமன்றங்களும் இவற்றை அங்கீகரித்துள்ளன. கடந்த வாரத்தில் டெட்ரொய்டில் வீசிய பனிக்கட்டி காற்றுக்கு அகப்பட்டு நான்கு வீடற்ற மக்கள் இறந்துள்ளதாக அதிகாரிகள் ஏற்கனவே அறிவித்துள்ளனர், நவம்பர் 8 வெள்ளிக்கிழமை மிச்சிக்கன் மேன்முறையிட்டு நீதிமன்றம் உடல் வலிமை கொண்டவர்கள் எனப்படும் தனிப்பட்ட மிச்சிக்கன் வாசிகள் 90000 பேரின் பொது உதவி நன்மைகளைத் துண்டிப்பதை அங்கீகரித்தது. இதுவரை டெட்ரொயிட் பொலிசார் டெட்ரொயிட் வீடற்றோர் சங்கத்தின் அங்கத்தவர்களான 20 வீடற்ற மக்களை கைது செய்துள்ளனர். இவர்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களில் பங்கு பற்றியதோடு ஜிப்ரீஸ் அன்ட் ஹோர்மன் காடன்ஸ் பொது வீடமைப்பு திட்டங்களில் உள்ள காலியான வீடுகளில் குடியமர முயற்சித்தனர். ஒரு ஊர்வலக்காரர் கைது செய்யப்பட்டதோடு ஒரு கர்ப்பிணிப் பெண் ஒரு பொலிசினால் தாக்கப்பட்டு பனிக்கட்டி நிலத்தில் மயங்கி விழுந்தாள். அவள் ஒரு அம்புலன்ஸ் வண்டியினுள் ஏற்றப்பட்டு, ஒரு ஆஸ்பத்திரிக்கு அப்புறப் படுத்தப்பட்டாள்''.

இவை உலகின் செல்வம் படைத்த ஏகாதிபத்திய நாடு எனப்படும் அமெரிக்காவில் சாதாரண காட்சியாக அதிகரித்து வருகின்றது. தொழிலாள வர்க்கத்தின் வறுமை ஒரு சமூகத் தோற்றப்பாடாகும். இது உலகின் ஏகாதிபத்திய பெரும் மையங்களில் பெரிதும் சாதாரணமாகவுள்ளது. பொருளாதார நெருக்கடிக்கு அப்பாற்பட்டது எனப்படும் ஜேர்மனியில் கூட வேலைநீக்கங்கள் பரவி வருகின்றன. சமீபத்தில் கூட பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களை வேலைக்கமர்த்தும் சுரங்கங்கள் மூடுவிழாத் திட்டங்களை அறிவித்துள்ளன.

மிகவும் குறுகிய காலத்துள் கிழக்கு ஐரோப்பிய ஸ்டாலினிச ஆட்சிகளின் வீழ்ச்சியை சூழவிருந்த நப்பாசைகள் கரைந்து போயின. இது போலந்து தேர்தல்களின் முடிவுகளின் மூலமும், நூமேனியாவில் இடம்பெற்ற பிரமாண்டமான ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் மூலமும், பல்கேரியாவில் தொழிலாள வர்க்கத்தின் இயக்கம் மூலமும், செக்கோசலவாக்கிய சனத்தொகையின் முன்னொருபோதும் இல்லாத பரந்த பிரிவினரிடையேயான அதிருப்தி மூலமும் வெளிப்பாடாகியுள்ளது. இது தொழிலாள வர்க்கத்தின் வளர்ச்சி கண்டுவரும் எழுச்சியுடன் இணைந்து கொண்டுள்ளது. ஒன்றுக்கொன்று வெகு தூரத்தில் உள்ள கிரீஸ், பிரான்ஸ், இத்தாலி, பார்படோஸ், தென் ஆபிரிக்கா, கனடா முதலிய இடங்களில் இருந்து வரும் புதினப் பத்திரிகைகள் தினமும் பரந்த வேலைநிறுத்தங்கள், பொது வேலைநிறுத்தங்கள், பரந்த ஆர்ப்பாட்டங்கள் பற்றிய அறிக்கைகளுடன் வெளிவருகின்றன.

நாம் தொழிலாள வர்க்கத்தின் முன்னொருபோதும் இல்லாத அளவிலான பெரும் போராட்டங்களால் பண்புமயமாக்கப்படும் காலப்பகுதியினுள் காலடி வைக்கின்றோம். வளர்ச்சி கண்டு வரும் இந்த தொழிலாளர் வர்க்க இயக்கத்தினுள் மார்க்சிச நனவினை எடுத்துச் செல்வதும் சோசலிசப் புரட்சியின் உலகக் கட்சியாக நான்காம் அகிலத்தின் பகுதிகளுள் தொழிலாளவர்க்கத்தின் முன்னணிப் படையினை அணிதிரட்டுவதே எமது பணியாகும்.

தொழிலாள வர்க்கத்தின் தன்னியல்பானபோர்க்குணத்தினை நாம் மார்க்சிச நனவாக மாற்ற வேண்டும். இதைச் செய்வதற்கு எம்மிடம் அரசியல் பலம் உண்டு. ஏனெனில் எமது சொந்த இயக்கத்தினுள் ட்ரொட்ஸ்கிச வேலைத்திட்டத்தினைக் காட்டிக் கொடுத்தவர்களுடனான கணக்குவழக்குகளை நாம் தீர்க்கமான முறையில் தீர்த்துக் கொண்டுள்ளோம். இந்தப் போராட்டத்தின்பண்பினால் தொழிலாள வர்க்கத்துக்கு தலைமைதாங்குவதற்கான எமது உரிமையை நாம் வெளிப்படுத்தியுள்ளோம்.

எம்முன்னால் உள்ள பணி என்ன? இன்று நாம் நான்காம் அகிலத்தின் அதிகாரபூர்வமான உலக காங்கிரசினைக் கூட்டுவதில் ஈடுபட முடியும். இந்த அடிப்படையில் நாம் தொழிலாள வர்க்கத்தின் அனைத்துலக ஐக்கியத்தினை உருவாக்கும் அரசியல் ஆயுதமாகச் சேவை செய்ய நான்காம் அகிலத்தினை ஆயுதபாணியாக்குவோம்.

1938ல் நான்காம் அகிலத்தினை ஸ்தாபித்த வேளையில் ட்ரொட்ஸ்கி கட்டியெழுப்பத் தயாரான சக்திவாய்ந்த பாட்டாளி வர்க்க உலகக் கட்சியாக நான்காம் அகிலத்தினை நாம் அபிவிருத்தி செய்வோம். தோழர்களே, மரபுவழி ட்ரொட்ஸ்கிஸ்டுகள் நீண்ட காலமாகச் செயற்பட்டு வந்தது இந்தக் காலம் உதயமாகும் வரைதான். அனைத்துலகக் குழு தயார் செய்து வந்ததும் இந்தக் காலப்பகுதிக்காகவே, தொழிலாள வர்க்கத்திற்குத் தலைமைதாங்கும் மாபெரும் பொறுப்பு இந்த இயக்கத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது அந்தப் பொறுப்புக்கு நாம் பொருத்தமானவர்கள் என்பதை உண்மையில் நிரூபிப்போம்.





வாசியுங்கள் :

முதலாளித்துவத்தின் மரண ஓலமும், நான்காம் அகிலத்தின் பணிகளும்

**இடை மருவு வேலைத் திட்டம்**

விலை — 15/-

சோசலிச புரட்சியின் உலக கட்சியை கட்டி எழுப்பு!

**புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் சேருங்கள்**

பெயர் : ..............................................

முகவரி : ..............................................

கழகத்தைப் பற்றி மேலும் விபரங்கள் பெற நிரப்பிய இப்பத்திரத்தை அனுப்ப வேண்டிய முகவரி:

தேசிய செயலாளர் :

**புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்**

இல: 90, 1வது மாளிகாகந்தை ஒழுங்கை,
கொழும்பு 10.


www.padippakam.com

www.padippakam.com


# சேதவத்தை குடிசைவாசிகளுக்கு இன்னும் நிவாரணம் இல்லை

புதிய களனிப் பாலத்தின் அடியில் உள்ள சேதவத்தை கிராம சேவகர் பிரிவில் 42-47 வத்தையைச் சேர்ந்த சுமார் 25 ஏழைத் தொழிலாளிகளின் குடிசைகள் தீக்கிரையாகி நாசமாகிப் போயுள்ளன.

இக் குடிசைகளில் வாழ்ந்து வந்த தொழிலாளர்களையும் ஐஸ்கிறீம், 'பரணகோட்' வியாபாரங்களில் ஈடுபட்டு வந்த ஏழைகளையும் இங்கிருந்து கலைக்கும் பொருட்டே இத் தீவைப்பு இடம் பெற்றுள்ளது என அவர்கள் நம்புகிறார்கள்.

இந்தக் குடிசைகள் அமைந்துள்ள 'பாலம யட்ட' பகுதி அரச நிலமாக இருந்த போதிலும் யூ.என்.பி. அரசாங்க ஆதரவு பெற்ற 'எடின் ஐயா' என்ற கிராமோதய தலைவர் இம் மக்களிடம் இருந்து வாடகை அறவிட்டு வந்தார். இம் மக்கள் எதுவித மான அடிப்படை வசதிகளும் -குடிநீர், மலசலகூடம்- இல்லாமலேயே வாழ்ந்து வந்ததோடு, இவற்றுக்காக அயல் கிராமங்களுக்கு செல்லும்படி தள்ளப்பட்டனர். ஆனால் அந்த நவலோகபுர கிராம தலைவரும் இத் தேவைகளுக்காக அக்கிராமத்துள் நுழையக் கூடாது என உத்தரவு பிறப்பித்திருந்தார். இவர் 'எடின் ஐயா'வின் மருமகன் என்பது குறிப்பிடத்தக்கது.

1991 ஜூலையில் இடம் பெற்ற முதல் தீச்சம்பவத்தில் மூன்று வீடுகள் எரிந்தன. தீச்சம்பவத்தின் ஆரம்பத்தில் மக்கள் இது ஒரு குப்பிவிளக்கு சரிந்ததால் ஏற்பட்ட தீவிபத்து என்றே கருதினர். ஆனால் 'எடின்ஐயா'வீட்டில் சேவகம் செய்யும் சிரியாவும், உபாலி என்பவரும் 'மூன்று வீடுகள் மட்டுமல்ல முழு வீடுகளுக்கும் தீவைக்க வேண்டும்' என கூறிச் சென்றுள்ளனர். அத்தோடு இக் குடிசைகளில் வாழ்பவர்கள் 'வேசைகள், வெட்கம் கெட்டமிருகங்கள்' எனத் திட்டியுள்ளனர். இதைத் தொடர்ந்தே 25 குடிசைகள் தீக்கிரையாகின.

இத் தீவைப்பினைத் தொடர்ந்து இந்த ஏழை மக்களிடையே வளர்ந்த கொதிப்பினைத் தணிக்கும் நடவடிக்கைகளில் இறங்கிய இ.தொ.கா. தொண்டமான் -செல்லச்சாமி தலைமை ஒரு தொகை மோசடி வாக்குறுதிகளை வழங்கியது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக 1000/- வழங்கப்படும் எனவும்,வேறு இடங்களுக்குச் செல்லாமல் அதே இடத்திலே திரும்பவும் வீடுகட்ட ரூபா 10,000/- வழங்க ஏற்பாடு செய்திருப்பதாகவும் இவர்கள் வீராப்புடன் அறிவித்தனர். ஆனால் ஆறு மாதங்கள் கழிந்து விட்ட போதிலும் மக்களின் கைகளில் எதுவும் கிடைக்கவில்லை. அத்தோடு பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி வழங்க முன்வந்த சமூக சேவை நிறுவனங்களுக்கு எதிராகவும் 'எடின் ஐயா' பாய்ந்து விழுந்துள்ளார்.

இந்த யூ.என்.பி. காரன் ஆன 'எடின ஐயா' வினால் தமக்கு ஏற்படும் உபத்திரவங்கள் பற்றி இம் மக்கள் செல்லச்சாமியிடம் பலமுறை முறைப்பாடு செய்திருந்த போதும் அதனை நீக்க அவர் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இம்மக்களை இ.தொ.காவில் அணிதிரட்டவும்கூட அவர்கள் தயாராக வில்லை. இங்குள்ள செல்லச்சாமியின் கையாட்களான எலெஸ், பரமேஸ் ஆகியோர் 'இம் மக்கள் ஒற்றுமையில்லாத ஜாதிகள்' எனக் கூறி அணிதிரட்டும் பிரச்சனையை தட்டிக் கழித்துள்ளனர்.

இந்த தீவைப்புச் சம்பவம் சேதவத்தையில ஐக்கியமாக வாழ்ந்த ஏழை சிங்கள-தமிழ் தொழிலாளர்களை பிரிக்கும் சதியாக இடம் பெற்றுள்ளதோடு, யூ.என்.பி. அரசாங்கத்தின வீடில்லாதோருக்கு வீடு வழங்கும் 10 இலட்சம் வீடமைப்புத் திட்டத்தின மோசடியையும் அம்பலப்படுத்தியுள்ளது.

# உலகவங்கி தாக்குதல்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லுக்குச்சலுகை காட்டும் தலைமைகளுடன் சகவாழ்வுக்கு தொழிலாளர்கள் தயார் இல்லை என்பதை காட்டியது, இதனால் சமசமாஜ கம்யூனிச நவசமசமாஜ, இ. தொ. கா, சீ. எம். யூ. தலைமைகள் தொழிலாளர்களின் போராட்ட முஸ்தீபுகளை உடைக்கும் அல்லது திசைதிருப்பும் நடவடிக்கைகளில் இறங்கியுள்ளனர்.

தனியார் மயமாக்கத்துக்கு ஆதரவாக பிரச்சாரம் செய்யும் தொண்டமான் தலைமையையும் பொருட்படுத்தாமல் போராட்டத்தில் இறங்தும் பெரும் அவசியம் கொண்டுள்ள தோட்டத் தொழிலாளர்களிடம் தனியார்மயமாக்கத்தின் பின்னர் வசதி வாய்ப்புக்களைப் பெற அடையாள வேலைநிறுத்தம் செய்வோம் என சமசமாஜ — கம்யூனிச—நவசமசமாஜ சங்கத் தலைவர்கள் யோசனை கூறினர். இதனால் அந்த அடையாளவேலைநிறுத்தத்தினைத் கூட இத்துரோகிகள் கை கழுவிவிட்டனர். இதே சமயம் இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தின் மக்கள் வங்கிக் கிளை அங்கத்தினர்கள் தனியார்மய மாக்கத்துக்கு இணங்கிய தலைவர்களைப் பதவி நீக்கம் செய்தனர். புகையிரத தனியார்மயமாக்கத்துக்கு இணங்கிய சங்கத் தலைவர்கள் அங்கத்தவர்களிடமிருந்து தலை தப்பும் பொருட்டுப் 'பிரச்சாரம்' செய்ய நேரிட்டுள்ளது என்பதை டிசம்பர் 17 புதிய நகர மண்டபக் கூட்டத்தின் மூலம் காட்டினர்.

இந்த அபிவிருத்திகள் இப் பிராந்தியம் முழுவதும் ஏற்பட்டுள்ளது. நவம்பர் 29ல் இந்தியாவிலும், டிசம்பர் 2ல் பங்களாதேஷிலும் ஏற்பட்ட வேலைநிறுத்தங்கள் தனியார் மயமாக்கத்துக்கு எதிரான தொழிலாளரின கொதிப்பைக் காட்டுகின்றது, இப்போராட்டங்களை சிதறடிக்கும் பொருட்டு இந்திய நரசிம்மராவ் அரசாங்கம் கையாண்ட பொலிஸ் அரசு ஒடுக்குமுறைகளுக்கும் துரோக சீ. பீ ஐ, சீ.பீ.எம். தலைமைகளின் பின்னடிப்புக்களுக்கும் மத்தியில் 1 கோடிக்கும் அதிகமான தொழிலாளர்கள் இந்த ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தத்தில் கலந்து கொண்டனர்.

இந்த வெகுஜன இயக்கத்தினைச் சிரச்சேதம் செய்யும் பொருட்டு இந்திய மத்திய அரசாங்கமும் மாநில அரசாங்கங்களும், மற்றும் பிற்போக்கு முதலாளித்துவக் கட்சிகளும் இன, மத பூசல்களுக்கு தூபம் போடும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன. இதன் உச்சக்கட்டமாக ராஜீவ் காந்தியின கொலையின் பின்னணியில் விடுதலைப் புலிகள் — தமிழ் நாடு முதலாளிகளின் 'மாபெரும் ஈழம்' திட்டமுள்ளது என்ற பிரச்சாரத்தினை கட்டவிழ்த்துள்ளது. இதனை நரசிம்மராவ் அரசாங்கமும், ஹிந்தி முதலாளிகளும் தமிழர் விரோத சோவினிசத்தைத் தூண்டிவிடும் இலக்கில் ஆரம்பித்துள்ளன. தமிழ்நாடு முதலாளிகள் இதனை எதிர்க்கும் சாட்டில் தமிழர் இனவாதத்தினைக் கிளறிவிடும் காலம் வந்துவிட்டது என்ற ராகம் பாட தொடங்கியுள்ளன, காவேரி நீர்ப் பிரச்சினை தொடர்பாக கர்நாடக, தமிழ் நாடு மாநில அரசாங்கங்கள் மத்திய அரசாங்கத்துடன் இணைந்து இந்த இன, மத மோதுதல்களைத் தூண்டிவிட்டுக் கொண்டுள்ளன.

## எதிர்ப்புரட்சி இலக்கு

இலங்கை முதலாளிகள் ஆரம்பித்துள்ள புதிய இனவாத ஆத்திரமூட்டல்களதும் இனவாத யுத்தத்தினதும் இலக்கினைப் புரிந்து கொள்வதும், சுயாதீன வேலைத்திட்டத்தின் அடிப்படையில் போராட்டத்தில் இறங்குவதும் தொழிலாள வர்க்கத்துக்கு இன்றியமையாததாகியுள்ளது, இலங்கையில் இந்த யுத்தத்தினை நிறுத்தி அமைதியை நிலைநாட்டும் வல்லமை யூ. என். பி. அரசாங்கத்துக்கோ அல்லது வேறெந்தவொரு முதலாளித்துவக் கும்பலுக்கோ கிடையாது. இனவாத ஒடுக்குமுறையையே நோக்கமாகக் கொண்ட இவர்களுக்கும் சுரண்டலைத் தமது உரித்தாக்கிக் கொள்ள வழி தேடும் தமிழ் முதலாளித்துவத் தேசியவாதிகளுக்கும் இடையே தொழிலாள — ஒடுக்கப்படும் மக்களை அடக்கும் பொருட்டு இடம்பெறும் தற்காலிக சமரசமானது உண்மையில் மற்றுமோர் இனவாத மோதுதலுக்கான ஒரு முன்னுரையாகும்.

ஆயுதத்தினைக் கைவிட்டு பேச்சுவார்த்தைக்கு வருமாறு அழைக்கப்பட்டுள்ள முதலாளித்துவ தேசியவாத விடுதலைப் புலிகள் தலைமை பற்றிய சிங்கள முதலாளிகளின நிலைப்பாடு இது தான்: "தத்தம் இராணுவங்களில் உயிரிழந்தவர்களின எண்ணிக்கையைப் பற்றி அவருக்கு அறிவிக்கும் பொருட்டு பிரபாகரன் பகிரங்கமாக வெளியே வருவது இந்திய, இலங்கைப் படைகள் இரண்டுக்குமே அவசியம். ஆதலால் உடனடியாகவோ அல்லது பின்னரோ ரோஹண விஜயவீரவுக்கு நேரிட்டதே பிரபாகரனுக்கும் நேரிடும் என்பதைப் பற்றி ஐயம் இருக்க முடியுமா"? (சண்டே டைம்ஸ்-1991-12-22 அரசியல் நிருபர்)

(10-ம் பக்கம் பார்க்க)

# தோழர். கீர்த்தி பாலசூரியவின்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

'ஹரய' பத்திரிகையில் [illegible] வதன் மூலம் அவர்கள் தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களின மீதுஎதத்தகையதலைவிதியைத் திணிக்க முயல்கிறார்கள் என்பதை புரிந்து கொள்ள முடியும்.

காராளசிங்கம் தலைமையில் 'சக்தி' குழுவை திரும்பவும் சமசமாஜக் கட்சியினுள் கொண்டு செல்வதை எதிர்க்கவும் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் கிளையாகப் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தை அமைக்கவும், அதன் ஆரம்ப செயலாளராகப்பணிபுரியவும் தோழர் கீர்த்தி தகுதி பெற்றிருந்தார். மார்க்சிச விரோத தேசியவாத சந்தர்ப்பவாதத்துக்கு எதிராக 'சக்தி' குழுவினுள்ளும் பின்னர் 'எதிர்ப்பு' (விரோதய) குழுவினுள்ளும் போராடுவதில் தோழர்கீர்த்தி தோழர். ஸ்பைக்குடன் முன்னணியில் நின்றார். இதன் மூலம் தொழிலாளர், இளைஞர்களிடையே நனவான ஒரு மார்க்சிச முன்னணிப் படையை அணிதிரட்ட அவர் போராடினார்.

பின்தங்கிய நாடான இலங்கையிலும் இந்தியத் துணைக் கண்டத்திலும் கொதித்து வந்த தேசிய இனப்பிரச்சினை விவசாயப் பிரச்சினைகளுக்கும் உலகச் சோசலிசப் புரட்சிக்கான போராட்டத்தினுள்ளே மட்டுமே தீர்வுகாண முடியும் என்பதை நிலைநாட்டும் பொருட்டு அவர் ட்ரொட்ஸ்கியின் நிரந்தரப் புரட்சிக் கோட்பாட்டினைஅடிப்படையாகக் கொண்டார். குட்டி முதலாளித்துவ ஜனதா விமுக்தி பெரமுனைக்கு எதிராக ஒடுக்கப்படும் விவசாயிகள், இளைஞர்களை தொழிலாள வர்க்கத் தலைமையின் கீழ் சோசலிசப் புரட்சியின் [illegible] கப்படும் தமிழ் தேசிய இனத்தின் ஜனநாயக உரிமைகளை ஊர்ஜிதம் செய்யவும் அவர்களை தொழிலாள வர்க்கத்தினைச் சூழ அணிதிரட்ட கீர்த்தி போராடினார். 1968ல் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் ஸ்தாபிக்கப்பட்டதில் இருந்து வர்க்கச் சமரச துரோகத் தலைவர்களை வெளியேற்றி, தொழிலாள வர்க்கத்தின் புரட்சிகர தலைமை நெருக்கடியைத் தீர்க்க அவர் தொடுத்த போராட்டம் வரலாற்று முக்கியத்துவம் மிக்கது.

கீர்த்தியின் இந்த மரபு வழுவா மார்க்சிச நிலைப்பாடு காரணமாக பிரித்தானிய தொழிலாளர் புரட்சிக் கட்சியின் ஹீலி-பண்டா—சுலோட்டர்ஓடுகாலிகளின்வெறுப்பை அவர் திரட்டிக் கொள்ள நேரிட்டது அப்படி ஒன்றும் புதுமையல்ல. தோழர்.கீர்த்தியின் வாழ்வின் இறுதி இரண்டு ஆண்டுகளும் அனைத்துலகக் குழுவை தொழிலாள வர்க்க அனைத்துலகவாத புரட்சிகர வேலைத்திட்டத்தின் அடிப்படையில் புரட்சித் தலைமையாகக் கட்டி எழுப்புவதில் அர்ப்பணம் செய்யப்பட்டது.

இவ்வாண்டு நவம்பர் 16—17ம் திகதிகளில் பேர்லின் நகரில் நடைபெற்ற ஏகாதிபத்திய யுத்தத்துக்கும் காலனித்துவத்துக்கும் எதிரான உலகத் தொழிலாளர் மகாநாட்டுக்கு கிடைத்த வெற்றி, அனைத்துலகக் குழு நடாத்தி வந்த இடைவிடாத போராட்டத்துக்குக் கிடைத்த வெற்றியாகும். அம்மகாநாடு தோழர் கீர்த்தியின் நினைவாக நிறைவேற்றிய பிரேரணை அவரின் புரட்சிகரப் பங்களிப்புக்கு நல்ல சான்று.

"[illegible] க்கு தேசிய, சந்தர்ப்பவாத விதிமுறையை அம்பலப்படுத்தும் போராட்டத்திலும் அவ்வாறே 1983 ஆகஸ்டில் நிறைவேற்றப்பட்ட அனைத்துலகக் குழுவின் உலக முன்னோக்கினை வரைவதிலும் அனைத்துலகக் குழுவுடன் தோழர். கீர்த்தி கொண்டிருந்த நெருங்கிய அரசியல் பங்களிப்பு, ஏகாதிபத்திய யுத்தத்துக்கும் காலனித்துவத்துக்கும் எதிரான இம்மாபெரும் முக்கியத்துவம் கொண்ட உலக மகாநாட்டினை தயார் செய்யும் பணிகளிலும் உள்ளடங்கியுள்ளது. ஆதலால் அவர் இன்றும் இங்கு உயிர் வாழ்கின்றார்."

நான்காம் அகிலத்தின் அரசியல் அதிகாரத்தினை அழித்து மாசுபடுத்தியவர்களுக்கு எதிரான அரசியல் போராட்டத்தின் மூலம் அனைத்துலகக் குழுவின் கைக்குள் வென்றெடுப்பதும், நான்காம் அகிலத்தின் வேலைத்திட்டத்தின் அடிப்படையில் உலக சோசலிசம் புரட்சிக்காக அனைத்துலகத் தொழிலாள வர்க்கம் ஒடுக்கப்படும் மக்களை வழிநடாத்துவதும் தோழர். கீர்த்தியின வாழ்க்கையின இலக்காகியது. கீர்த்தியின் பங்களிப்புடன் அனைத்துலகக் குழு முதலாவது கோட்டினைத் தாண்டுவதில் இன்று வெற்றி கண்டுள்ளது. அவரின் கோட்பாட்டு, அரசியல் செல்வாக்கின் கீழ் வளர்ந்த நான்காம் அகிலத்தின் காரியாளர்கள் இரண்டாவது கோட்டைத் தாண்டச் சபதம் பூண்டுள்ளனர்.

படிப்பகம்

# எட்டியாந்தோட்ட லவண் தோட்டம்: யூ. என். பி. கொலைத்தாக்குதல்

எட்டியாந்தோட்டை தெளிகம பகுதியில் யூ.என்.பி கொலைகார ஆத்திரமூட்டலுக்கு எதிராகப் புரட்சிகம்யூனிஸ்ட் கழக அங்கத்தவர் அக்டோபர் 13-ம் திகதி தெளிகம லவண் தோட்டத்தில் பலத்த பிரச்சாரத்தில் ஈடுபட்டனர். அப்பகுதி பிற்போக்காளரதும் யூ.என்.பி அரசாங்கத்தினரதும் கொலைகார ஆத்திரமூட்டலுக்கும், சமசமாஜ, கம்யூனிச, இ.தொ.க, நவசமசமாஜ தலைமைகளது காட்டிக் கொடுப்புக்கும் எதிராக பு.க.க. நடத்திய பிரச்சாரத்தில் லவண் தோட்ட தொழிலாளர் ஆர்வமுடன் ஆதரவு வழங்கி தொழிலாளர் பாதை' 'கம்கறுமாவத்தை' பத்திரிகைகளை வாங்கியதோடு, நிதி உதவியும் வழங்கினர்.

கிராமப்புற படுகொலைகளுக்கும் தோட்டத் தொழிலாளரை அடக்குவதற்கும் எதிராக பு.க.க. பிரச்சாரத்தைத் திரிமாக்கியதையிட்டு குழப்பமடைந்த அப்பகுதி யூ.என்.பி. கொலைகாரர் பு.க.க. தெளிகம அங்கத்தவருக்கும் அவரது குடும்பத்திற்கும் மரண பயமுறுத்தல் விடுத்ததோடு பிரச்சாரத்தை குழப்பியடிக்க முயன்றுள்ளனர். அப்பிரதேசத்தில் யூ.என்.பி பிரச்சாரகர்களதும், துரோகத் தலைமைகளின் காட்டிக்கொடுப்பையும் அம்பலப்படுத்தும் பிரதான ஆயுதமாக 'தொழிலாளர் பாதை', 'கம்கறுமாவத்தை' மாறியுள்ளன.

சமசமாஜக் கட்சி சார்பு தொழிற்சங்கம் ஒன்றை கட்டி எழுப்ப முயன்ற லவண் தோட்ட தொழிலாளர் இருவரை தாக்க அப்பகுதி யூ.என்.பி தலைமைகள் கொலைகார குண்டரை அணி திரட்டியது பற்றி 'கம்கறுமாவத்தை' அம்பலப்படுத்தியிருந்தது. அப்பகுதி எம்.ஏ.டி. ஐயதிஸ்ச என்ற யூ.என்.பி. தலைவனே இக் கொலை குண்டரை ஏவியுள்ளான்.

இந்த ஜயதிஸ்ச என்ற பிற்போக்காளன், அக்டோபர் 6ம் திகதி லவண் தோட்டத்தில கிராமப்புற படுகொலைகளுக்கு எதிராக பொது வேலை நிறுத்தம் தொடர்ந்தமாறு கோரும் பெட்டிசத்தில் கையொப்பம் சேகரித்ததோடு, தொழிலாளர் பாதை' பத்திரிகை விற்கும் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த பு.க.கழக அங்கத்தினரான தர்மசேன, உதயபிரேம என்போரை தாக்க கொலைகார குண்டரை அணி திரட்டினான். அவர்களில் ஒருவன் ஜயதிஸ்சவின் கடையில் வேலைபார்க்கும் பாலகிருஸ்ணன் என்பவனாவான். அடுத்த மற்றவன் அறிமுகமாகாத ஒருபேர்வழி. வேறு சில குண்டரும் அங்கே நடமாடியதாக தெரியவருகின்றது. ஆள் நடமாட்டம் இருந்த இடத்திற்கு பு.க.க. அங்கத்தவர் வந்த சமயத்தில் ''இவர்களை கொல்'' என்று பாலகிருஸ்ணன் என்ற குண்டன் கூச்சல் போட்டான். பு.க.க அங்கத்தவர் தப்பாது காப்புக்காக கூச்சலிட்டு கொண்டுபோது இழுபறியில் விழுந்த பத்திரிகைபார்சலை எடுத்துக் கொண்டு இக் கொலைகார குண்டர் இருவரும் ஓடினர்.

தோட்டத் தொழிலாளரையும் கிராமப்புற வறியவர்களையும் காலடியில் வீட்டு நசுக்கி வரும் முதலாளித்துவ பிற்போக்காளரது அடக்குமுறையை தகர்க்க தொழிலாள — ஒடுக்கப்படுவோரை அணிதிரட்டும் போராட்டத்தை பு.க.க. இளம்சோசலிஸ்டுகளுடன் மேலும் முன்னெடுத்து செல்வர். பு.க.க அணிதிரட்டுவதில் ஈடுபடுவதால் தமது அந்தஸ்துக்கு ஆபத்து வரும் என பிற்போக்காளர் நன்கறிவர். அப்பகுதி இ.தொ.க தலைமைகளும் குண்டருடன் இணைந்துள்ளதுடன் சமசமாஜ சார்பு தொழிற்சங்க தலைமைகளும் யூ.என்.பி காரருக்கு கோழைத் தனமாக அடிபணிந்துள்ளனர்.

இக் கோழைத்தனமான தலைமைகளை நிராகரித்து விட்டு, யூ.என்.பி அரசாங்கம் உள்ளடங்கலான முதலாளித்துவ வர்க்க ஆட்சிக்கு எதிராக தொழிலாள – ஒடுக்கப்படும் மக்களையும் இளைஞர்களையும் புரட்சியாளராக அணி திரட்டப் போராடும் புரட்சி கம்யூனிஸ்ட் கழகம் - இளம் சோசலிஸ்டுகள் இயக்கத்தில் சேர தீர்மானம் எடுக்கவேண்டும்.

# சிலாபம்: நகரசபை தொழிலாளரை வீடுகளிலிருந்து கலைக்க முயற்சி

சிலாபத்தில், நகரசபை தொழிலாளர் கடந்த 75 ஆண்டுகளாக குடியிருந்து வரும் நகரசபை வீடுகளில் இருந்து அவர்களை விரட்டியடிக்கும் முயற்சியில் நகரசபை அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

செப்டம்பர் 26ம் திகதி அதிகாலை 5-30 மணியளவில் 25 குடும்பங்கள் வாழும் கிடுகினால் வேயப்பட்ட நீண்ட லயன் காம்பறைகளைக் கொண்ட இரண்டு மண்டபங்கள் எரிந்து சாம்பலாகின. அங்கு வசிக்கும் ஆண் தொழிலாளர் வேலைக்கு சென்றிருந்தனர். அவர்கள் வளர்த்து வந்த கோழிகள் பாவும் தீயில் எரிந்ததாயும், ஆடைகளை மட்டும் காப்பாற்றிக் கொள்ள முடிந்ததாயும் குடியிருப்பவர்கள் தெரிவித்தனர். பணம், நகைகள், மரச்சாமான்களும் எரிந்து சாம்பலாகியதாக தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

பத்து ஆண்டுகளுக்கு முன் சிலாபத்திலிருந்து 3 மைல் தூரத்திலுள்ள தெருநுபா மானவங்கமவில் ஒரு குடும்பத்துக்கு தலா 20 பேர்ச்சஸ் காணி வழங்குவதாக கூறி தொழிலாளரை இங்கிருந்து குடியெழுப்பும் தயாரிப்பில் நகரசபை அதிகாரிகள் ஈடுபட்டனர். இதனை தொழிலாளர் முற்றாக நிராகரித்துவிட்டனர். தம்மை நகரிலிருந்து அந்நியப்படுத்தி வேறு பகுதிக்கு அனுப்புவது தமது பாதுகாப்புக்கு மிரட்டலாகும் என்பதுடன் போக்குவரத்துக்கும் அதிக செலவும் செய்ய வேண்டியிருக்குமென அவர்கள் எடுத்துக் காட்டியிருந்தனர்.

ஒக்டோபர் 8-ம் திகதி இத் தொழிலாளர் பிரதிநிதிகள் மூவரை கொண்ட நகரசபை அங்கத்தவர் கூட்டத்தை கூட்டி, நகரசபை தலைவர் இப் பிரச்சனையை விவாதித்தார். சிலாப நகருக்குள் எந்த வோரிடத்திலாவது தமது சம்பளத்திலிருந்தும் கழிக்கப்பட்டு தவணை முறையில் அடைக்கும் வகையில் கடன் வசதி திட்டத்தின் கீழ் அல்லது நிரந்தர வீடுகளை கட்டியாவது தரவேண்டும் என தொழிலாளர் வேண்டினர். இக்கோரிக்கைக்கு சார்பாக 2 அங்கத்தவரும் எதிராக 4 அங்கத்தவரும் வாக்களித்ததுடன் நகராதிபதியும் எதிராக வாக்களித்ததாக தொழிலாளர் தெரிவித்தனர். இவர் இத்தொழிலாளரை இப்பிரதேசத்தில் இருந்து விரட்டியடிக்க முன்னணியில் நின்றவர்.

இத்தொழிலாளர் இ. தொ. கா, இலங்கை உள்ளூராட்சி தொழிலாளர் சங்கம் என்ற இரு தொழிற்சங்கங்களின் கீழ் அணிதிரண்டுள்ளனர். கம்பகா மாகாணசபை அங்கத்தவரும் இ. தொ. கா பிரதிநிதி ஆர். ஆர். ராமதாசும் இலங்கை உள்ளூராட்சி தொழிலாளர் சங்க பிரதிநிதி முனியாண்டியும் தொழிலாளரை சந்தித்து அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு காணும்வரை பிரதேசத்தை விட்டுவெளியேற வேண்டாம் என கூறியுள்ளனர். ஏதாவது புதுத கட்டி தொழிலாளரை பிரதேசத்திலிருந்து அகற்றும் தயாரிப்பு செய்கையில் இந்த தலைமைகள் ஆதரவளிப்பர் என்பதே இதன் உண்மை அர்த்தமாகும்.

எரிந்து சாம்பலான மண்டபமும், அறைகளும் கிடுகினால் வேயப்பட்டவையாகும். தொழிலாளரை இங்கிருந்து விரட்டியடிக்க செய்யப்பட்ட தயாரிப்பே என புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் எச்சரிக்கிறது.

தீவைப்பு நடந்த மறு நாளே தொழிலாளரை வீடு கட்ட வேண்டாம் என நகரசபை கேட்டுள்ளது. அகதிகள் முனீஸ்வர கோவில் மண்டபத்தில் தங்கியிருந்து விட்டு மீண்டும் தற்காலிக வீடுகளை ஓலையால் கட்டி குடிவந்துள்ளனர்.

சனாதிபதி பிரேமதாசவினால் அனுப்பப்பட்ட பொது நிர்வாக அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா தொழிலாளரை சந்தித்த வேளையில் ''தெதுறு ஓயா செல்ல எமக்கு விருப்பம் இல்லை'' என்று தொழிலாளர் தெரிவித்துள்ளனர்.

## உலகவங்கி தாக்குதல்...

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக் காட்டுமிராண்டி ஆளும் வர்க்கத்துக்கு வட-கிழ் மாகாண தமிழ் தேசிய இனத்தின் தொழிலாளர் விவசாயிகள், இளைஞர்களை ஒடுக்கும் இனவாதத்தினைதீச்சுவாலை விட்டெரியச் செய்யும் அவசியம் ... மாகாணங்களில் தொழிலாளர், ஏழை விவசாயிகள், இளைஞர்களை வெட்டிக் கொத்தி மீண்டும் இரத்த வெள்ளத்தில் மூழ்கடிப்பதும் இன்று முன்னொருபோதும் இல்லாத விதத்தில் அவசியமாகியுள்ளது. இந்த ஆளும் வர்க்கங்கள் சகல பின்தங்கிய நாடுகளதும் ஆளும் வர்க்கங்களைப் போல்- எந்தவொரு ஜனநாயகப் பணியையும் இட்டுநிரப்ப முடியாத வங்குரோத்து ஏகாதிபத்திய கைக்கூலி ஆகும் கும்பலாகும் நாட்டின் 'இறைமை'யும் 'பூகோள ஒருமைப்பாட்டை'யும காக்கவே யுத்தத்தில் ஈடுபட்டுள்ளதாகக் கூறிக் கொள்ளும் இந்த பிரேமதாச அரசாங்கம் முழு நாட்டையும் ஒரு 'முதலீட்டு சுதந்திர வர்த்தக வலய'மாகப் பிரகடனம் செய்து, ஏகாதிபத்திய பங்கு முதல் சந்தைகளில் விளம்பரம் பிரசுரிக்கின்றது. சி. ல. க. க.வும் சரி சமீபத்தில் நிறுவப்பட்ட ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியும் சரி இந்த வேலைத்திட்டத்தினை அமுல் செய்யவே சபதம் பூண்டுள்ளன.

இந்நிலையில் தொண்டமானின் யோசனைகள் 'யுத்தத்தினை நிறுத்தும்' வேலைத்திட்டமென எந்தவொரு தொழிலாள — ஒடுக்கப்படும் மக்களும் அணுவளவும் நம்பிக்கை கொள்ளக் கூடாது. யோசனைகளும் அவற்றுக்கு எதிரான ஆத்திரமூட்டும் கூச்சல்களும் இனவாத மோதுதல்களுக்கு எண்ணெய் வார்ப்பதாக உள்ளன.

வட்டமேசை மகாநாடு தொடக்கம் இந்திய-இலங்கை உடன்படிக்கை வரையிலான சகல பிற்போக்கு நடவடிக்கைகளுக்கும் ஆதரவு வழங்கிய சமசமாஜ, கம்யூனிச, நவசமசமாஜ தலைவர்கள் இன்று புதிதாக ஆரம்பமாகியுள்ள காமினி திசாநாயக்க — லலித் அத்துலத்முதலி கட்சி மேடைகளிலும் சி. ல. சு. க.வுடனும் தோள் தேய்க்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். இவர்களின் சந்தர்ப்பவாத ... பினை நவசமசமாஜ கட்சி மகாநாட்டு அரசியல் பிரேரணை காட்டுகின்றது:

''வடக்குக்கு சமஷ்டி தீர்வு முன்வைக்கப்படின் புலிகள் இயக்கம் மிகவும் கஷ்டமான நிலைக்குள் தள்ளப்படும் ... உலகிலும், இந்தியாவிலும் ஏற்படக்கூடிய சிறப்பு நெருக்குவாரம் காரணமாக அவற்றுக்கு இடமில்லையெனக் கூறி தள்ளிவிட முடியாது ... அத்தகைய யோசனையை காக்க நாம்கடமைப்பட்டுள்ளபோதிலும் இந்த அரசாங்கத்துடன் வட்டமேசை பேச்சுவார்த்தையில் நாம் கலந்து கொள்வது எதுவிதத்திலும் அவசியம் இல்லை.''

(அரசியல் பிரேரணை 'ஹரய'—1991/12/13)

'உலகிலும் இந்தியாவிலும் ஏற்படக்கூடிய சிறப்பு நெருக்குவாரம்'' என ந. ச. ச. கட்சி பப்லோவாதிகள் கூறுவது 'ஏகாதிபத்திய வாதிகளும் ஏகாதிபத்தியச் சார்பு இந்திய முதலாளிகளும் திணிக்கும் பொறிக்கிடங்குகள்' பற்றியே. 1987 இந்திய-இலங்கை உடன்படிக்கையை 'முற்போக்கு ஒப்பந்தம்' எனத் தூக்கிப்பிடித்த நவசமசமாஜ தலைவர்கள் இன்று இப்புதிய சதிகளின் பங்காளிகளாகியுள்ளனர்.

### தேசியவாதிகள்

தமிழ் ஒடுக்கப்படும் மக்களின் ஜனநாயக உரிமைகளை வென்றெடுக்க செய்ய விடுதலைப் புலிகள் இயக்கம் போன்ற எந்தவொரு முதலாளித்துவ தேசியவாதஇயக்கத்தினாலும் முடியாது. தமிழ் தேசிய இனத்தின் ஒடுக்குமுறையை அஹிம்சை வழிகளில் நிறுத்த முடியாது போனதாலேயே ஆயுதப் போராட்டத்தில் இறங்கியதாக தமிழ் முதலாளித்துவ தேசியவாத இயக்கத் தலைவர்கள் கூறினர் ஆனால் முக்கிய அடிப்படைப் பிரச்சினை ஆயுதக் கிளர்ச்சியில் இறங்குவது அல்ல என்பது இப்போது நிரூபிக்கப்பட்டுள்ளது. உண்மையில் அடிப்படைப் பிரச்சினை வேலைத்திட்டம் என்ன? அதற்குத் தலைமை தாங்கக்கூடிய வர்க்கம் எது? என்பதே, 'தமது' தொழிலாளர்கள், ஒடுக்கப்படும் மக்களைச் சுரண்டும் அவசியத்தினைக் கொண்ட முதலாளித்துவ தேசியவாதிகளின் தலைமையில்சுய நிர்ணய உரிமையை ஒடுக்கப்படும் தேசிய இனங்கள் அடைய முடியாது. இந்தேசியவாத முதலாளிகள் ஒடுக்கப்படுவோரை நசுக்கும் ஏகாதிபத்தியவாதிகளுடனும் அதற்குச் சார்பான முதலாளிகளுடனும் சேர்ந்து, சுயநிர்ணயத்தின் அடிப்படைக் கொள்கை மீதே காறித் துப்புகின்றார்கள்.

ஏகாதிபத்தியச் சார்பு ஆளும் வர்க்கம் மீண்டும் தூண்டிவிடும் இனவாதப் பிளவுக்கும், இனவாத யுத்தத்துக்கும் அடிப்படையான காலனித்துவச் சுரண்டலுக்கு எதிராக இலங்கை – தமிழ்ஈழம் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களுக்குள்ள ஒரே வேலைத்திட்டம் பாட்டாளி வர்க்க அனைத்துலகவாத வேலைத்திட்டமே. அவர்கள் தமது போராட்டத்தினை இந்தியா உட்பட இப்பிராந்திய தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களின் போராட்டங்களுடன் ஒன்றிணைக்க வேண்டும். இந்த ஐக்கியத்தினை உறுதி செய்வதன் மூலம் ஏகாதிபத்தியவாதத்தினையும், அதற்குச் சார்பான முதலாளி வர்க்க ஆட்சியையும் தூக்கி வீசும் உலக சோசலிசப் புரட்சியின் ஒரு பாகமாக இலங்கை - தமிழ்ஈழம் சோசலிச குடியரசினைக் கட்டி எழுப்பப் போராட வேண்டும். தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அடையவும், முழுத் தீவினையும் பீடித்துக் கொண்டுள்ள ஏகாதிபத்தியப் பிடியில் இருந்து விடுபடுவதற்கும் ஒரே வழி இச் சோசலிசப் புரட்சி வேலைத்திட்டமே.

கொழும்பு — 10. 1ஆவது மாளிகாகந்தை ஒழுங்கை, இலக்கம் 90, இடத்தில் வசிக்கும் ஆனந்தவக்குபுறவினால்
மஹரகம நாகஹவத்தை வீதி, 51ஆம் இலக்கத்திலுள்ள பியதாச அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

www.padippakam.com

www.padippakam.com

## உலக தொழிலாளர் மகாநாட்டு விஞ்ஞாபனம் தமிழில் பிரசுரம்

உலக ட்ரொட்ஸ்கிச இயக்க மான நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு 1991 நவம்பர் 16-17ம் திகதிகளில் பேர்ளின் நகரில் கூட்டும் உலகத் தொழிலாளர் மகாநாட்டு விஞ்ஞாபனம் தமிழில் வெளிவந்துள்ளது. நா. அ. அ. கு. வின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தினால் வெளியிடப்பட்டுள்ள இந்த முன்நோக்கு, வேலைத் திட்ட அறிக்கையை வாங்கிப் படிக்கும் படியும், ஏகாதிபத்தியத்தியத்தையும், தேசிய முதலாளி வர்க்கத்தையும் தூக்கி வீசும் போராட்டத்தின் அடித்தளமாக அதைக் கொள்ளும்படியும் நாம் சகல தொழிலாள, ஒடுக்கப் படும் மக்களையும் வேண்டுகின்றோம்.

அனைத்துலகக் குழுவின் இந்த விஞ்ஞாபனம், உலக முதலாளித்துவத்தின் முரண்பாடுகளையும். உலகப் பொருளாதாரமும் தனிப்பட்ட சொத்துடமையைப் பேணும் தேசிய அரசுகளும் எங்ஙனம் முரண்பட்டு மோதிக் கொள்கின்றன என்பதையும், உலக ஏகாதிபத்திய ஆளும் வர்க்கங்கள் உலகத்தினை மீண்டும் கூறுபோடும் மூன்றாம் உலக யுத்தத்துக்கு செய்யும் தயாரிப்புக்களையும் நுணுக்கமாக ஆய்வு செய்துள்ளது.

ஈராக்குக்கு எதிரான அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்தியவாதிகளின் காட்டுமிராண்டி ஆக்கிரமிப்பு யுத்தம் இதனைத் தெளிவுபடுத்தியது. அத்தோடு இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் — நான்கு தசாப்தங்களுக்கு மேலாக நிலவிவந்த 'சமபல நிலை இன்று தகர்ந்து போயுள்ளது. இந்த அரசியல், பொருளாதார அபிவிருத்திகள் இன்றைய சகாப்தம் 'ஏகாதிபத்திய யுத்தங்களதும் புரட்சிகளதும் சகாப்தம்' என்ற லெனினின் ஆய்வினை மீண்டுமோர் முறை ருசுப் படுத்தியுள்ளது. முன்னணிக்கு கொணர்ந்துள்ளது.

அனைத்துலகக் குழு இன்றைய ஏகாதிபத்திய நெருக்கடி, உலக வர்க்கப் போராட்டத்தின் வரலாற்று அபிவிருத்தியின் புதிய கட்டத்தினை எங்ஙனம் குறிக்கின்றது என்பதை வர்க்கப் போராட்டத்தின் சர்வலோபாய அனுபவங்களுடன் ஒப்பிட்டு விளங்குகின்றது. சோவியத் யூனியனின் கொர்பச்சேவ் அதிகாரத்துவம் முதல் திரிபுவாதிகள் வரையிலான சகல தேசியவாத சந்தர்ப்பவாதிகளதும வீழ்ச்சியையும் இவற்றுக்கும் உலக முதலாளித்துவ நெருக்கடிக்கும் இடையிலான பிரிக்க முடியாத உறவையும் இந்த விஞ்ஞாபனம் சுட்டிக் காட்டுகின்றது. இந்திய துணைக் கண்டத்தில் ஏகாதிபத்திய யுத்தமும், காலனித்துவ மயமாக்கலும் எந்தவிதத்தில் உருவெடுத்துள்ளன என்பதை ஆய்வு செய்யும் இந்த விஞ்ஞாபனம், உலக சோசலிசப் புரட்சி வேலைத்திட்டத்துக்கு புறத்தே எந்தவிதமான 'ஏகாதிபத்திய எதிர்ப்பு' போராட்டங்களும் இடம் பெற முடியாது என்பதை நிரூபித்துக் காட்டியுள்ளது. சகல போராளிகளும் அவசியம் படிக்க வேண்டிய நூல்.




---

இலங்கையில் செய்திப் பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டது.

**தொழிலாளர் பாதை** 2/-

● மாதமிரு இதழ் — 409 ● 1991 ஆகஸ்ட் 12 திங்கட்கிழமை

# இனவாத யுத்தத்தினால் சர்வாதிகார தயாரிப்புக்கள் பலமடைகிறது

பிரேமதாச அரசாங்கம் ஆனையிறவை மீண்டும் கைப்பற்றி, வட—கீழ் மாகாணங்களில் தமிழீழ விடுதலைப் போராளிகள், தொழிலாளர்கள், ஏழைகளைக் கொன்று தள்ள முன்னொருபோதும் இல்லாத அளவிலான திட்டங்களைத்தயார் செய்துள்ளது. இந்த இனவாத யுத்தத்துக்கு எதிராக பாட்டாளி வர்க்க வேலைத்திட்டத்தின் அடிப் படையில் அணிதிரளுமாறு புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் தொழிலாளர்களையும் ஒடுக்கப்படும் மக்களையும் வேண்டுகின்றது. இந்த இனவாத யுத்தத்தினை உக்கிரமாக்கும் திட்டத்துடன் இணைந்த முறையில் தென் மாகாணங்களில் தொழிலாளர்— ஒடுக்கப்படும் மக்களை நசுக்கித் தள்ளும் காட்டுமிராண்டித் தாக்குதல்களை கட்டவிழ்த்துவிடவும் பிரேமதாச அரசாங்கம் தயாராகி வருகின்றது என புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் எச்சரிக்கை செய்கின்றது.

முதலாளித்துவ அரசாங்கத்தின் முழுப்பலத்தையும் கொண்டு, உக்கிரமாக்கியுள்ள இந்த யுத்தத்தினை தொழிலாளர்கள்—ஒடுக்கப்படும் மக்களின் யுத்தமாகக் காட்டவும் தமிழர் விரோத இனவாத வெறியை கட்டவிழ்க்கவும் பிரேமதாச அரசாங்கமும் சி. ல. சு. க உட்பட சகல முதலாளித்துவக் கட்சிகளும் முதலாளித்துவ பத்திரிகைகளும் தலைகீழாக நின்று வருகின்றன. முதலாளிகள் மட்டுமன்றி இந்த இனவாத யுத்தத்துக்குச் சாயம் தடவும் சமசமாஜ - ஸ்டாலினிச நவசமசமாஜ — இ. தொ. கா. அமைப்புக்களின் தலைவர்களின் எதிர்ப்புரட்சி நடவடிக்கைகளை வன்மையாகக் கண்டனம் செய்யும் பு. க. க. பாட்டாளி வர்க்கத்தின் இந்தக் கங்காணிகளை வெளியேற்றி பாட்டாளி வர்க்க வேலைத் திட்டத்தின் அடிப்படையில் போராடும் புரட்சித் தலைமையைக் கட்டி எழுப்ப முன் வருமாறு தொழிலாளர்களை

(12-ம் பக்கம் பார்க்க)

---

## இளம் சோசலிஸ்டுகள் 10வது தேசிய மகாநாடு:


# புரட்சிகரத் தலைமையை கட்டி எழுப்ப அழைப்பு

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் இளைஞர் இயக்கமான 'இளம் சோசலிஸ்டுகள்' உலக சோசலிசப் புரட்சி வேலைத்திட்டத்துக்குதொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களை அணிதிரட்ட நடாத்தி வரும் போராட்டத்தின் வரலாற்றுத் திருப்பு முனையைக் குறிக்கும் விதத்தில் தமது 10வது தேசிய மகாநாட்டினை ஜூலை 28ல் கொழும்பில் நடாத்தினர்.

கொழும்பு பொதுநூலக கேட்போர் கூடத்தில் நாள் பூராவும் நடைபெற்ற இம் மகாநாட்டில் இலங்கையின் நாலாபாகங்களில் இருந்தும் 150க்கும் அதிகமான தொழிலாள ஒடுக்கப்படும் இளைஞர்கள் பங்கு கொண்டனர். ஏகாபத்திய உலக யுத்தத்துக்கும் காலனித்துவத்துக்கும் எதிராக உலகத் தொழிலாள வர்க்கத்தை அணிதிரட்டும் போராட்டத்துக்கும் அத்துடன் இணைந்த முறையில் இலங்கை உட்பட இந்தியத் துணைக்கண்டம் பூராவும் ஏகாதிபத்தியச் சார்பு முதலாளித்துவ ஆட்சிகளை தூக்கி வீசும் புரட்சிகரப் போராட்டத்துக்கும் தம்மை அர்ப்பணிக்க இவர்கள் முடிவு செய்தனர்.

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு கூட்டவுள்ள ஏகாதிபத்திய உலக யுத்தத்துக்கும், காலனித்துவத்துக்கும் எதிரான தொழிலாளர்களின் உலக மகாநாட்டிற்கு ஆதரவு தெரிவிக்கும் பிரேரணை இந்த இளைஞர்

(11-ம் பக்கம் பார்க்க)



இளம் சோசலிஸ்டுகள் மகாநாட்டில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினர்.

---

**வடக்கு — கிழக்கில் இருந்து இராணுவத்தை வெளியேற்று!**

படிப்பகம்

## 'இளம் சோசலிஸ்டுகள்' 10வது தேசிய மகாநாடு:

# "நாம் சகாப்த நிர்மாணப் பணிக்குத் தோள் கொடுத்துள்ளோம்"

### — இளம் சோசலிஸ்டுகள் தேசிய செயலாளர்



தோழர். சமன் குணதாச உரைநிகழ்த்துகிறார்.

''இளம் சோசலிஸ்டுகள்'' 10வது தேசிய மகாநாடு மிகவும் தீர்க்கமான சகாப்த நிர்மாணப் பணிக்குத் தோள் கொடுத்துள்ளது'' என மகாநாட்டின் அரசியல் அறிக்கையைச் சமர்ப்பித்துப் பேசிய அதன் மாஜி—தேசியச் செயலாளர் தோழர் சமன் குணதாச குறிப்பிட்டார்.

''ஏகாதிபத்திய மையமான அமெரிக்கா, ஐரோப்பா தொடக்கம் ஆசியா, ஆபிரிக்காவின் முனை வரையுள்ள இளைஞர்களுக்கு ஏகாதிபத்தியம் வேலையின்மை, பட்டினி, யுத்தம், மரணத் தினையே வழங்கியுள்ளது. அமெரிக்காவில் 5 இளைஞர்களுக்கு ஒருவர் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்து கொண்டுள்ளனர். அமெரிக்காவில் 18 வயதுக்குக் கீழ்ப்பட்ட இளைஞர்களே மோசமான வறுமையால் பீடிக்கப்பட்டுள்ளனர். 5 இலட்சம் பேர் ஆண்டுதோறும் கல்வியில் இருந்து வெளியேற்றப்படுகின்றனர். அமெரிக்காவில் வேலையின்மை நூற்றுக்கு 8.5%. பிரித்தானியாவில் 30 இலட்சம் பேருக்கு தொழில் இல்லை. அவுஸ்திரேலியாவில் 10 இலட்சம் பேர் வாழும் கைத்தொழில் நகரான லிவர் பூலில் வேலையற்றோர் வீதம் நூற்றுக்கு 30%: இந்தியாவில் வேலையற்றோர் 13 கோடி.''

இலங்கையில் வட — கிழ் மாகாணத்தில் இடம்பெறும் இனவாத யுத்தமும் தென் மாகாணங்களில்நடைபெறும் கிராமப்புறப் படுகொலைகளும் இந்த உலக நிலைமையின் வெளிப்பாடே எனச் சுட்டிக் காட்டிய தோழர். சமன். தொழிலாளர்— விவசாயிகளுக்கு எதிரான தாக்குதல்கள் இளைஞர்களுக்கு எதிரான பயங்கரங்களுடன் இணைந்து கொண்டுள்ளன எனக் குறிப்பிட்டார். ஏகாதிபத்திய சூறையாடல்களுக்கு காணிகளை பலியாக்குவதன் மூலம் அரசாங்கம் இளைஞர்களைப் பன்னாட்டு கம்பனிகளுக்கு அடிமைகளாக்கிவரும் முறைமையைத் தெளிவுபடுத்திய சமன், வேலையின்மையைப் பாவித்து மாதம் ரூபா 700 - 1000 அற்ப சொற்ப சம்பளத்துக்கு இளைஞர்களை தொழில் பயிலுனர்கள் என்ற பேரில் திரட்டி, சுதந்திர வர்த்தக வலயங்களில் அடிமை முகாம்கள் அமைக்கப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டார்.

சுதந்திர வர்த்தக வலயம், இரத்மலானை கைத்தொழில் வலயம் போன்ற இடங்களில் சுரண்டல்களை உக்கிரமாக் கும்படிஏகாதிபத்தியவாதிகள் நெருக்கி வருகின்றார்கள். தோட்டத்துறை, அரசாங்கத் துறைகளை முழுமனே தனியார்மயமாக்கவும், இலவசக் கல்வி போன்ற சேவைகளை அடியோடு அழித்தொழிக்கவும் ஏகாதிபத்திய வங்கியாளர்கள் செயல்பட்டு வருகின்றார்கள். வட — கிழ் மாகாண ஒடுக்கப்படும் தமிழ் மக்களை நசுக்கும் பொருட்டு இனப் படுகொலை யுத்தம் தொடுக்கப்பட்டுள்ளது. இவை எல்லாம் ஏகாதிபத்திய காலனிமயமாக்கல் வேலைத்திட்டத்திற்கு கீழ்ப்பட்ட-பிரேமதாச அரசாங்கத்தின் நடவடிக்கைகள்.

### முதலாளித்துவ நெருக்கடி

''முதலாளித்துவ அமைப்பினுள் அராஜக உற்பத்தி காரணமாக ஏற்பட்டுள்ள மேலதிக உற்பத்தியும் இலாப வீழ்ச்சியும் நெருக்கடியைச் சுட்டிக் காட்டுகின்றது. உற்பத்திச் சக்திகளுக்கும் உற்பத்தி உறவுகளுக்கும் இடையேயான மோதுதல் முதலாளித்துவ நெருக்கடியின் அடிப் படையாக விளங்குகின்றது. தனிப்பட்ட சொத்து உரிமைகளைக் காக்கும் தேசிய அரசு முறையுடன் உலக உற்பத்தி உக்கிரமாக மோதிக் கொள்கின்றது.

'இன்று முதலாம் இரண்டாம் உலக யுத்தங்களுக்கு இட்டுச் சென்ற நெருக்கடி மோசமான முறையில் தலை நீட்டியுள்ளது. 'புதிய உலக அமைப்பு' பற்றி ஜோர்ஜ் புஷ் குறிப்பிடும் போது அது காலனிகளை தேடிக் கொள்ளும் அவசியத்தினைச் சுட்டிக் காட்டுகின்றது. ஈராக் யுத்தம், ஏகாதிபத்தியத்தின் இந்த புதிய உலக அமைப்பு என்னவென்பதை தெளிவு படுத்தி உள்ளது. வியட்னாம், லிபியா, பனாமாவை ஆக்கிரமித்தவர்கள்—மிலேச்ச மாபியாகாரர்களுக்கு நிதி வழங்குபவர்கள் குவைத் மக்களை இரட்சிக்க ஆக்கிரமிப்புச்செய்தார்கள் என்பதை நம்புவதற்கு எவரும் இல்லை.'' என்றார்.

இந்த ஈராக் யுத்தத்தின் பின்னர் ஏகாதிபத்திய நாடுகளுக்கு இடையே ஏற்பட்டுள்ள மோதுதல்களையும், கழுத்தறுப்புக்களையும் விபரிக்கையில் தோழர். சமன் கூறியதாவது: ''இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் முதலாளித்துவ நாடுகளிடையே மோதுதல் ஏற்படுவதைத் தவிர்க்கும் பொருட்டு அமைக்கப்பட்ட GATT போன்ற அமைப்புக்கள் தகர்ந்து போயுள்ளன. ஏகாதிபத்திய ஏழு வல்லரசுகளின் மகாநாட்டில் கலந்து கொண்டவர்களால் எந்தவொரு உடன்பாட்டுக்கும் வரமுடியாது போய்விட்டது.''

காலனித்துவ வேலைத்திட்டத்தின் கீழ் தேசிய முதலாளித்துவத் தலைவர்களின் நடைமுறையை விபரித்த தோழர். சமன். முதலாளித்துவத்தினைத் துடைத்துக் கட்டும் உலக சோசலிசப் புரட்சி வேலைத்திட்டத்தின் கீழே மட்டுமே தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்கள் விடுதலை அடையமுடியும் என்றார்.

ஸ்டாலினிசஅதிகாரத்துவம் ஏகாதிபத்தியத்தின் முக்கிய எதிர்ப்புரட்சி ஏஜன்சியாகி விட்டது என்ற நான்காம் அகிலத்தின் ஆய்வின் பிழையற்ற தன்மை இன்று கோடானுகோடி மக்கள் மத்தியில் ருசுவாகி வருவதாகக் குறிப்பிட்ட சமன், சோவியத் யூனியன், கிழக்கு ஐரோப்பாவில் முதலாளித்துவத்தினை புனருத்தாரணம் செய்ய ஸ்டாலினிச அதிகாரத்துவம் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளை விளக்கினார்.

இந்நிலையில் உலகம் பூராவுமுள்ள குட்டி முதலாளித்துவ தீவிரவாத இயக்கங்கள் ஏகாதிபத்திய திட்டங்களின் ஏஜன்டுகளாக மாறிய முறையைத்தெளிவுபடுத்திய சமன். மக்கள் விடுதலை முன்னணி (ஜே. வி. பி) பாசிச இயக்கமாகிய வரலாற்றையும் மாநாட்டில் தெளிவுபடுத்தினார்.

''நான்காம் அகிலத்தினுள் தோன்றிய பப்லோவாத சந்தர்ப்பவாதிகள் - ஸ்டாலினிச அதிகாரத்துவத்துக்கு அடிபணிந்த இந்தச் சந்தர்ப்பவாதிகள் இன்று ஏகாதிபத்தியத்துக்குச்சேவைசெய்யபுதிய மட்டத்திலான செயல்முறைகளில் ஈடுபட்டுள்ளனர். 1991 பெப்ரவரியில் நடைபெற்ற அவர்களின் மகாநாட்டில் பேசிய ஏர்ணஸ்ட் மண்டேல் என்ற பப்லோவாதி — எந்தவொரு அமைப்புடனும் வேலைத்திட்டம் பற்றிக் கலந்துரையாடத் தாம் தயார் எனக் குறிப்பிட்டுள்ளார்.

''நா. அ. அ. குழுவுடன் பிளவுபட்டு, வலதுசாரிகள் பக்கம் சென்ற பிரித்தானிய தொழிலாளர் புரட்சிக் கட்சி ஓடுகாலிகளின் தலைவரான கிளிப் சுலோட்டர், சோவியத் யூனியன் சம்பவங்களையிட்டு தாம் புதுமையடைந்ததாகக் குறிப்பிட்டுள்ளார். மற்றோர் ஓடுகாலியான மைக்கேல் பண்டா, அனைத்துலகவாதம் என்பது தேசிய அரசு ஆட்சிகளைச் சிருஷ்டிப்பதும், பாதுகாப்பதுமே எனக் கூறியுள்ளார். இவை தற்செயலானவை அல்ல. இவர்கள் குழம்பிப்போனஏகாதிபத்தியவாதிகளின் குட்டி முதலாளித்துவ ஏஜன்டுகளாகத் தோன்றியுள்ளனர். நா. அ. அ. கு. வின் இலங்கைப் பிரிவான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் இளைஞர் இயக்கம் என்ற முறையில் நாம் இந்த நெருக்கடியை முன்கூட்டியே கண்டோம் என்பதைப் பெருமிதத்துடன் கூறிக்கொள்கின்றோம். இதனாலேயேஅனைத்துலகக் குழுவையும் அதன் இளைஞர் இயக்கத்தையும் கட்டி எழுப்புவது தீர்க்கமானது எனச் சுட்டிக்காட்டிப் போராடி வந்தோம்.

''மண்டேல், சுலோட்டர் அல்லது மற்றும் சந்தர்ப்பவாதிகளாகட்டும். நளின் டி. சில்வா, தயான்ஜயதிலகவகையறாவைச் சேர்ந்த குட்டி முதலாளித்துவ ஏஜன்டுகளாகட்டும் சொல்வதென்ன? முதலாளித்துவம் மாபெரும் சக்தியாக உலகில் ஆளுமை கொண்டுள்ளது. தொழிலாள—ஒடுக்கப்படும் மக்கள் அதன் பலிகடாக்களாக விளங்க வேண்டும்!

ஆனால் நாம் இதிலிருந்து வேறுபட்ட சித்திரத்தினையே காண்பதாகக் குறிப்பிட்ட தோழர். சமன், உலகில் போலவே இலங்கையிலும் வளர்ச்சி கண்டுள்ள தொழிலாளர்களதும், இளைஞர்களதும் போராட்டங்களின் அபிவிருத்தியைச் சுட்டிக்காட்டி அதனை நிரூபித்தார்,

### இலங்கை — தமிழ் ஈழம்

இலங்கை — தமிழ் ஈழம் சோசலிச குடியரசினை ஸ்தாபிதம் செய்யும் வேலைத்திட்டத்தின் மூலம் மட்டுமே தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை உத்தரவாதம் செய்ய முடியும் எனக் குறிப்பிட்ட தோழர். சமன், விடுதலைப் புலிகள் தலைமையின் காட்டிக்கொடுப்பு பற்றி பின்வருமாறு குறிப்பிட்டார்.

'விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர்கள், இளைஞர்களின் மாபெரும் தியாகங்களைப் பாவித்து, இந்திய — இலங்கை முதலாளி வர்க்கங்களுடன் அல்லது ஏகாதிபத்தியவாதிகளுடன் சமரசத்தினை சிருஷ்டிக்க முயற்சிக்கிறார்கள்,'' என்றார்.

### தொழிலாளர் பாதுகாப்பு

முதலாளித்துவ அரசினதும் குண்டர்களதும் தாக்குதல்களில் இருந்து தொழிலாளி வர்க்க அமைப்புக்களைக் காக்க தொழிலாளர் பாதுகாப்பு படை அணிகள் அமைக்கப்பட வேண்டியதன் அவசியத்தினை வலியுறுத்திய சமன், தொழிற்சங்கங்களுள் மாற்று புரட்சித் தலைமையை கட்டி எழுப்ப இளம் தொழிலாளர்களை முன்னணியில் நின்று போராடுமாறு வேண்டினார்.

'இளம் சோசலிஸ்டுகள்' முன்வைத்துள்ள முன்நோக்கினையும் வேலைத்திட்டத்தினையும் தமக்குப் புறம்பான ஒன்றாகக் கொள்ளாமல் அதனை தமது வாழ்க்கையின் ஒரு பாகமாகக் கொண்டு போராடும்படி தோழர். சமன் மகாநாட்டுக்கு வருகை தந்த இளைஞர்களை வேண்டிக் கொண்டார்.

மனித இனத்தின் விடுதலைக்காக நாம் போராடுவதானால் நாம் எந்தவொரு தடைக்கும் தலைகுனிய வேண்டியதில்லை என்ற கார்ல் மார்க்சின் இளமைக்கால ஆக்கங்களை நினைவு கூர்ந்த தோழர். சமன், நவம்பர் 16ம் 17ம் திகதிகளில் பேர்ளின் நகரில் இடம் பெறவுள்ள உலக தொழிலாளர் மகாநாட்டைக் கட்டி எழுப்புவதற்கான அடிப்படையை விஸ்தரிக்கப் போராடும்படி வேண்டினார்.

www.padippakam.com

www.padippakam.com



# தோழர். பியதாசவின் வழியை கடைப்பிடியுங்கள்

## நினைவு தினக் கூட்டத்தில் பு. க. க. வேண்டுகோள்


புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக அங்கத்தவரும், இராஜாங்கனை அமைப்பாளருமான தோழர். ஆர். பி. பியதாச யூ. என். பி. இனவாதிகளால் படுகொலை செய்யப்பட்ட 12வது ஆண்டு நிறைவு நினைவுக் கூட்டம் ஜூலை 17ம் திகதி இராஜாங்கனை பழைய பொலிஸ் நிலைய சந்திக்கு அருகே உள்ள பொது மயானத்தில் நடைபெற்றது. தோழர். பியதாச 1979 ஜூலை 17ம் திகதி கைக்கூலி கொலைகாரர்களால் கொலை செய்யப்பட்டார்.

இந்த நினைவுக் கூட்டத்திற்கு தோழர். பியதாசவின் தாயார், சகோதரர்கள், ஆதரவாளர்களும் பிரதேச விவசாயிகளும், இளைஞர்களும் வருகை தந்திருந்தனர். பு. க. க, இளம் சோஷலிஸ்டுகள் சார்பில் பு. க. க. அங்கத்தினர்கள் மலர்வளையம் சாத்தி அஞ்சலி செய்ததோடு இரண்டு நிமிடங்கள் மௌனமும் அனுஷ்டிக்கப்பட்டது.

1979 ஜூலையில் யூ.என்.பி அரசாங்கம் தமிழ் தேசிய இனத்தினருக்கு எதிராக பயங்கரவாத தடைச் சட்டத்தைக் கொணர்ந்ததோடு பிரிகேடியர் வீரதுங்க தலைமையில் தமிழ் இளைஞர்களை வேட்டையாடும் நடவடிக்கைகளிலும் இறங்கியது. இச்சமயத்தில் தோழர். பியதாச முதலாளித்துவ யூ. என். பி. அரசாங்கத்தின் இனவெறிப் பிரச்சாரத்துக்கு எதிராக சிங்கள ஏழை விவசாயிகளிடையே தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமைக்கு ஆதரவான பிரச்சாரத்தில் ஈடுபட்டு வந்தார்.

தோழர். பியதாசவின் இந்தக் கொள்கை சார்ந்த நிலைப்பாடு காரணமாக அவர் பல முறை இராஜாங்கனைப் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டதோடு, இடைவிடாத வேட்டைகளுக்கும் இலக்காகி வந்தார். இறுதியில் அவர் பொலிசாரின்பக்கபலத்துடன் கூடிய கைக்கூலி கொலைகாரர்களால் கொலை செய்யப்பட்டார். இந்த ஒடுக்குமுறைகளுக்கு மத்தியிலும் பொலிசாருடன் கூட்டாகத் தொழிற்பட்டு வந்த நவசம சமாஜக் கட்சி ஆதரவாளர்கள் தோழர். பியதாசவின் கொலையின் அரசியல் உள்ளடக்கத்தை மூடிமறைக்கும் பொருட்டு இதனைத் 'தனிப்பட்ட' கொலையெனக் காட்டும் கடைகெட்ட பிரச்சாரங்களிலும் ஈடுபட்டிருந்தனர்.

கிராமப்புற விவசாய இளைஞனாகப் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் பக்கம் ஈர்க்கப்பட்ட தோழர் பியதாச, தொழிலாள வர்க்கத்துக்கும் விவசாயிகளுக்கும் இடையேயான புரட்சிகரப் பிணைப்பை ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தை உணர்ந்ததோடு அந்த இலக்கினைப் பிற்போக்குத் தேசியவாதங்களுக்கு எதிராக அனைத்துலக முன்நோக்கின் அடிப்படையிலேயே ஊர்ஜிதம் செய்ய முடியும் என்பதில் உறுதியாக இருந்தார்.



தோழர். பியதாசவின் நினைவுத் தூபிக்கு அருகில் இடம்பெற்ற நினைவுக் கூட்டம். தூபிக்கு வலப்புறமாக நிற்பவர் பியதாசவின் தாயார்.

ஜூலை 17ம் திகதி இராஜாங்கனையில் நடைபெற்ற நினைவுதினக் கூட்டத்தில் பேசிய பு. க. க. மத்திய குழு உறுப்பினர் தோழர். டபிள்யூ ஏ. சுனில் கூறியதாவது: 12 ஆண்டுகளின் பின்னர் இன்று தோழர் பியதாசவை நினைவு கூரும் இவ்வேளையில் முன்னொரு போதும் இல்லாத விதத்தில் அனைத்துலக வேலைத்திட்டம் ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது. அவர் உலக சோசலிசப் புரட்சியின் பேரில் உயிர்த்தியாகம் செய்தார். வட - கிழ் மாகாண தமிழ் ஒடுக்கப்படும் தேசிய இனத்துக்கு எதிரான யுத்தம் இனப்படுகொலை யுத்த மட்டத்துக்கு உயர்ந்துள்ளது. கிராமப்புற ஏழைகளுக்கும் தமிழ் ஒடுக்கப்படும் மக்களுக்கும் எதிரான தாக்குதல், தமிழ் தேசிய இனத்தினதும் ஏழை விவசாயிகளதும் பிரச்சினையைத் தீர்ப்பதில் முதலாளி வர்க்கம் முழுமனே தோல்வி கண்டுவிட்டதைச் சுட்டிக்காட்டுகின்றது'' என்றார்.

தோழர். பியதாசவை நினைவுகூர வருகை தந்திருந்த அனைவரையும் அவர் கடைப்பிடித்த வழியில் பயணம் செய்யுமாறு தோழர். சுனில் வேண்டிக்கொண்டார்.

---

### சமசமாஜ — கம்யூனிச - நவசமசமாஜ தலைவர்கள்

# சந்திரசேகரனை விடுதலை செய்யும் பிரச்சாரத்தில் இறங்காதது ஏன்?

மலையக மக்கள் முன்னணித் தலைவர் பி. சந்திரசேகரன், செயலாளர் பி. ஏ. காதர், உப. தலைவர் டீ. எச் தர்மலிங்கம் ஆகியோரை விடுதலை செய்யும் பிரச்சாரத்தில் இறங்கும்படி 'தொழிலாளர் பாதை'யும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் தொழிலாள வர்க்கத்தை வேண்டுகின்றன.

சந்திரசேகரனும் ஏனையோரும் கைது செய்யப்பட்டு ஒரு மாதம் கடந்துவிட்டது. அரசாங்கத்தையும் பொலிசாரையும் தவிர ஏனையோர் இத்தொழிற்சங்கத் தலைவர்கள் எங்கிருக்கிறார்கள் என்பதை அறியார்கள். விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் தொடர்பு இருந்ததாலேயே இவர்கள் கைது செய்யப்பட்டதாக அரசாங்கம் கூறிக் கொண்டது,

நானாவிதமான முன்னணிகளில் சந்திரசேகரனுடன் கூடிக் குலாவி வந்த சமசமாஜ கம்யூனிச, நவசமசமாஜ, அ. லி. சே. ச. தலைவர்களைப் போலல்லாது புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்துக்கும் சந்திரசேகரனின் மலையக மக்கள் முன்னணி அரசியலுக்கும் இடையே ஆழமான முரண்பாடுகள் உள்ளன. இருந்த போதிலும் பு.க.க, மலையக மக்கள் முன்னணி தலைவர்களை விடுதலை செய்யும் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளது. ஆனால் இந்த சமசமாஜ கம்யூனிச, நவசமசமாஜ, அ. லி. சே, ச. தலைவர்கள் — சந்திரசேகரனின் நண்பர்கள் — சந்திரசேகரன் உட்பட சகலரையும் விடுதலை செய்ய பிரச்சாரம் செய்ய மறுப்பது ஏன்?

காரணம் மிகவும் தெளிவானது: இத்தலைவர்கள் தமிழ் ஒடுக்கப்படுவோரை நசுக்கும் இனவாதயுத்தத்தின் ஆதரவாளர்கள்; இனவாத முதலாளித்துவ அரசியலுக்கு அடிபணிந்தவர்கள்; முதலாளித்துவ அரசின் பாதுகாவலர்கள்.

முதலாளித்துவத் தலைவர் ஒருவர் முதலாளித்துவ அரசின் ஒடுக்குமுறைக்கு உள்ளாகும் போது கூட அதை எதிர்ப்பது தொழிலாள வர்க்கத்தின் நீண்டகாலபாரம்பரியமாகும். இதற்குக் காரணம்? ஒடுக்குமுறைக்கு உள்ளாகும் முதலாளி புரட்சியாளனாகவோ அல்லது தொழிலாள வர்க்க ஆதரவாளனாகவோ இருப்பதன்று. மாறாக அந்த ஒடுக்குமுறை தொழிலாள — ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராக ஒடுக்குமுறை அரசஇயந்திரத்தினைப் பலப்படுத்துவதாகும்; தயார் செய்வதாகும். சந்திரசேகரன் வேறு கோலத்தில் நின்று வந்தாலும் அவர் முதலாளித்துவ தலைவர் அன்று. சமசமாஜ, கம்யூனிச, நவசமசமாஜ கட்சித்தலைவர்களைப்போலவே அவரும் அரசியலைக்கொண்டு நடாத்தும் ஒரு குட்டி முதலாளித்துவ, சந்தர்ப்பவாத தொழிற்சங்கத் தலைவரே. அவர் விடுதலை புலிகள் இயக்கத்துடன் தொடர்பு கொண்டிருந்ததாக பொலிசாரும் அரசாங்கமும் கூறிக்கொள்கின்றன. தொழிற்சங்கம் உள்ளடங்கலான தொழிலாளர் வர்க்க அமைப்பு யாருடன் தொடர்பு கொள்ள வேண்டும் என்பதை தீர்மானம் செய்ய முதலாளித்துவஅரசாங்கத்துக்கும்பொலிசுக்கும்உள்ள உரிமை என்ன? எந்தவொரு தொழிலாளர் அமைப்பினதும் தலைவரையும் கடத்திச் செல்லவும், சதிக் குற்றச் சாட்டுச் சுமத்தவும். தண்டனை விதிக்கவும் அரசாங்கம் செயலில் இறங்கியுள்ளது. சந்திரசேகரன் சம்பவம் மூலம் இது தெளிவாகி உள்ளது.

சந்திரசேகரன் சம்பவம், தொழிலாளர் இயக்கத்துக்கு எதிராக அரசாங்கம் திணிக்கப் போகும் ஒரு தொகை புதிய தாக்குதல்களின் ஆரம்பம் என்பதை இத்தலைவர்கள் அறிவர். தோட்டத்துறையிலும் நகர்ப்புறத்திலும் இலட்சக்கணக்கான தொழில்களை நாசமாக்கும் நடவடிக்கையில் அரசாங்கம் இறங்கியுள்ளது. எனவேதான் அரசாங்கத்துக்கு தொழிலாள வர்க்கத்தினை கிலியடையச் செய்வது அவசியமாகி உள்ளது.

இந்நிலையில் சகல தொழிலாளர்களும் தம்முன்னால் உள்ள ஆபத்தினைப் புரிந்து கொள்வது அவசியம். அதாவது, அரசாங்கம் தொடுக்கவுள்ள இத்தாக்குதல்களின் புதிய கட்டத்தையும், அதற்கு ஆதரவு தரும் தலைவர்களின் எதிர்ப்புரட்சி மௌனத்தையும் இனங்காண வேண்டும், தொழிலாள வர்க்கமும் ஒடுக்கப்படும் மக்களும் சந்திரசேகரன் உள்ளடங்கலான தொழிற்சங்கத் தலைவர்களை விடுதலை செய்யும்படி கோரும் பிரச்சாரத்தில் இறங்குவது மிகவும் தீர்க்கமானது. இப்பிரச்சாரம், சகல அரசியல் கைதிகளையும் விடுதலை செய்யும் வர்க்க நடவடிக்கையை ஏற்பாடு செய்யும் போராட்டத்துடன் இணைக்கப்பட வேண்டும். தொழிற்சங்கம் உள்ளடங்கலான வர்க்க அமைப்புக்களுள் பிரேரணைகளை நிறைவேற்றுமாறும், இதை எதிர்க்கும் தலைவர்களை தொழிலாள வர்க்கத்துள்ளிருந்து விரட்டியடிக்குமாறும் நாம் வேண்டுகின்றோம்.

---

சோசலிச புரட்சியின் உலகக் கட்சியை கட்டி எழுப்பு!

## புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் சேருங்கள்

பெயர் : ..................................................

முகவரி : ..................................................

கழகத்தைப் பற்றி மேலும் விபரங்கள் பெற நிரப்பிய இப்பத்திரத்தை அனுப்ப வேண்டிய முகவரி:

தேசிய செயலாளர் :

**புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்**

இல : 90, 1-வது மாளிகாகந்தை ஒழுங்கை

கொழும்பு — 10.

படிப்பகம்

## குட்டி முதலாளித்துவ தேசியவாதத்தின் தவிர்க்க முடியாத முடிவு

# விடுதலைப் புலிகள் தமிழ் விடுதலை இயக்கத்தை காட்டிக் கொடுக்கின்றது

**— நந்த விக்கிரமசிங்க —**

பாராளுமன்றத்தின் 9வது கூட்டத் தொடரை (ஏப்ரல் 18) ஆரம்பித்து வைத்து, ஜனாதிபதி பிரேமதாச ஆற்றிய உரையில் தமிழ் ஈழம் விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தைகளுக்கான நிபந்தனைகளைத் 'தளர்த்துவது' பற்றி விடுத்த சமிக்ஞை தமிழ் தேசிய சிறுபான்மையினருக்கும் இலங்கைத் தொழிலாள — ஒடுக்கப்படும் மக்களுக்கும் எதிரான ஏகாதிபத்திய — முதலாளித்துவ சதியின் புதிய முனைப்பினைச் சுட்டிக் காட்டுகின்றது.

இனவாத யுத்தத்தின் புதிய சுற்றுத்தொடர் ஆரம்பமாகியதில் இருந்து, பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டின் விடுதலைப் புலிகள் இயக்கம் ஆயுதங்களைக் கைவிட வேண்டும் என பிரேமதாச அரசாங்கம் நிபந்தனை விதித்தது. இன்று அதைத் 'தளர்த்தி', தமது இலக்கினை ஆயுத பலத்தினால் வென்றுவிட முடியாது என்பதை விடுதலைப் புலிகள் பகிரங்கமாக ஒப்புக் கொண்டால் போதுமானது என்ற நிபந்தனையை முன்வைத்துள்ளது. ஜனாதிபதி பிரேமதாச, தமிழ் ஈழம் தேசிய இனத்தினருக்கு எதிரான யுத்தத்தினை முன்னொரு போதும் இல்லாத விதத்தில் உக்கிரமாக்கியுள்ள தருணத்திலேயே இந்த அறிக்கையை விடுத்துள்ளார்.

விமானக் குண்டு வீச்சுக்கள் விமான ஷெல் அடிகள், உட்பட நவீன ஆயுதங்கள் கொண்டு சிங்கள முதலாளித்துவ அரசின் படைகள் தமிழ் ஈழம் விடுதலைப் போராட்டத்துக்கு எதிராக முன்னொரு போதும் இல்லாத தாக்குதல்களைக் கட்டவிழ்த்ததோடு விடுதலைப் புலிகள் தலைமைக்கு விடுத்துள்ள இந்த அழைப்பின் அர்த்தம்: தமிழ் தேசிய இனத்தின் விடுதலைப் போராளிகளை நசுக்கித் தள்ளும் அதே சமயம் விடுதலைப் புலிகள் தலைமையைத் தம்முடன் எதிர்ப்புரட்சிக் கூட்டில் சிக்கவைப்பதேயாகும்.

விடுதலைப் புலிகள் தலைமையைத் தம்முடன் எதிர்ப்புரட்சிக் கூட்டில் சிக்க வைக்கும் யூ. என். பி. அரசாங்கத்தின் அவசியம், முதலாளித்துவ ஆட்சி முகம் கொடுத்துள்ள மரண நெருக்கடியில் இருந்து தோன்றியுள்ளது.

வேகமாக உக்கிரமடைந்து வரும் உலக ஏகாதிபத்தியப் பொருளாதாரத்தின் வீழ்ச்சியினை, பிரேமதாச ஆட்சி காட்டும் புள்ளி விபரங்களால் தவிர்த்துவிட முடியாது. இதை அவர்கள் அறிவர். பாரம்பரிய அவ்வாறே புதிய கைத்தொழில் துறைகளின் வீழ்ச்சியும் உலக வங்கியின் கட்டளையின்படி அரசாங்கத் துறையில் இடம்பெறும் தொழில் வெட்டும், பிரமாண்டமான முறையில் அதிகரித்துள்ள வாழ்க்கைச் செலவும் தொழிலாள வர்க்கத்தின் சகல பிரிவினரையும் போராட்டத்தின் பாதையில் தள்ளுகின்றது.

இதற்கிடையே பட்டினிக்குள் தள்ளப்பட்டுள்ள கிராமப்புற விவசாயிகளின் கொதிப்பினை இலட்சக்கணக்கான கிராமப்புற இளைஞர்களைப் படுகொலை செய்வதன் மூலம் தணித்துவிட முடியவில்லை. உண்மையில் இது நாளாந்தம் உக்கிரம் கண்டு வருகின்றது.



ஆர். பிரேமதாச



விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள்

சோவியத் யூனியன், ஜேர்மன் தொழிலாளர் வர்க்கத்தின் மாபெரும் போராட்டங்களுடன் 5 இலட்சம் புகையிரதத் தொழிலாளர்கள் அமெரிக்காவில் போராட்டத்தில் குதித்தமை இலங்கை வங்குரோத்து முதலாளித்துவ ஆட்சியைக் கிடுநடுங்கச் செய்துள்ளது. இந்திய முதலாளித்துவ ஆட்சி முகம் கொடுக்கும் அரசியல் நெருக்கடியும், பங்களாதேஷ் மக்கள் கிளர்ச்சியும் இலங்கையினுள் மாபெரும் தொழிலாளர் கிளர்ச்சிக்கான காலம் அண்மித்துக் கொண்டுள்ளதைச் சுட்டிக் காட்டுகின்றது.

முதலாளித்துவ ஆட்சியாளர்கள் தம்மிடையேயான மோதுதல்களால் வேகமாகப் பிளவுண்டு வருகின்றனர். உலக ரீதியில் அதிகாரத்துவங்களுக்கு எதிரான தொழிலாளர் வர்க்கத்தின் பயணம், இலங்கையினுள் சமசமாஜ, ஸ்டாலினிச, நவசமசமாஜ இ. தொ. கா. தலைவர்கள் தொழிலாள வர்க்கத்தின் மேல் கொண்டிருந்த பிடியினைக் கடுமையாக ஆட்டம் காணச் செய்துள்ளது.

விடுதலைப் புலிகள் தலைமையை எதிர்ப்புரட்சிக் கொடுக்கல் வாங்கல்களில் பங்காளியாக்கிக் கொள்ளும் பொருட்டு ஏகாதிபத்திய — முதலாளித்துவ பிற்போக்கு எடுக்கும் முயற்சிகள் உண்மையில் காலம் நேரம் பார்த்து இடம்பெற்று வருபவையாகும். வேறுவார்த்தைகளில் சொன்னால் விடுதலைப் புலிகள் தலைமையின் சந்தர்ப்பவாத அரசியலை நன்கு புரிந்து கொண்டு செய்யப்படுபவையாகும்.

## சூழ்ச்சி

விடுதலை புலிகளின் வரலாற்று அறிக்கை அந்த இயக்கத்தினை எதிர்ப்புரட்சிக் கூட்டில் மாட்டி வைக்கப் பிரேமதாச அரசாங்கம் செய்யும் முயற்சியை முழுமனே நியாயப்படுத்துகின்றது.

சிங்கள முதலாளி வர்க்க அரசாங்கத்தின் இராணுவத் தாக்குதல் உக்கிரமடைந்த நிலைமையின் கீழ் விடுதலைப் புலிகள் இயக்கப் பிரதிநிதி லோரன்ஸ் திலகர், அரசாங்கத்தின் உத்தியோகபூர்வமான பிரதிநிதியான பிரெட்மன் வீரக்கோனுடன் பேச்சுவார்த்தை நடாத்தியதாக அறிவிக்கப்பட்டது. அத்தோடு அரசாங்கம் தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தால் மட்டுமே தாம் அரசாங்கத்துடன் சமாதானப்பேச்சுவார்த்தைக்குச் செல்வதாக திலகர் கூறியதாகவும் அறிவிக்கப்பட்டது.

இங்கு ஒருவர் முதலில் விளங்கிக் கொள்ள வேண்டியது என்னவெனில், தமிழ் ஒடுக்கப்படும் தேசிய இனத்தினரை நிராயுதபாணிகளாக்கும் தமது இலக்கினை முதலாளித்துவ ஆட்சியாளர்கள் எந்த விதத்திலும் கைவிட்டுவிட்டனர் என்பதைக் காட்டிக் கொள்ளாதுஇருப்பதேபிரேமதாச அரசாங்கத்தின் புதிய தந்திரமாகும். மறுபுறத்தில் இலங்கையினுள் ஆயுதம் தாங்க எந்தவொரு ஒடுக்கப்படும் மக்கட் பிரிவினருக்கும் இடமளிக்க முதலாளித்துவ ஆளும் வர்க்கம் தயாரில்லை என்பது அரசியலின் அரிச்சுவடியாகும் என்பதை எவரும் மறந்துவிட முடியாது. எனவே தான் ''தேசிய சுயநிர்ணயத்தை கைவிடாமல்'' சிங்கள முதலாளித்துவ ஆட்சியுடன் பேச்சுவார்த்தை நடாத்துவது பற்றிய விடுதலைப் புலிகள் தலைமையின் கதையளப்புக்களையிட்டு எவரும் ஏமாந்து போக முடியாது.

விடுதலைப் புலிகள் இயக்கம் தாம் தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமைக்காகப் போராட வில்லை எனவும் அவ்வாறு செய்வதில் தோல்விகண்டுவிட்டதாகவும் நிரூபித்து பல காலம் கடந்துவிட்டது. உண்மையில் இன்று வெளிவெளியாக யூ. என். பி. அரசாங்கத்துடன் அணிதிரண்டுள்ள ஈ. பி. ஆர் எல். எப். போன்ற ஏனைய தமிழ்குட்டி முதலாளித்துவ இயக்கங்கள் போன்று விடுதலைப் புலிகள் இயக்கத்தின் உள்ளும் தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமைக்குப் போராடும் வல்லமை உள்ளடங்கி இருக்கவில்லை. அது அதன் சமூகத் தன்மையில் இருந்து தோன்றியது. அரசியலில் வெளிப்பாடாகியது.

குட்டி முதலாளித்துவ தலைமைகள் தேசிய விடுதலைப் போராட்டத்தின் ஏறுவது முழுத்தேசிய இனத்தினதும் — சிறப்பாக அத்தேசிய இனத்தின் ஒடுக்கப்படும் பிரிவினரின் விடுதலைக்காக அன்றி, சிறுபான்மை தேசிய இனத்தின் தொழிலாள வர்க்கத்தைச் சுரண்டுகையில் ஏகாதிபத்தியத்தின் ஏஜண்டாகச் செயற்படும் சிறப்பு உரிமையைத் தாம் பெற்றுக்கொள்ளவே. லெனின் இதனைத் தமது 'சோசலிச புரட்சியும் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையும்' என்ற கட்டுரையில் பின்வருமாறு தெளிவுபடுத்தினார்:

''ஒடுக்கப்படும் நாடுகளின் முதலாளி வர்க்கம் தொழிலாளர்களை ஏமாற்றும் பொருட்டு தேசிய விடுதலை பற்றிய சுலோகத்தினை அடிக்கடி பயன்படுத்துகின்றது. தமது உள்நாட்டு கொள்கைகளில் அவர்கள் இந்தச் சுலோகத்தினை மேன்மை தேசிய இனத்தின் முதலாளி வர்க்கத்துடன் பிற்போக்கு உடன்பாடுகளுக்காகப் பயன்படுத்துகிறார்கள். அவர்களின் வெளிநாட்டுக் கொள்கைகளில் அவர்கள் தமது கொள்ளைத் திட்டங்களை அமுல் செய்யும் பொருட்டு ஏகாதிபத்திய வல்லரசுகள் ஒன்றுடன் உடன்பாட்டுக்குச் செல்ல முயற்சிக்கின்றனர்,'' (வீ. ஐ. லெனின் நூற்தொகுதி இல 22 பக்கம். 148 — ஆங்கிலம்)

நிலைமை இப்படி இருக்கையில் 1947ன் பின்னர் 'குளிர் யுத்த' காலத்தில் ஏகாதிபத்தியத்துடன் ஸ்டாலினிச அதிகாரத்துவம் நடாத்திய கொடுக்கல் வாங்கல்களுக்கிடையே தமது தொடர்புகளையும் ஏற்படுத்திக் கொள்ள முயன்ற தேசிய, குட்டி முதலாளித்துவ தலைமைகளையும் காணக் கூடியதாக இருந்தது. விடுதலைப் புலிகள் இயக்கம் இக்காலப் பகுதியின் கடைப்பாகத்தில் அரசியலில் இறங்கியதோடு அத்தகைய முயற்சிகளின் இலட்சணங்களையும் காணக் கூடியதாக இருந்தது. இன்று ஏகாதிபத்தியவாதிகளுடனும் சிங்கள தேசிய முதலாளி வர்க்கத்துடனும் பிரபாகரனின் முக்கிய தூதுவராகப் பணிபுரியும் அன்டன் பாலசிங்கம் தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை 'லெனினிச' வார்த்தைகளில் வர்ணிக்க முன்வந்ததும் இக்காலப்பகுதியிலேதான். விடுதலைப் புலிகளின் இந்த முதலாளித்துவ தேசியவாத நிலைப்பாடு பிரித்தானியத் தொழிலாளர் புரட்சிக் கட்சியின் மைகேல் பண்டா போன்ற ஓடுகாலிகளின் மெய்ச்சுதலுக்கும் கூட இலக்காகியது. எனினும் நவீன தொழில் நுட்பத்தினதும், உற்பத்தியின் பூகோளமயமாக்கத்தினதும் பரம்பலோடு உலக ஏகாதிபத்தியப் புதிய நெருக்கடிக் காலகட்டத்தினுள் காலடிவைத்தமையானது ஸ்டாலினிச அதிகாரத்துவங்களது வீழ்ச்சியுடனும் மத்திய கிழக்கு அமெரிக்க ஆக்கிரமிப்புடனும், ஏகாதிபத்தியங்களுக்கிடையேயான போட்டியை உக்கிரமாக்கியதுடனும், சமீபகாலத்தில் கண்டிராத முறையில் உலகத் தொழிலாள வர்க்கத்தினை அரசியல் கிளர்ச்சிக்குள் தள்ளும் நிலைமைகளை உருவாக்கியதன் மூலமும் வெளிப்பாடான உலக ஏகாதிபத்திய நெருக்கடியின் புதிய காலப் பகுதி தேசிய முதலாளித்துவ குட்டி முதலாளித்துவ தலைவர்களின் வெறும் உபாயங்களுக்கான வாய்ப்புக்களை வெட்டி வீழ்த்தியது. இந் நிலைமை விடுதலைப் புலிகள் தலைமையின் பிற்போக்குப்

(9ம் பக்கம் பார்க்க)

www.padippakam.com



## கிட்டி முதலாளி...

(8ம் பக்கத் தொடர்ச்சி)

பயணத்தினை விரைவுபடுத்தியது. ஏகாதிபத்தியவாதிகளின் உலக அமைப்புக்கு வெளியே இவர்களுக்கு ஒதுக்கிடம் இருக்கவும் இல்லை.

இதன்படி ஏற்கனவே தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்குஎதிராக வெளிவெளியாக போரிட்டுக் கொண்டுள்ள ஈ. பி. ஆர். எல். எவ். புளொட். டெலோ முதலான அமைப்புக்களைப் போலவே குட்டி முதலாளித்துவ இயக்கமான விடுதலைப் புலிகள் இயக்கமும் ஆரம்பம் முதலே இந்திய முதலாளி வர்க்கமும் சிறப்பாக அதன் தமிழ்நாடு பிரிவும் தமது அமைப்புக்கு உதவி வழங்கும் என்பதை தமது அரசியலின் முக்கிய அங்கமாகக்கொண்டிருந்தன. இந்த நப்பாசை அவர்களால் தமிழ் தேசிய இனத்தினரிடையே விதைக்கப்பட்டது. இந்த விதத்தில் அவர்களின் 'சுயநிர்ணயம்' என்பது இந்திய முதலாளி வர்க்கத்தின் அவசியங்களுக்கும், நலன்களுக்கும் ஒத்துப்போவதாக விளங்கியது. இதன்படி தமது சுயநிர்ணயம் பிராந்தியத்தினுள் இந்தியாவின் பூகோள - அரயல் நலன்களுக்கு இணங்கியதாக அமையும் என விடுதலைப் புலிகள் தலைமை திரும்பத் திரும்பக் கூறி வந்தது.

இது இந்த அமைப்பின் ஏகாதிபத்தியச் சார்புடன் நெருக்கமாக இணைந்து கொண்டுள்ளது. 1947ல் இந்திய முதலாளி வர்க்கம் இப்பிராந்தியத்தில்ஏகாதிபத்திய அமைப்பின் முக்கிய பொலிஸ் பணியை பொறுப்பேற்றது. எனவே தான் நாம் விடுதலைப் புலிகள் இந்திய பூகோள — அரசியல் நலன்களை அங்கீகரிப்பதானது, ஏகாதிபத்திய அமைப்பினையே அங்கீகரிப்பதாகும் என சுட்டிக் காட்டுகின்றோம், இதிலிருந்து பெருக்கெடுக்கும் முடிவானது, விடுதலைப் புலிகள் இயக்கம் இன்று வளர்ச்சி கண்டு வரும் ஏகாதிபத்திய மோதுதல்களில் தமக்கு வாய்ப்பான ஏகாதிபத்திய அமைப்பின் வேறோர் சக்திபக்கம் நாளை திரும்பாது என்பதைக் கருதுவதாகாது.

இந்த இயக்கம் தமது சந்தர்ப்பவாத அடிப்படையை மூடிக் கொள்ளும் பொருட்டு தாம் ஈடுபட்டுள்ள ஆயுதப் போராட்டத்தினை இடைவிடாது காட்டிக்கொண்டது. ஆனால் அவர்களின் மூலோபாயம், ஏகாதிபத்திய உலக அமைப்பினுள் கொடுக்கல் வாங்கல் உபாயத்தினைக் கடைப்பிடிப்பதே.' இதுவே உண்மை. ஆயுதப் போராட்டம், இந்த மூலோபாயத்துக்கு கீழான ஒரு உபாயம் மட்டுமே.

### மூலோபாயம்

1990 செப்டம்பரில் விடுதலைப் புலிகள் வெளியிட்ட 'விடுதலைப் புலி' என்ற பத்திரிகையில் அமது மேற்கண்ட மூலோபாயத்தினை தெளிவாக கீழ்க் கண்டவாறு முன்வைத்திருந்

(25ம் பக்கம் பார்க்க)

## ஹிங்குருகமுவ ஜனவசம்:

# மூன்று தோட்டத் தொழிலாளர்கள் கடத்தப்பட்டனர்

1989 அக்டோபர் மாதம் 7ம் திகதி மாலை பதுளை பகுதி ஹிங்குருகமுவ ஜனவசம தோட்ட 'லயன்'களில் பாய்ந்த இருபத்தைந்து ஆயுதபாணிகள் தோட்ட தொழிலாளர் மூவரைக் கடத்திச் சென்றுள்ளனர். இன்றுவரை இத்தொழிலாளருக்கு என்ன நடந்ததுஎன்றுதெரியவில்லை அம்மூவரும் கொலையுண்டிருக்கலாமென அப்பிரதேச தொழிலாளர் அஞ்சுகின்றனா

சம்பவத்தை நேரில் கண்டவர்கள் ஆயுதபாணி குழுவானது, ஜீப், வான்களில் வந்ததாகவும்பொலிஸ் உடை தரித்த ஒருவரும் டீசேர்ட் கட்டைகால் சட்டை அணிந்தவர்களை உள்ளடக்கியிருந்ததாயும் கூறுகின்றனர்.

இந்தக் குழுவினர் லயன் தொழிலாளருக்கு ஆத்திரமூட்டும் வகையில் பேசியும் ஆண் தொழிலாளருக்கு ரைபிளால் அடித்தும் எஸ். பாலசுப்பிரமணியம் எஸ் - பாலகிருஷ்ணன் என்னும் தொழிலாளர் பற்றி விசாரித்துள்ளனர்.

ம, வி, முன்னணியினது ஒடுக்குமுறை நடந்த நாட்களில்தோட்டங்களில் வேலையில்லாததால் தொழிலாளர் தொழிற்சாலை, நகர்ப்புறங்களுக்கு சென்று கூலி வேலை செய்ய நேர்ந்தது. எஸ். பாலசுப்பிரமணியம் என்ற தொழிலாளி இந்நாட்களில் இங்ஙனம் தோட்டத்திற்கு வெளியே வேலை செய்து திரும்பும் போது வழியில் பிடிக்கப்பட்டார். தனது சிறு குழந்தைக்கு கொண்டு வந்த பிஸ்கட்டை கொடுத்துவிட்டு வருவதாக கூறியதற்கு கூட இடமளிக்கவில்லை. 35 வயதுடைய எஸ். பாலசுப்பிரமணியம் மூன்று பிள்ளைகளின் தகப்பனாவார்.

கொலையாளிகளால் கடத்தப்பட்ட எஸ், பாலகிருஷ்ணன்பாலசுப்பிரமணியத்தின் சகோதரனாவார். 34 வயது கொண்ட இரு பிள்ளைகளின் தகப்பனான இவர் தோட்டத்து நீர்த்தொட்டி காவற்காரனாவர். பயங்கரவாத செயல் மத்தியில் மனைவி செய்த எச்சரிக்கையையும் பொருட்படுத்தாது தனது கடமையை செய்ய வேலைக்கு சென்றவராவார் அவரையும்



1. பாலசுப்பிரமணியம 2. பாலகிருஷ்ணன் 3. பத்மநாதன்

பிடித்த குண்டர்கள் வழியில் நின்ற எஸ். பத்மனாதன் என்ற 22 வயது இளம் தொழிலாளியையும் வாகனத்தில் இழுத்து போட்டு கொண்டு சென்றனர்,

பின்பு அவர்களிடம் உங்களுக்கு துப்பாக்கி தந்தது யார் என கேட்டு தாக்கியுள்ளனர். லைன்காமராக்கள் இரண்டை பிடுங்கி சாமான்களை நொருக்கி ஆயுதங்களை தேடிய இவர்களால் ஒரு சிறு ஆயுத துண்டைக் கூட கண்டெடுக்க முடியவில்லை. இதே சமயம் தொழிலாளரது பிறப்புச்சான்றிதழ், விவாக சான்றிதழ்கள் கிழித்தெறியப் பட்டன,

பாலசுப்ரமணியம், பாலகிருஷ்ணன் இருவரதும் வயது முதிர்ந்த பெற்றோர் தமது புத்திரரை பற்றி பதுளை பொலிசில் விசாரித்து அழுத பொது அவர்களை எஸ். டி. எப். முகாமில் வைத்திருப்பதாக மட்டும் கூறியுள்ளனர்.

இத்தொழிலாளரைபிடித்து செல்கையில் இடை வழியில் சந்திரசிரி என்ற தோட்ட பாதுகாவல் சேவையாளரையும் வசந்தஎன்றசிங்களஇளைஞர் இருவரையும் பிடித்து சென்றனர். அவர்களை கண்ணைக்கட்டி கூட்டிசென்றனராம், பின் 12 நாட்களின் பின் வசந்தவும் 62 நாட்களின் பின் சந்திரசிரியும் விடுதலை செய்யப்பட்டனர்.

கடத்தப்பட்டதமிழ்தொழிலாளரை தேடி அவர்களது உறவினர் எல்லா இடமும் பூசா. முகாம் வரை தேடியுள்ளனர். எனினும் எதுவிதரும்புமே இதுவரை கிடைக்கவில்லை.

இத்தொழிலாளர் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியை சார்ந்த தொழில்சங்க அங்கத்தவராவர். இக்கடத்தல் குறித்து தொழிற்சங்கத் தலைமையிடம் கூறும்போது தாமும் கூட பயப்பிராந்தியுடன்இருப்பதாயும் தற்போது ஒன்றும் செய்ய முடியாதுள்ளது. என்றும் கருத்துத் தெரிவித்துள்ளனர். அரச பயங்கரவாத நீதியின் முன் இத்தலைமைகள் தொழிலாளருக்குஎந்தவொரு பாதுகாப்பையுமே வழங்கஇலாயக்கற்றவை என்பதை தொழிலாளர் நன்கு உணர்ந்துள்ளனர்.

## களனி உப-வேந்தரின் தூண்டுதலால் பு. க. க. அங்கத்தவர் கைது

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக அங்கத்தவரும் 'இளம் சோசலிஸ்டுகள்' இயக்க தேசிய குழு உறுப்பினருமான எல். பி உதயபிரேம ஜூன் 6-ம் திகதி பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு, மறுநாள் பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

கொழும்புபொதுஜன நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவிருந்த மாணவர் மகாநாடு சம்பந்தமான துண்டுப் பிரசுரத்தினை களனி பல்கலைக் கழகத்துக்கு அருகே விநியோகித்த வேளையிலேயே இவர் பல்கலைக் கழக பாதுகாப்பு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

பு. க. க. தலைமை உறுப்பினரான எச்.எம்.பி, ஹேரத் உப—வேந்தரைச் சந்தித்த போது, 'அனுமதியின்றி பல்கலைக் கழக வளவினுள்' துண்டுப் பிரசுரம் விநியோகித்ததாலேயே அவர் கைது செய்யப்பட்டதாக அவர் குறிப்பிட்டார். 'இன்னமும் புரட்சி பற்றிப் பேசுகின்றீர்களா' என சிலேடையாக கேட்ட உப—வேந்தர் 'வாழ்த்துக்கள்' எனவும் கூறியுள்ளார்.

உதயபிரேமவை பேலியகொடை பொலிசுக்கு கொண்டு சென்ற பொலிசார் அங்கு அவரை தூஷணத்தில் ஏசி, 'கொல்வதாக' தலையில் அடித்துள்ளனர்.

பொலிசாரினதும் உப — வேந்தரினதும் இந்த நடவடிக்கைகளை வன்மையாகக் கண்டனம் செய்யும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம், தொழிலாள ஒடுக்கப்படும் மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமைகளுக்கு எதிராக குண்டர்களால் ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலுக்கு எதிராகப் போராடுமாறு வேண்டுகின்றது.

## றுகுணை பல்கலைக் கழக மாணவர் கடத்தப்பட்டார்

றுகுணைப் பல்கலைக் கழக மாணவரான அமரஜயந்த ஏப்ரல் 28ம் திகதி மாலை 1/30க்கு அம்பலாந்தோட்டையில் உள்ள அவரது வீட்டில் கைதுசெய்யப்பட்டுள்ளார், 10நாட்கள் தடுத்து வைக்கப்பட்டதன் பின் இவர் விடுதலை செய்யப்பட்டார். ஜே. வி. பி.யுடன் தொடர்புண்டா? ஜே. வி. பி. பல்கலைக் கழகத்துள் செயற்படுகின்றதா 'ராக்கிங்குக்கு' தலைமை தாங்கினாயா: என்பன போன்ற கேள்விகள் அவரிடம் கேட்கப்பட்டுள்ளன,

## தலவாக்கலை கேம்பிரிஜ் தோட்டம்: தொழிலாளர் கடத்தலுக்கு எதிராக வேலைநிறுத்தம்

தலவாக்கலை லிந்துலை குறுப்பைச் சேர்ந்த கேம்பிரிஜ் தோட்ட கந்தையா சிவஞானம் (25 வயது) செல்லமுத்து சுவேந்திரநாதன்என்ற இளம்தொழிலாளர்கள் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர். ஜூன் 16ம் திகதி இரவு 11 மணிக்கு சிவில் உடையில் வந்த கோஷ்டியினால் இவர்கள் இருவரும் டட்சன் பிகப் வண்டியில் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர், அறுவர் கொண்ட இந்தக் கடத்தல் கோஷ்டியில் ஒருவர் முகமூடி அணிந்திருந்தார். இவ்விரு தொழிலாளர்களும் மலையக மக்கள் முன்னணி உறுப்பினர்கள்.

இக்கடத்தல் நடவடிக்கையைக் கண்டித்தும் இவ்விரு தொழிலாளர்களையும் உடனடியாகக் கையளிக்கும்படியும் கோரி மலையக மக்கள் முன்னணி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் அங்கத்தினர்கள் ஜூன் 18ம் திகதியில் இருந்து வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர். இந்த வேலை நிறுத்தத்தில் சுமார் 1000 தொழிலாளர்கள் கலந்து கொண்டனர்.

இவ்விரு தொழிலாளர்களும் இதற்கு முன்னர் ஈழவர் ஜனநாயக முன்னணி அலுவலகத்தில் வைத்து இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு, பின்னர் விடுதலை செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இந்தக் கடத்தல் நடவடிக்கைகள் தோட்டத் துறையில் உலக வங்கித் திட்டங்களை அமுல் செய்ய யூ. என். பி, அரசாங்கம் மேற்கொண்டு வரும் கொலைகார ஆத்திரமூட்டல் தயாரிப்புக்களின் ஒரு பாகமாகும்.

## லேவன் தோட்ட தாக்குதல்: தலைமைகள் மௌனம்

லேவன்ட் தோட்ட கீழ்க் கணக்கைச் சேர்ந்த விஜேகுமார் என்ற தொழிலாளி அங்கு சேவைபுரியும் இருவராலும் குண்டர்களாலும் தாக்கப்பட்டுள்ளனர். இந்தத் தாக்குதலின் பின்னணியில் இனவாத மோதுதல்களை தூண்டி விடும் ஆபத்துள்ளதாக அஞ்சப்படுகின்றது.

ஏப்ரல் 16ம் திகதி சிரிசேன, பிரேமரத்ன என்ற தொழிலாளிகள் இருவரும் விஜேகுமாரிடம் சாராயமும் கோழியும் கேட்டுள்ளனர். இதனால் உண்டான வாக்குவாதத்தை தொடர்ந்து இவர்கள் இருவரும் குண்டர்கள் சிலருடன் வந்து, விஜேகுமாரையும்

(10-ம் பக்கம் பார்க்க)

படிப்பகம்

# யூகோசலவாக்கியாவில் உள்நாட்டுப் போர்

யூகோசலவாக்கியாவில் நீண்டகாலமாக அபிவிருத்தி கண்டுவந்த அரசியல் நெருக்கடி, சுலோவினியா, குரோசியா குடியரசுகள் சுதந்திரப் பிரகடனம் செய்ததைத் தொடர்ந்து உள்நாட்டு யுத்தமாக வெடித்துள்ளது.

ஜூலை முதல் வாரத்தில் 100 தொழிலாளர்கள் கொல்லப்பட்டதோடு இராணுவ டாங்கிகள் நகரங்களையும், கிராமங்களையும் ஊடறுத்துச் செல்லும் நிலையிலும் குண்டுவீச்சு விமானங்கள் நகரங்களில் குண்டுகளைப் பொழிந்து தள்ளும் நிலையிலும் பல்லாயிரக்கணக்கானோரின் உயிர்கள் ஆபத்தினை எதிர்நோக்கியுள்ளது.

ஐரோப்பிய கமிஷனின் ஏற்பாட்டின் பேரில் செய்யப்பட்ட இரண்டு யுத்த நிறுத்த ஏற்பாடுகள் ஏற்கனவே தகர்ந்து போய்விட்டன. மூன்றாவது யுத்த நிறுத்தம், சுலோவினியா படைகள் எல்லைக் காவல் அரண்களை கைவிட்டுச் செல்ல வேண்டும் என்ற சமஷ்டி அரசாங்கத்தின் நிபந்தனையினால் சரிந்து கொட்டியுள்ளது.

'ஆஸ்திரியா, இத்தாலியுடன் யூகோசலவாக்கியாவுக்கு தொடர்ந்து எல்லைகள் கிடையாது'' என சுலோவினியா தகவல் அமைச்சர் ஜெயிகோ காசின் பிரகடனம் செய்தார். அவை இத்தாலி, ஆஸ்திரியா, ஹங்கேரியுடனான 27 எல்லை கடவைகள் கைப்பற்றப்பட்டவை. அது தான் சமஷ்டிப் படைகளை தலையிடச் செய்தது.

யூகோசலவாக்கிய எல்லை நெடுகிலும் ஆஸ்திரியாவும் இத்தாலியும் படைகளை அணிதிரட்டி வருவதால் பரந்த அளவிலான யுத்தம் வெடிக்கும் ஆபத்து இந்த யுத்தத்தினுள் அடங்கியுள்ளது. அத்தோடு அமெரிக்க, ஜேர்மன், பிரித்தானிய, பிரான்சிய ஏகாதிபத்தியவாதிகள் பால்கனில் தமது முரண்பட்ட நலன்களுக்காகப் போட்டியிட்டு வருகின்றனர்.

5 மாதங்களுக்கு முன்னர் நான் புஷ் நிர்வாகம், பாரசீக வளைகுடா யுத்தத்தினை முடிவுக்குக் கொணர்ந்தது. பரந்தளவிலான மக்கட் படுகொலைகள் சமாதானத்தை உத்தரவாதம் செய்து 'ஒரு புதிய உலக ஒழுங்குக்கு அடித்தளமிடும் எனப் பிரகடனம் செய்தது. யூகோசலவாக்கிய நெருக்கடியின் வெடிப்பு புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் சுட்டிக்காட்டியது போன்று வளைகுடா யுத்தம் ஏகாதிபத்தியங்களுக்கு இடையேயான யுத்தத்தின் புதியகாலப் பகுதியின் ஆரம்பத்தைக் குறிக்கின்றது எனவும் அது பூகோளத்தின் ஒவ்வொரு பிராந்தியத்தினையும் உள்ளடக்கிக் கொள்ளும் ஆபத்து ஏற்பட்டுள்ளது எனவும் கூறியதை ருசுப்படுத்தியுள்ளது.

## நெருக்கடிக்கு தீர்வு

தொழிலாள வர்க்கம், சுலோவினிய மற்றும் குடியரசுகளைச் சேர்ந்த முதலாளித்துவ தேசியவாதிகளில் இருந்தும் பெல்கிரேட்டில் நாற்றம் எடுத்துள்ள ஸ்டாலினிசக் கூடுகளில் இருந்தும் விலகிச் செல்ல வேண்டும். இன்றைய நெருக்கடிக்கான தீர்வு, தேசியவாதிகள் கூறுவதுபோல் பிரிந்து செல்வதன் மூலமோ அல்லது யூகோசலவாக்கிய சமஷ்டியைப் பராமரிப்பதன் மூலமோ அன்றி ஐரோப்பிய ஐக்கியசோசலிசஅரசுகளினை அமைக்கும் போராட்டத்தின் பாகமாக பால்கனில் சோசலிச குடியரசுகளை அமைக்கப் போராடுவதன் மூலமே கிடைக்கும். இன்றைய அமைப்பினுள் தீர்வுக்கு வழியே கிடையாது.

அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ஜேம்ஸ் பேக்கர், சகல ஏகாதிபத்தியவாதிகளதும் அச்சத்தினை வெளியிட்டார். ஆஸ்திரிய பிரபு பேர்டினன்ட் ஒரு சேர்பியன் தேசியவாதியால்சுட்டுக் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து 1914ல் முதலாம் உலக யுத்தம் வெடித்தது போன்று, பால்கனில் ஏற்பட்டுள்ள இன்றைய தேசிய பதட்டமும் அதே நிலைமையை உண்டு பண்ணுமோ என அஞ்சுகின்றனர்.

''இந்த நாடு துண்டுபட்டுப் போவதால் ஏற்படக் கூடிய ஆபத்தினையிட்டு அச்சம் கொண்டுள்ளதாலேயே நாம் யூகோசலவாக்கியாவுக்கு வந்தோம். யூகோசலவாக்கியாவின்ஸ்திரமின்மையும் பிளவும் இங்கு மட்டுமல்ல பரந்த ரீதியில் ஐரோப்பாவிலும் மிகவும் துன்பகரமான விளைவுகளை ஏற்படுத்தும் என நினைக்கின்றோம்'' என பேக்கர் அச்சம் தெரிவித்தார்.

ஐரோப்பா பூராவும் தேசிய அரச அமைப்பு முறை அவ்வளவுக்கு உடைந்து போகும் நிலையில் உள்ளது. யூகோசலவாக்கியாவில் உள்ளது போல் தேசிய இன, மொழி தகராறுகள் கிழக்கு ஐரோப்பாவின் எந்தவொரு நாட்டிலும் வெடிக்கலாம். உறுதியான மேற்கு ஐரோப்பிய நாடுகள் எனக் கூறப்படும் ஸ்பெயின், பிரான்ஸ், பெல்ஜியம், சுவிஸ்லன்ட், பிரித்தானியாவிலும் நிலைமை இதுவே.

யூகோசலவாக்கியாவில்முதலாளித்துவத்தினைப் புனருத்தாரணம் செய்யவும் பல்வேறு ஏகாதிபத்தியச் சக்திகளுக்கு தமது சேவையை வழங்கவும் ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் சகல பகுதியினரும் கடைப்பிடித்து வந்த கொள்கைகளாலேயே இன்று சமஷ்டி அரசு சிதறுண்டு, உள்நாட்டு யுத்தம் வெடித்துள்ளது. யூகோசலவாக்கிய குடியரசுகளின் தலைவர்கள் தம்மை என்ன 'அரசியல் லேபல்'களில் ('ஜனநாயக', சோசலிச) அழைத்துக் கொண்டாலும் அவர்கள் அதிகாரத்துவத்தினதும், முதலாளி வர்க்கத்தினதும் போட்டிக் குழுக்களே.



கிளர்ச்சியாளர்களுக்கு எதிரான சமஷ்டிப் படைகளின் தாக்குதல்

இத்தலைவர்கள் அனைவரும் தமது அரசியல் நடவடிக்கைகளை யூகோசலவாக்கிய ஸ்டாலினிச கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் டிட்டோவின் காலம் வரை ஆராய்கின்றனர். இந்த தேசியவாதத் தலைவர்கள் தமது அதிகாரத்தினையும் சலுகைகளையும் காத்துக் கொள்ள முயல்கின்றனர். யூகோசலவாக்கிய தொழிலாள வர்க்கத்தின் சுதந்திரமான இயக்கத்தினை மூர்க்கமாக எதிர்க்கின்றனர்.

சேர்பியன் குடியரசின்தலைவர்கள் 'மார்க்சிஸ்டுகளும்' அல்லர் 'சோஷலிஸ்டுகளும்' அல்லர். அவர்கள் சேர்பியன் தேசியவாதிகள். அவர்களின் முதலாளித்துவ புனருத்தாரண வேலைத்திட்டம் 'மாபெரும் சேர்பியாவை கட்டியெழுப்புவதை அடிப்படையாகக் கொண்டது அவ்வாறே ஒரு இராணுவ சதி ஆபத்தினை தோற்றுவித்துள்ள இராணுவத் தலையீடானது 'சோசலிசத்தை' அமைக்கும் நோக்கில் இடம் பெறவில்லை. சமஷ்டி அதிகாரத்துவத்தின் ஒட்டுண்ணி, முதலாளித்துவப் புனருத்தாரண வேலைத்திட்டத்தினைப் பேணவே அத்தலையீடு இடம் பெறுகின்றது. இந்த இராணுவத்தின் அதிகாரிகள் சிறப்பு வசதிகள் கொண்ட ஒரு தட்டினர்.

இதே சமயம் சேர்பியன் ஸ்டாலினிஸ்டுகள் சமஷ்டி அரச அமைப்பினை யூகோசலவாக்கியாவில் காக்கப் போராடி வருகின்றனர். ஏகாதிபத்திய முதலீடுகளை உள்ளீர்ப்பதே தமது நலன்களை காப்பதற்குச் சிறந்த வழி என இவர்கள் நினைக்கின்றனர். சுலோவீனியா, குரோசியாவில்தலையெடுத்து வரும் தேசியவாதக் கும்பல்கள், முதலாளித்துவத்தினை புனருத்தாரணம் செய்து, ஏகாதிபத்திய உலகச் சந்தையுடன் இணைவதற்கு யூகோசலவாக்கிய சமஷ்டிக் குடியரசில் இருந்து விலகுவதேசிறந்த வழி என எண்ணுகின்றனர்.

## யுத்தத்தின் அடிப்படை

இன்று வெடித்துள்ள உள்நாட்டு யுத்தத்தின் அடிப்படை இதுதான்: ஒவ்வொரு தேசியவாதக் குழுக்களும் முதலாளித்துவப் புனருத்தாரணத்தினைப் பூரணத்துவம் செய்து வைக்கத் தலைகீழாக நின்று வருவதால் அவை தேசிய வெறுப்புக்களையும், இனவாத குரோதங்களையும் தூண்டி வருகின்றன. இதன் மூலம் தொழிலாள வர்க்கத்தினைப் பிளவுபடுத்த முயல்வதோடு தினமும் மோசமடைந்துவரும் பொருளாதார நிலைமையில் தொழிலாள வர்க்கத்திடையே வளர்ச்சி கண்டு வரும் கோபத்தினைத் திசை திருப்பவும் முயல்கின்றன.

சேர்பியாவில் பொனபாட்டிஸ்ட் மியோசேவிக்கும் ஸ்டாலினிசக் கருவிகளும் தேசியவாத வாயடிப்புக்கள் மூலம் கொசோவா மாகாணத்தில் உள்ள அல்பேனிய சிறுபான்மையினருக்கு எதிரான தாக்குதலைத் தூண்டிவருகின்றனர். குரோஷியன்களுக்கு எதிரான ஆத்திரமூட்டல்களும் இடம் பெறுகின்றது.

குரோஷியா, வலதுசாரி குரோஷியன் ஜனநாயக யூனியன் கட்சியால் ஆளப்பட்டு வருகின்றது. மாஜி. ஸ்டாலினிச தலைவரான பிரான்சோ ருட்ஸ்மன், யூகோசலவாக்கியாவில் ஐக்கிய நாடுகள் சபையின் தலையீட்டைக் கோரியுள்ளார், ருட்ஸ்மனின் அரை பொனபாட்டிச ஆட்சியானது இனவாத கசப்புணர்வுகளுக்குத் தூபம் போட்டுவரும் அதே வேளையில் ஜனநாயக உரிமைகள் மேல் இரக்கமற்ற தாக்குதல்களைத் தொடுத்து வருகின்றது. அரசாங்க நிறுவனங்களுக்கு குரோஷியன் அல்லாதோரை வேலைநீக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது, குரோஷியன் அரசாங்கத்துக்கு ஆதரவாக சத்தியப் பிரமாணம் செய்ய மறுப்போரும் வேலைநீக்கப்பட்டுள்ளனர். அரசாங்க தொலைக் காட்சிகள் சேப்ஸ்களை 'கிழைத்தேய காட்டுமிராண்டிகள்' என வருணித்துக் கொள்கின்றன.

இரண்டாம் உலக யுத்தத்தில் கம்யூனிஸ்ட் கட்சி தலைமையிலான பிரிவினை இயக்கத்தில் இளம் ஜெனரலாக விளங்கிய ருட்ஷ்மன், இன்று 1941ல் நாசிப் படைகளின் கீழ் அமைக்கப்பட்ட பாசிச ஆட்சியின் தலைவரான அன்ரி பவலிக்கை நினைவு கூர்ந்து கொள்கின்றார். பவலிக்கின் அரசாங்கம் ஹிட்லரின் எஸ். எஸ். படைகளைக் காட்டிலும் அதிகமான சேர்ப்ஸ், யூதர்கள்; ஜிப்ஸிஸ்களை கொன்று தள்ளியது.

தம்மை ஓர் 'ஜனநாயகவாதி'யாக அழைத்துக்கொள்ளும் சுலோவீனியன் தலைவரான மிலான் குகன், இந்நெருக்கடியில் ஏகாதிபத்தியவாதிகளை நேரடியாக இறக்கச் செயற்பட்டு வருகின்றார். இவர் சுலோவினியகம்யூனிஸ்ட் கட்சியின் மாஜி. தலைவராவார். கிழக்கு ஐரோப்பாவில் இருந்த தமது ஸ்டாலினிச சகாக்களைப் போலவே இவ

(11-ம் பக்கம் பார்க்க)

## லேவன் தோட்ட தாக்குதல் . . .

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

மனைவியையும் இரவில் தாக்கியுள்ளனர். ஒரு குண்டனிடம் துவக்கும் இருந்துள்ளது. இத்தாக்குதலில் பலத்த காயமடைந்த விஜேகுமார் கரவணங்கால ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இத்தாக்குதலுக்கு எதிராகவும் தொழிலாளர்களின் பந்தோபஸ்தினை உத்தரவாதம் செய்யும்படியும் கோரிதொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் இறங்கினர். ஏப்ரல் 17ம் திகதி பொலிசார் தோட்டத்துக்கு வந்த வேளையில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்தனர்.

18ம் திகதி காலை மீண்டும் தோட்டத்துக்கு வந்த பொலிசார் இந்தக் குழப்பத்தில் விஜேகுமாரும் வேறும்பலரும் சம்பந்தப்பட்டுள்ளதால் அவர்களையும் கைது செய்ய வேண்டும் என்றுள்ளனர். பொலிஸ் ஒடுக்குமுறையை யிட்டுக் கிலியடைந்த தொழிலாளர்கள் ஒழிந்து கொண்டனர்,

''அடிவாங்கியதும் நாங்கள் பொலிஸ் பிடிப்பதும் எங்களையே. எம்மைத் தாக்கியவர்கள் சுதந்திரமாக உலாவுகிறார்கள். புதுமையான சட்டம்'' என இந்தத் தாக்குதலைப் பற்றி ஒரு பெண் தொழிலாளி 'தொழிலாளர் பாதை' நிருபரிடம் தெரிவித்தார்.

இந்தத் தாக்குதலுக்கு மத்தியில் தோட்டத் தொழிற் சங்கத் தலைவர்கள் மௌனம் சாதித்தனர். இதைப் பயன்படுத்தி பொலிசார் இனவாத ஒடுக்குமுறையை தோட்டத்தில் விஸ்தரித்தனர். தோட்டங்களை தனிப்பட்ட முதலாளிகளிடம் விற்றுத் தள்ளவும், தொழிலாளர்களுக்கு எஞ்சியுள்ள அற்ப, சொற்ப சலுகைகளையும் பிடுங்கிக் கொண்டு அவர்களை நடுரோட்டில் தள்ளவும் யூ. என். பி, அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது.

முன்னர் ஜே. வி. பி.யை ஒடுக்கும் சாட்டில் யூ.என்.பி, அரசாங்கம் இத்தோட்டங்களில் இராணுவ முகாம்களை அமைத்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

www.padippakam.com

www.padippakam.com



# இளம் சோசலிஸ்டுகளின் 10வது தேசிய மகாநாடு...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

மகாநாட்டில் ஏகமனதாக நிறைவேறியது. அத்தோடு உலகம் பூராவும் ட்ரொட்ஸ்கிஸ்டுகளுக்கு எதிராக முதலாளித்துவ அரசுகள் நடாத்திவரும் வேட்டைகளுக்கு கண்டனம் தெரிவிக்கும் பிரேரணையும் பொலிசாரால் கைதுசெய்யப்பட்ட மலையக மக்கள் முன்னணி தலைவர்களை விடுதலை செய்யத் தொழிலாள வர்க்க இயக்கத்தினை அணிதிரளக் கோரும் பிரேரணையும் மகாநாட்டிற்கு வருகை தந்திருந்த தொழிலாளர்கள், இளைஞர்களின் முழு ஆதரவைப் பெற்று ஏகமனதாக நிறைவேறின.

மகாநாடு நான்காம் அகிலத்தைக் கட்டி எழுப்பும் போராட்டத்துக்கு உயிர்த்தியாகம் செய்த லியொன் ட்ரொட்ஸ்கி, லியொன் செடோவ் முதல் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் அங்கத்தவர்களான லக்ஷ்மன் வீரகோன், எல். ஜீ. குணதாச ஆர். பி. பியதாச, ஆர். ஏ. பிடவல, பீ. குணபால, கிரேஷன் கீகியனகே முதலான தோழர்களையும், பு. க. க. மாஜி. செயலாளர் கீர்த்தி பாலசூரிய, நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் அவுஸ்திரேலியக் கிளையான சோசலிச லேபர் லீக்கின் ஸ்ரீவ் லோங்ஸ்டாவ், இந்திய ட்ரொட்ஸ்கிச இயக்கமான சோசலிச தொழிலாளர் கழகத்தின் சேதுராமன் முதலான தோழர்களையும் நினைவுகூரும் பொருட்டு இருநிமிடங்கள் மௌனம் அனுஷ்டித்தது.

10வது தேசிய மகாநாட்டிற்கு வருகை தந்தவர்களை வரவேற்று உரை நிகழ்த்திய 'இளம் சோசலிஸ்டுகள் இயக்க' உறுப்பினர் தோழர். டீ. ஜயசேகர கூறியதாவது: இம்மகாநாடு ஒரு வரலாற்று திருப்புமுனையில் இடம் பெறுகின்றது. உலக ஏகாதிபத்தியம் இன்று உலகினைத் தமக்கிடையே காலனிகளாகப் பங்கிட்டுக் கொள்ளும் மூன்றாம் உலக யுத்தத்துக்கான தயாரிப்பில் ஈடுபட்டுள்ளன. அந்த வேலைத்திட்டம் உலகம் பூராவும் —இந்தியத் துணைக்கண்டம் உட்பட அமுல் செய்யப்படும் முறையைத் தெளிவுபடுத்திய ஜயசேகர, நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு உலக யுத்தத்துக்கும் காலனித்துவத்துக்கும் எதிராகக் கூட்டி வரும் உலகத் தொழிலாளர் மகாநாட்டைக் கட்டி எழுப்பும் போராட்டத்தில் இணையுமாறும் அழைப்பு விடுத்தார்.

மகாநாட்டின் அரசியல் அறிக்கையை 'இளம் சோசலிஸ்டுகள்' இயக்கத் தேசியச் செயலாளர் தோழர். சமன் குணதாச சமர்ப்பித்தார். ஏகாதிபத்தியவாதிகளின் உலக யுத்த, காலனித்துவ தயாரிப்புக்களுக்கு மத்தியில் முதலாளித்துவ, குட்டி முதலாளித்துவ, தேசியவாத, ஸ்டாலினிச தலைவர்களின் துரோகங்களையும், வங்குரோத்தினையும் அவர் அம்பலப்படுத்தினார். அனைத்துலக முன்னோக்கினையும் வேலைத்திட்டத்தினையும் இலட்சோப லட்சம் தொழிலாள, ஒடுக்கப்படும் இளைஞர், யுவதிகளிடையே எடுத்துச் செல்வதன் அவசியத்தினை சமன் வலியுறுத்தினார்.

அரசியல் அறிக்கையைத் தொடர்ந்து இடம்பெற்ற கலந்துரையாடலில் பங்கு கொண்ட இளைஞர்கள் தமது அனுபவங்களை விளக்கியதோடு, முதலாளித்துவத்தினைத் தூக்கி வீசும் பொருட்டு சோசலிசப் புரட்சியின் வழியில் இளைஞர்கள் பயணம் செய்ய வேண்டியதன் அவசியத்தினை வலியுறுத்தினர்.

கலந்துரையாடலை ஆரம்பித்து வைத்துப் பேசிய சிலாபம் 'இளம் சோசலிஸ்டுகள்' அங்கத்தவரான நிஹால் கூறியதாவது: ''வடக்கு — கிழக்கு கடற் பிராந்தியத்தில் மீன்பிடியில் ஈடுபட்டு வந்தவர்கள் முதலாளித்துவ அரசாங்கத்தின் யுத்தம், இனவாத பிளவுகள், மோதுதல்களால் அங்கு செல்ல முடியாதிருப்பது அவர்களுடன் நாம் நடாத்திய கலந்துரையாடல் மூலம் தெரிய வந்தது. முதலாளிகளதும், குண்டர்களதும் மிரட்டல்கள்; தாக்குதல்களின் மத்தியில் மீனவர்கள் மிகவும் துக்ககரமான நிலைமைக்குள் தள்ளப்பட்டுள்ளனர். இங்கு எமது தோழர்கள் சோசலிசப் புரட்சியின் வேலைத்திட்டத்தின் அடிப்படையில் மீனவர்களை அணிதிரட்டப் போராடி வருகின்றார்கள்'' என்றார்.

நாதிகள் பயிற்சிக் கல்லூரி மாணவரும் 'இளம் சோசலிஸ்டுகள்' உறுப்பினருமான அஜித் கூறியதாவது: 'ஏகாதிபத்தியவாதிகள் இன்று இளைஞர்களுக்கு கொடுக்க கூடியதாகவுள்ளது யுத்தமும், பஞ்சமும், தோற்றுநோயும், மரணமுமே. ஆஸ்பத்திரி சேவையில் நூற்றுக்கு 50%ம் கூட இலவச சேவையாக இல்லை. அநேக சேவைகளுக்காகப் பணம் அறவிடப்படுகின்றது. அத்தோடு நோயாளியைக் கொண்டே வெளியில் இருந்து அவசியமான உபகரணங்களைத் தருவிக்கும் நிலைமையும் உருவாகியுள்ளது. தாதிகள் பயிற்சி கல்லூரியில் சேவை நிலைமைகள் வெட்டப்பட்டுள்ளதோடு நூல்நிலையம், தங்குமிடம், உணவு வசதிகள் கிடையாது. இவற்றினை எதிர்த்ததும் வேட்டைக்கு இலக்காகவேண்டியுள்ளது.'' என்றார்.

இலவசக் கல்வி வெட்டு, மாணவர் ஒடுக்குமுறை தொடர்பாக யூ. என். பி. அரசாங்கம் கடைப்பிடிக்கும் வேலைத் திட்டங்களைத் தெளிவுபடுத்திய இரத்மலானை சுதத் கூறியதாவது: ''இலங்கை மாணவர்கள் சில காலத்துக்கு முன்னர் தொழிலாள வர்க்கத் தலைமையின் கீழ் 'அணிதிரட்டப்பட்டிருந்தனர். பின்னர் ஏனையதுறைகளில் போன்றே தொழிலாளர் வர்க்கத் தலைவர்கள் மாணவர்களையும் காட்டிக் கொடுத்தனர். இதனாலேயே அவர்கள் ஜே. வி. பி.யால் கபளீகரம் பண்ணப்படும் நிலை உருவாகியதோடு, இளைஞர்

(8-ம் பக்கம் பார்க்க)

## உலகத் தொழிலாளர் மகாநாட்டுக்கு போராட சபதம்

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவினால் நவம்பர் 16ம் 17ம் திகதிகளில் ஜேர்மன் பேர்ளின் நகரில் கூட்டப்படவுள்ள ஏகாதிபத்திய யுத்தத்துக்கும் காலனித்துவத்திற்கும் எதிரான உலகத் தொழிலாளர் மகாநாட்டுக்கு இம்மகாநாடு தனது பேராதரவினை வழங்குகின்றது.

உலகம் பூராவும் ஏகாதிபத்தியவாதிகள் உலகினை தம்மிடையே காலனிகளாகப் பங்கிட்டுக் கொள்ளும் பகற்கொள்கை இலக்கில் மூன்றாவது அணுவாயுத உலக யுத்தத்துக்கு தயாராகி வரும் நிலையில் கூட்டப்படவுள்ள இம்மகாநாடு, ஏகாதிபத்தியவாதிகளின் அந்த நாசகார முயற்சிகளை தோற்கடிக்கும் பொருட்டு அனைத்துலகத் தொழிலாள வர்க்கம் ஏகாதிபத்தியத்தினை இப்பூகோளத்தில் இருந்து துடைத்துக்கட்டும் உலகச் சோசலிசப் புரட்சி முன்நோக்கினை அடிப்படையாகக் கொண்டிருக்கும்.

5 இலட்சத்துக்கு அதிகமான ஈராக்கிய மக்களைப் படுகொலை செய்தும் ஈராக்கின் பொருளாதார, கைத்தொழில் துறைகளை அடியோடு நாசமாக்கியும் அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்தியவாதிகள் நடாத்திய யுத்தம், திரும்பவும் மீண்டும் ஏகாதிபத்தியவாதிகள் உலக யுத்தத்துக்கும் திரும்பியதைச் சுட்டிக் காட்டுகின்றது. அவ்வாறே ஏகாதிபத்தியவாதிகள் ஈராக்குக்கு எதிரான பொருளாதாரத் தடையைத் தொடர்ந்தும் கடைப்பிடிக்க எழுவர் குழுவின் மகாநாட்டில் தீர்மானம் செய்தனர். பாரசீக வளைகுடாவிலும் வடக்கு ஈராக்கிலும் தமதுபடைகளை இருத்துவதன் மூலம் எண்ணெய் வளங்களைக் கொள்ளையடிக்கவும் மத்தியகிழக்கு ஒடுக்கப்படும் மக்களிடையே மோதுதல்களைத் தூண்டிவிடும் யுத்தத்துக்கு ஏகாதிபத்திய வல்லரசுகள் தயாராகி வருகின்றன. இதைக் குறிக்கும் விதத்தில் அமெரிக்க, பிரித்தானிய, பிரான்சிய ஏகாதிபத்தியத்தின் தலைவர்கள் மீண்டும் ஈராக்கினை தாக்கப் போவதாக எச்சரிக்கை செய்தனர்.

ஈராக்குக்கு எதிரான யுத்தத்தில் உலகம் பூராவும் உள்ள தொழிலாளர் அதிகாரத்துவங்கள் - ஸ்டாலினிஸ்டுகள், சமூக ஜனநாயகவாதிகள், பப்லோவாதிகள் அத்தோடு அமெரிக்க AFL - சீ.I.O உட்பட தொழிற்சங்கத் தலைவர்கள் ஏகாதிபத்தியத்திற்கு முழு ஆதரவு வழங்கினர். இதன் மூலம் இந்தத் துரோகத் தொழிலாளர் தலைவர்கள் ஏகாதிபத்தியவாதிகளின் உலக யுத்தத்தினதும் காலனித்துவ வேலைத்திட்டத்தினதும் அழிவுகளை உலகத் தொழிலாளர் – ஒடுக்கப்படும் மக்கள் மேல் திணிக்கும் ஏகாதிபத்தியச் சார்பு ஏஜன்டுகளாகச் செயற்படுகின்றார்கள் ஆதலால் இந்தச் சகல ஏகாதிபத்திய ஏஜண்டு அதிகாரத்துவங்களை தொழிலாளர் வர்க்கத்திலிருந்து வெளி

(12-ம் பக்கம் பார்க்க)

## யூகோசலவாக்கியாவில் உள்நாட்டுப் போர்

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

கும் முதலாளித்துவ புனருத்தாரண வேலைத்திட்டத்தினையே அமுல் செய்து வந்தார். ஆஸ்திரிய — ஹங்கேரி முடியாட்சியின் ஒரு பாகமாக விளங்கிய சுலோவினியாவை இன்று ஆஸ்திரியாவின் ஒரு அரைக்காலனியாக மாற்றுவதே குகனின் திட்டம்.

### பொருள்ாதார நெருக்கடி

யூகோசலவாக்கியப் பொருளாதாரம் சரிந்து கொட்டி வருகின்றது. கடந்த 18மாதங்களில் தேசிய உற்பத்தி வீழ்ச்சி கண்டுள்ளது. சக்தி வாய்ந்த சமஷ்டி வரவுசெலவுத்திட்டம் கிடையாது. செலவினங்கள், பண விநியோகம் மீது கட்டுப்பாடு கிடையாது. தொழிலாளருக்கு மாதக்கணக்காகச் சம்பளம் வழங்கப்படுவதில்லை.

தேசிய உணர்வுகளின் எழுச்சியானது எந்த விதத்திலும் அந்தப் பிற்போக்குச் சித்தாந்தங்களின் பலத்தைக் குறிக்கவில்லை. சனத்தொகையில் பெருவாரியானோரின் வாழ்க்கைத்தரத்தில் ஏற்பட்டுவரும் வீழ்ச்சியைத் தொடர்ந்து உருவாகிவரும் ஆத்திரம், அச்சம், விரக்தியை ஆளும் அதிகாரத்துவம் வேண்டுமென்றே சூறையாடி வருகின்றது.

தேசிய வாதத்தின் எழுச்சி, தொழிலாளி வர்க்கத் தலைமை நெருக்கடியின் மிகவும் குரூரமான வடிவமாகும். தொழிலாளி வர்க்கம் நெருக்கடிக்கு தனது தீர்வினை முன்வைத்து சுயாதீனமான முறையில் முன்னேறுமானால் இந்தச் சகல பிற்போக்கு தேசியவாத வாயடிப்புக்களும் மறைந்து போகும்.

யூகோசலவாக்கியாவில் ஏற்பட்டுள்ள உள்நாட்டு யுத்தத்தினை உலக ஏகாதிபத்தியத்தின் சகல தட்டினரும் தமக்குச் சார்பாகப் பயன்படுத்தும் சூழ்ச்சிகளில் ஈடுபட்டுள்ளனர். இத்தாலியும், ஆஸ்திரியாவும் தமது படைகளை யூகோசலவாக்கிய எல்லைப் பிராந்தியத்தில் அணிதிரட்டுவது பற்றி அறிவித்துள்ளன. இவ்விரு நாடுகளும் ஹப்ஸ்பேக் குடியரசு காலத்தில் இருந்தே யூகோசலவாக்கிய பிராந்தியத்துக்கு உரிமை கோரி வந்துள்ளன. ஹோமன் குடியரசு காலத்திலும் கூட இக்கோரிக்கை இருந்து வந்தது.

ஜேர்மன் ஆட்சியாளர்கள், பிரிவினைவாதிகளுக்கு எதிரான யூகோசலவாக்கிய நடவடிக்கையையிட்டு கண்டனக் குரல் எழுப்பியுள்ளனர். சமஷ்டி அரசாங்கம் பெருமளவிலான படைகளை குரோஷியா சுலோவினியா பக்கம் அனுப்பியதை கண்டித்த ஜேர்மன் வெளிநாட்டு அமைச்சர் ஹென்சர், இராணுவத்துக்குப் 'பைத்தியம் பிடித்துவிட்டது. இவர்கள் நாகரீகமான நடத்தைக்கு அப்பால் சென்றுவிட்டார்கள் என்பதை நாம் புரியவைக்க வேண்டியுள்ளது'' என்றுள்ளார்.

இந்நெருக்கடி ஐரோப்பாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே வளர்ச்சி கண்டுவரும் பதட்ட நிலையை மேலும் உக்கிரம் அடையச் செய்துள்ளது. குரோஷியாவும் சுலோவினியாவும் சுதந்திரப் பிரகடனம் செய்த வேளையில் அமெரிக்க ஏகாதிபத்தியம் ஐக்கிய யூகோசலவாக்கிய அரசுக்கு தனது ஆதரவினைத் தெரிவித்துக் கொண்டது. பிரிவினைக்கு எதிர்ப்புத் தெரிவித்தது. ஐரோப்பிய அரசுகள் பிரிவினைக் குடியரசுகள் பக்கம் நின்று கொண்ட வேளையில் புஷ் நிர்வாகம், யூகோசலவாக்கிய தேசிய ஐக்கியம் பற்றிப் பேசிக் கொண்டு 'இரத்தக் களரியை தவிர்ப்பதே' முக்கிய பணி என்றது.

பால்கன் நெருக்கடிக்கு ஏகாதிபத்தியவாதிகளதும முதலாளித்துவ தேசியவாதிகளதும் நாற்றம் கண்ட ஸ்டாலினிச அதிகாரத்துவத்தினதும் பிற்போக்குச் சதிகளுக்கு எதிராகத் தொழிலாள வர்க்கம் தனது சொந்த சுயாதீன வேலைத்திட்டத்தினை முன்வைக்க வேண்டும். தேசிய எல்லைகளைத் திரும்ப வரைவதன் மூலமோ அல்லது எந்த தேசிய இனம் வரலாற்று ரீதியில் நின்றுபிடிக்கும் என்பதை தீர்மானிப்பதன் மூலமோ பிரச்சினைக்குத் தீர்வு கிட்டிவிடாது. இதைச் சகலரும் புரிந்து கொள்ள வேண்டும், உண்மையில் யூகோசலவாக்கிய நெருக்கடியின் வரலாற்று முக்கியத்துவம், சகல உருவிலான தேசிய அமைப்புக்களதும் வங்குரோத்தினை காட்டுகின்றது. தொழிலாளி வர்க்கம் தேசிய அரசு முறையை தூக்கி வீசும் ஒரு உயர் வடிவிலான சமூக அமைப்பு முறையை முன்வைக்க வேண்டும்.

படிப்பகம்

படிப்பகம்



# இனவாத யுத்தத்தினால்...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

யும் ஒடுக்கப்படும் மக்களையும் வெண்டுகின்றது.

இந்த இனவாத யுத்தம் எங்ஙனம் தொழிலாளர் — ஒடுக்கப்படும் மக்களின் யுத்தம் இல்லையோ அப்படியே இந்த யுத்தத்தில் — ஆணையிறவைக் கைப்பற்றியதில் — முதலாளித்துவ அரசாங்கம் அடைந்த இராணுவ வெற்றிகள் தொழிலாளர் — ஒடுக்கப்படும் மக்களின் வெற்றியாகிவிடாது. உண்மையில் இது தொழிலாளர் — ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராக நாடு பூராவும் பிரேமதாச அரசாங்கம் நடாத்தி வரும் யுத்தத்தில் ஒரு முன்னணியே. 1990 ஜூனில் யுத்தத்தின் புதிய கட்டத்தினைப் பிரேமதாச அரசாங்கம் ஆரம்பித்து வைத்த வேளையில் அதன் எதிர்ப்புரட்சி இலக்குப் பற்றி புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் பின்வருமாறு எச்சரிக்கை செய்தது: "இது ஏகாதிபத்தியச் சார்பு சிங்கள இனவாத ஆட்சியாளர்கள், ஒடுக்கப்படும் தமிழ் மக்களுக்கு எதிராக ஆரம்பித்து சிங்கள — தமிழ் தேசிய இனங்கள் இரண்டினதும் மக்கள் மேல் காட்டுமிராண்டிச்சர்வாதிகாரத்தை திணிப்பதன் மூலம் முடித்து வைக்கத் தொடங்கியுள்ள யுத்தமாகும்" (கம்கறு — மாவத்த' — 22-06-1990)

இந்த இலக்குகளை அடையும் பொருட்டுவெறிகொண்டு செயற்படும் யூ. என். பி. அரசாங்கம், கடந்த ஆண்டு பூராவும் வட-கிழ் மாகாண யுத்தத்தினை மிலேச்சமான முறையில்தொடர்ந்து நடாத்தியது. அத்தோடு ஏனையமாகாணங்களில் தொழிலாளர்கள், ஏழைகளின் தொழில் வாழ்க்கைத் தரங்களை அடிப்படை ஜனநாயக உரிமைகளை நாசமாக்கும் தாக்குதலை உக்கிரமாக்கியது. கடந்த ஆண்டில் மட்டும் விடுதலைப் போராளிகள் தவிர சுமார் 10 ஆயிரம் தமிழ் பொது மக்கள் யுத்தத்தில் கொலையுண்டனர். வடக்கு - கிழக்கில் வாழும் தமிழ் தேசிய இனத்தினரின் அரைவாசிக்கு மேற்பட்டோரின் சொத்துக்கள் நாசமாக்கப்பட்டு அகதிகளாக்கப்பட்டனர். உணவு, மருந்துப் பொருட்கள் மற்றும் அத்தியாவசிய பொருட்களின் விநியோகம் தடைசெய்யப்பட்டது. இதனால் இப்பிரதேச மக்கள் பட்டினிக்கும் நோய் நொடிகளுக்கும் இலக்காகினர்.

பிரேமதாச அரசாங்கம் இந்த இனவாத யுத்தத்தின் புதிய கட்டத்தினை ஆரம்பிப்பதற்கு ஒரு ஆண்டுக்கு முன்னர் - 1989 - தென் மாகாண கிராமப்புறங்களில் ஏழைகளை ஒடுக்கித்தள்ளும் பொருட்டு நடாத்திய படுகொலை இயக்கத்தின் மூலம் சுமார் 1 இலட்சம் இளைஞர்களை சுட்டுப் பொசுக்கியதோடு மற்றும் 17000 இளைஞர்களை பயங்கரச் சிறைக்கூடங்களில் தள்ளியது.

யூ.என்.பி. அரசாங்கம்இந்த யுத்தத்தினை ஏகாதிபத்திய கடன்களை கொண்டு மக்களை நசுக்கிப் பிழிவதன் மூலமும் நடாத்தி வருகின்றது. கடந்த ஆண்டில் மட்டும் இந்த இனப்படுகொலை யுத்தத்துக்கு 2090 கோடி ரூபாக்களை அரசாங்கம் செலவிட்டது. அரச படைகள் அடைந்த தோல்விகளும், பின்வாங்கல்களும் ஒன்று இரண்டல்ல. கடந்த ஆண்டில் மட்டும் சுமார் 1500 அரசாங்கப் படையினர் கொல்லப்பட்டனர். இதைவிட இரண்டு மடங்கினர் அங்கவீனர்களாகினர், இருந்த போதிலும் இந்த இனப்படுகொலை யுத்தத்தினைத் தொடர்ந்து நடாத்துவது முதலாளி வர்க்கத்துக்கு வாழ்வுக்கும் சாவுக்கும் இடையேயான பிரச்சினையாகியுள்ளது. தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்தினை சிதறடிக்கும் அதே வேளையில் தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களை இனவாத யுத்தப் பளுவினால் நசுக்கியும் இராணுவ பயங்கரத்தினை கட்டவிழ்த்தும் ஏகாதிபத்திய பகற்கொள்ளைக்குச் சுரண்டலுக்கு வாய்ப்பான களத்தினை சிருஷ்டிக்கும் நடவடிக்கைகளில் பிரேமதாச அரசாங்கம் ஈடுபட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி கட்டளையின் பேரில் அரசாங்கத் துறையில் 91,000 தொழில்களைவெட்டியுள்ள அரசாங்கம், தோட்டத் துறையில் தனியார்மயமாக்கம் மூலம் இலட்சக்கணக்கான தொழிலாளர்களின் வேலைகளுக்கு உலைவைக்க முயன்று வருகின்றது. வெளிநாட்டு, முதலீட்டாளர்களுக்கு நிலங்களை கையளிக்கும் திட்டத்துடன் முழு நாட்டினையும் சுதந்திர வர்த்தக வலயமாக்குவதே தமது திட்டம் என ஜனாதிபதி பிரேமதாச குறிப்பிட்டுள்ளார். இலங்கைக்கு உதவி வழங்கும் குழுவின் கூட்டம் 1992 ஜனவரிக்கு ஒத்திப் போடப்பட்டுள்ள நிலைமையில் அதன் திட்டங்களை முழுமனே அமுல் செய்ய யூ. என். பி. அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது. இந்த இலட்சணத்தில்தான் வட - கிழ் மாகாண தமிழ் ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராக நடாத்தி வரும் யுத்தம் 'நாட்டின் இறைமையை காக்க' என யூ. என். பி. அரசாங்கம் கூறிக் கொள்கின்றது.

வட - கிழ் மாகாண யுத்தத்துடன் இணைந்த முறையில் தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராக இனவாதத்தினை தூண்டி விடும் நடவடிக்கைகளில் யூ. என். பி. அரசாங்கமும் ஆயுதப்படைகளும் ஈடுபட்டுள்ளன. தோட்டத்துறையில் இராணுவமும் பொலிசும் இணைந்து ஊர்வலம் நடாத்தி, தொழிலாளர்களை கிலியடையச் செய்ய முயல்கின்றன. இதே யுத்தத்தின் மூலம் நாடுபூராவும் உள்ள தொழிலாளர்கள் மேல் பாய்ந்து விழவும் அரசு எங்ஙனம் செயற்படுகின்றது என்பதற்கு இது நல்லதோர் உதாரணம். மேல் மாகாணத்தில் 'பயங்கரவாத தாக்குதல்' பற்றிய பீதியைப் பரப்பி, பெயர் விபரங்களை திரட்டி வரும் அரசாங்கம் இவற்றின் மூலம் தொழிலாளர் - ஒடுக்கப்படும் மக்களுக்கு, கால்கட்டுப்போட முயல்கிறது. பிரேமதாச அரசாங்கம் 'வெகுஜன தொடர்பு சாதன கமிஷன்' மூலம் அவசரகாலச் சட்டத்தை சாதாரண சட்டமாக்கவும் தொழிற்பட்டு வருகின்றது. இதன் மூலம் பத்திரிகைகள் செய்தி சேகரித்த 'மூலங்களை' அம்பலப்படுத்த வேண்டும்.

இன்று பிரேமதாச அரசாங்கம் நடைமுறைப்படுத்துவது ஏகாதிபத்தியவாதிகளது உலக யுத்தம் காலனிமயமாக்கல் வேலைத்திட்டத்தின் கீழ் தீர்மானம் செய்யப்பட்ட கொள்கைகளே. இக்கொள்கைகளை அமுல் செய்ய ஏகாதிபத்தியம் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், உதவி வழங்கும் குழு' ஆதியனவற்றைப் பயன்படுத்துகின்றது.

## இந்தியா

இந்தியாவில் நரசிம்மராவ் அரசாங்கம் அமுல் செய்து வரும் கொள்கைகள் ஏகாதிபத்திய நிதி மூலதனத்தின் ஆக்கிரமிப்பினையும் தேசிய முதலாளி வர்க்கத்தின் தலை குனிவையும் தெளிவுபடுத்தியுள்ளது. நரசிம்மராவ் அரசாங்கம் ஆட்சிக்கு வந்த ஒரு சில வாரங்களுள் 'நேரு சோசலிசம்', 'கூட்டுச்சேராமை' மோசடிகள் அம்பலமாகியதோடு, முழு நாட்டினையும் ஏகாதிபத்திய வங்கியாளர்களிடம் ஈடு வைக்க காங்கிரஸ் கட்சி அரசாங்கம் முன்வந்தது. வெளிநாட்டு மூலதனப் பாய்ச்சலைக் கட்டுப்படுத்தும் வெளிநாட்டுச் செலாவணி விதிகள், ஏற்றுமதி இறக்குமதி கட்டுப்பாடுகளை நீக்கத் தொடங்கிய நரசிம்மராவ் அரசாங்கம், அரச நிறுவனங்களை பரந்தளவில் தனியார் மயமாக்கவும் ஆரம்பித்துள்ளது.

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையைக் காக்கும் அதே சமயம் ஏகாதிபத்திய வாதிகளதும் பிராந்தியத்தின் பிற்போக்கு ஆட்சியாளர்களதும் உதவியுடன் தமிழ் முதலாளி வர்க்கத்தின் ஆட்சியைத் திணிக்கும் விடுதலைப் புலிகளின் வேலைத்திட்டத்தின் மூலம் அந்த உரிமையைப் பேணிக் கொள்ள முடியாது எனக் கூறி வைக்கின்றது, பிரேமதாச அரசாங்கத்துடன் அவர்கள் இராணுவ ரீதியில் மோதிக் கொண்டாலும் அவர்களின் யுத்தம் இந்த வேலைத் திட்டத்தின் அடிப்படையிலேயே இடம்பெறுகின்றது. அத்தகைய வேலைத்திட்டம் ஏகாதிபத்தியத்தின் காலனிமயமாக்கல் வேலைத்திட்டத்தின் கைத்தேங்காயாகும் ஆபத்து உண்டு. அவ்வாறே ஏகாதிபத்திய வாதிகளதும் பிரேமதாச அரசாங்கத்தினதும் தாக்குதலுக்கு எதிராக தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்கள் ஐக்கியப்படுவதனை தடுக்கும் இனவாத பிளவுகளுக்கு அந்த முதலாளித்துவ வேலைத்திட்டம் சேவகம் செய்யும் ஆபத்தும் உள்ளது.

பிரேமதாச அரசாங்கத்தின் இராணுவ இயக்கத்துக்கு 'ஆமா' போடும் சமசமாஜ - கம்யூனிச- நவசமசமாஜ தலைவர்களின் - தேசிய சோசலிச போதனைகள் உலக வங்கியினதும், பன்னாட்டு ஏகபோகங்களதும் ஏஜன்டாக செயற்படுகின்றது. எனவே தான் பாட்டாளி வர்க்கத்துக்கும் ஒடுக்கப்படும் மக்களுக்கு புதிய பாதை அவசியமாகியுள்ளது. அப்பாதை, இத் தலைவர்களின் தேசியவாத குப்பை கூழங்களை துடைத்துக் கட்டி, உலக பாட்டாளி வர்க்கத்துடன்ஐக்கியத்தினை உறுதி செய்வதாக விளங்க வேண்டும். அந்த இலக்கில் இந்தியத் துணைக் கண்டத்தில் சோசலிச குடியரசு ஒன்றியத்தினை கட்டி எழுப்புவதன் பாகமாக தமிழ் ஈழம் - இலங்கை சோசலிச குடியரசு ஒன்றியத்தினை அமைக்கும் வேலைத் திட்டத்திற்குப் போராட வேண்டும்.

இனவாத யுத்தத்துக்கு ஒரு சதமோ ஒரு ஆளோ வழங்காதே! தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையைப் பேணு! வடக்கு - கிழக்கில் இருந்து இலங்கை இராணுவத்தை வெளியேற்று!

★ கிராமப்புற படுகொலைகளை நிறுத்து! அரசியல் கைதிகளை விடுதலை செய்!

★ உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் வேலைத்திட்டங்களுக்கு எதிராக - முதலாளிகளின் தாக்குதல்களுக்கு எதிராகப் போராடு! பிரேமதாச அரசாங்கத்தின் எதிர்ப்புரட்சி வேலைத்திட்டங்களுக்கு எதிராக தொழிலாள ஒடுக்கப்படும் மக்கள் அமைப்புக்கள் இந்த பிரேரணைகளை நிறைவேற்றி, பிரச்சாரத்தினை ஆரம்பிக்க வேண்டும்.

# உலகத் தொழிலாளர்...

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

யேற்றி புரட்சித் தலைமையாக நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவினை உலகளாவிய ரீதியில் கட்டி எழுப்புவதன் மூலமே உலக யுத்தத்துக்கும் காலனித்துவத்துக்கும் எதிரான உலகத் தொழிலாளர்களை அணி திரட்ட முடியும்.

இந்நூற்றாண்டில ஏகாதிபத்தியவாதிகள் இருதடவை உலகினை காலனிகளாகப் பகிரும் யுத்தத்தின் மூலம் கோடானுகோடி தொழிலாளர்களையும், ஒடுக்கப்படும் மக்களையும், பேரளவிலான உற்பத்திச் சக்திகளையும் அழித்தனர். முதலாம் உலக யுத்தத்தில் சமூக ஜனநாயகவாத தலைவர்கள் தத்தம், நாடுகளின் ஏகாதிபத்திய முதலாளி வர்க்கங்களின்பின்னால்அணி திரண்டு தொழிலாள - ஒடுக்கப்படும் மக்களை யுத்தத்தின் பேரழிவுக்கு பலியாக்கினர். இரண்டாம் உலகயுத்தத்தின் போது சமூக ஜனநாயகவாதிகளை அணிதிரட்டிய ஸ்டாலினிசத் தலைவர்கள் ஏகாதிபத்திய பகற்கொள்ளை யுத்தத்துக்கு பூரண ஆதரவு வழங்கியதன் மூலம், மீண்டும் ஒரு தடவை தொழிலாள — ஒடுக்கப்படும் மக்களைஇரத்தப்பலியெடுக்க உதவினர். அத்துடன் நின்றுவிடாது இத்துரோகிகள் இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர்ஏகாதிபத்தியத்துடன் புரட்சிகரமான முறையில் கணக்குவழக்குகளைத் தீர்த்துக் கொள்ள அனைத்துலகத் தொழிலாள வர்க்கம் எடுத்த முயற்சியைத் தடுத்ததோடு உலகம் பூராவும் சமபல நிலையை ஏகாதிபத்தியம் சிருஷ்டிக்கப் பூரண முண்டு வழங்கினர்.

இன்று ஸ்டாலினிச, சமூக ஜனநாயக தலைவர்களும் இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் திணிக்கப்பட்ட ஏகாதிபத்திய உலக அமைப்புக்கு அடிபணிந்த பப்லோவாத திரிபுவாதிகள் உள்ளடங்கலான துரோகத் தொழிலாளர் தலைவர்களும் மூன்றாம் அணுவாயுத உலக யுத்தத்துக்கு உலகத் தொழிலாள — ஒடுக்கப்படும் மக்களை அடிமைப்படுத்த ஏகாதிபத்தியத்துக்கு ஆதரவு வழங்க முன் வந்துள்ளனர்,

முதலாளித் துவத்தினைப் புனருத்தாரணம் செய்து தத்தம் நாடுகளில் ஏகாதிபத்திய நிதி மூலதனத்தின் சுரண்டலுக்கு களம் அமைத்துக் கொடுக்க சோவியத் யூனியன், கிழக்கு ஐரோப்பா, சீனா வியட்னாம் ஸ்டாலினிச அதிகாரத்துவங்கள் கடைப்பிடித்துவரும் வேலைத்திட்டங்கள் ஏகாதிபத்திய யுத்தத்தினதும் காலனித்துவத்தினதும் வேலைத்திட்டத்துடன் இணைந்தன. இந்தியாவிலும் இலங்கையிலும் ஏகாதிபத்தியச் சார்பு முதலாளித்துவ அரசாங்கங்கள் உலகவங்கி, சர்வதேச நாணய நிதியத்தின் கட்டளைப்படி இந்நாடுகளை ஏகாதிபத்திய யுத்தம், காலனித்துவ திட்டங்களுடன் முழுமனே இணைத்துக் கொண்டுள்ளனர். சிலாபத்தில் 350 ஏக்கர் நிலம் 'வொய்ஸ் ஒப் அமெரிக்கா' — யுத்தக் குரல் நிலையத்துக்கு ஒதுக்கிக் கொடுத்ததன் மூலம் பிரேமதாச அரசாங்கம் இந்தியத் துணைக் கண்டத்தில் ஏகாதிபத்திய இராணுவ மோதுதல்களுக்கு இலங்கையில் திடல் அமைத்துக் கொடுத்துள்ளது. இந்தியாவில் சீபிஐ. சீபிஎம் ஸ்டாலினிச கட்சிகளின் தலைவர்களும் இலங்கையில் சமசமாஜ கம்யூனிச, நவசமசமாஜ, இ. தொ. கா, தம்பு தலைமைகளும் ஏகாதிபத்திய யுத்த திட்டங்களுக்குள் முழுமனே இணைந்து கொண்டு தத்தம் நாடுகளில் முதலாளித்துவ அரசாங்க, ஏகாதிபத்திய யுத்தத்தயாரிப்புக்களின் பின்னால் அணிதிரண்டுள்ளனர்.

இந்நிலையில் இலங்கையினுள் யூ. என். பி-சி.ல.சு.க, ஏகாதிபத்திய சார்பு அரசியல் கட்சிகளுக்கு ஆதரவு தரும் சமசமாஜ கம்யூனிச நவசமசமாஜ, இ. தொ. கா, தம்பு போன்ற துரோகத் தலைமையை வெளியேற்றி இந்தியத் துணைக்கண்டத்தினுள் சீபிஜ சீபிஎம் கட்சிகளை வெளியேற்றியும் தொழிலாள வர்க்கப் புரட்சித் தலைமையாக நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தையும் இந்தியாவில் அதன் சகோதர இயக்கமான சோசலிச தொழிலாளர் கழகத்தையும் கட்டி எழுப்புவது பெரிதும் தீர்க்கமானது. அதன் பேரில் போராட இந்த இளம் சோசலிஸ்டுகள் மகாநாடு சபதம் பூணுகின்றது. அவ்வாறே நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் முன்நோக்கினை இந்தியத் துணைக்கண்டம் பூராவுமுள்ள கோடானுகோடி தொழிலாள—ஒடுக்கப்படும் மக்கள் மத்தியில் எடுத்துச் செல்வதன் மூலம் பேர்ளினில் நடைபெறும் உலக தொழிலாளர் மகாநாட்டிற்கு பலம்வாய்ந்த பேராளர் குழுவை அனுப்ப இம்மகாநாடு சபதம் பூணுகின்றது.

கொழும்பு—10, 1ஆவது மாளிகாகந்தை ஒழுங்கை இலக்கம் 90ல், வசிக்கும் ஆனந்தவக்கும்புறவினால் மஹரகம நாகஹவத்தை வீதி 51ஆம் இலக்கத்திலுள்ள பியதாச அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

www.padippakam.com

www.padippakam.com



# "தொழிலாளர் பாதைக்கு" எதிரான விடுதலைப் புலிகளின் ஆத்திரமூட்டலை தோற்கடி!

செப்டம்பர் 7ல் ஸ்ருட்காட்டில் நடைபெற்ற விடுதலைப் புலிகளின் இசைவிழாவின் (DGB-ஜேர்மன் தொழிற் சங்க சம்மேளனம்) மண்டபத்தின் வெளியே நின்று தொழிலாளர் பாதை விநியோகித்த நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ் கழகத்தின் ஜேர்மன் பிரிவின் அங்கத்தவர்களை விடுதலைப் புலிகளின் வெளிநாட்டுத் தலைமை தடுத்து நிறுத்த எடுத்த முயற்சி தோற்கடிக்கப் பட்டது.

முதலில் இத் தலைவர்களில் ஒருவர் பு.க.க. அங்கத்தவர்களை மண்டபத்தின் வாயிலில் இருந்து முற்றாக வெளியேற்றும் நோக்கத்துடன் ஒரு தந்திரத்தைப் பாவித்தார். மாதந்தோறும் தானும் தொழிலாளர் பாதை வாங்குவதாகவும் வாயிலில் நின்று பத்திரிகை விற்காமல் வீதியில் போய் விற்குமாறும் வேண்டுகோள் விடுத்தார்.

இதற்குப் பதிலாக பு.க.க. அங்கத்தவர்களால் இது நடை பாதை இதில் நின்றுதான் நாம் தொழிலாளர் பாதை விநியோகிப்போம், இது எமது ஜனநாயக உரிமை எனக் கூறப்பட்டது. இதைக் கேட்டு சகிக்க முடியாத இத் தலைவர் நீங்கள் இவ் விடத்தை விட்டு போகாவிடில் நாமும் இதில் நாலுபேரை நிறுத்தி தொழிலாளர் பாதைக்கு எதிராக செயல்படவேண்டி நேரும் எனக் கூறி, தொடர்ந்தாற்போல் வருபவர்களிடம் தொழிலாளர் பாதையை யாருமே வேண்டாதீர்கள் எனக் கூச்சல் போட்டார். இவ்வாறு ஆத்திரமூட்டல் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்திற்கு எதிராகவும், தொழிலாளர் பாதைக்கு எதிராகவும் புலிகளின் தலைமையின் ஆத்திரமூட்டல் உண்மையில் அனைத்து ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களுக்கும், தமிழ், சிங்கள தொழிலாள வர்க்கத்திற்கும் எதிரானது என்பதை அனைத்து தொழிலாளர்களும் விளங்கிக் கொள்ளவேண்டும்.

மேலும் இவ் ஆத்திரமூட்டல் ஒரு தற்செயல் நிகழ்வு என்றோ அல்லது இதை தலைமை தாங்கி நடத்திவைத்த ஒரு சில தனிப்பட்ட விடுதலைப் புலி அங்கத்தவர்களின் விருப்பு, வெறுப்பு, ஆத்திரமூட்டலோ அல்ல, மாறாக குட்டி முதலாளித்துவ தேசிய விடுதலை இயக்கத்தின் ஒட்டுமொத்தமான வர்க்க நலன்கள் அடிப்படையில் ஒரு சுயாதீனமான தொழிலாளவர்க்கத்தின் ஐக்கியத்திற்கு நேர் எதிரானது என்பதை இனம் காணப்படல் வேண்டும்.

தமிழ் மக்களின் பரம விரோதியான இனவாத பிரேமதாசா அரசாங்கத்துடனும், இந்திய முதலாளித்துவத்துடனும் நெருக்கமான உறவுகளை வைத்துக்கொண்டுள்ள விடுதலைப் புலிகளின் தலைமைக்கும், அதன் முதலாளித்துவ வேலைத்திட்டத்திற்கும் எதிராக இலங்கையில் பு.க.க. மட்டுமே தமிழ் சிங்கள தொழிலாளவர்க்கத்தை அணிதிரட்டிப் போராடுகின்றது. இன்று இந்தப் போராட்டம் தொழிலாள வர்க்கத்திற்குள் கணிசமான மாற்றத்தை ஏற்படுத்துவதுடன், இதுவரையிலும் இலங்கையில் இனவாதத்திற்கு அடிபணிந்த பாரம்பரிய தொழிலாள வர்க்கக் கட்சிகளான லங்கா சமசமாஜக் கட்சி, நவசமசமாஜக் கட்சி, சிறிலங்கா கம்யூனிஸ்ட் கட்சி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைமைகளுக்கு எதிராகவும், சிறப்பாக வடக்கு, கிழக்கில் தமிழ் தேசிய குட்டி முதலாளித்துவ இயக்கங்களுக்கு எதிராகவும் தொழிலாள வர்க்கம் கிளர்ந்தெழுந்து வருகிறது.

இந் நிலையில் ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களையும், தொழிலாள வர்க்கத்தையும் தனது வங்குரோத்து தேசியவாத வேலைத்திட்டத்தின் கீழ் மீண்டும் கட்டுப்படுத்த எடுத்த முயற்சியின் ஒரு வெளிப்பாடுதான் தொழிலாளர் பாதைக்கு எதிரான விடுதலைப் புலிகளின் நடவடிக்கையாகும். நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவும், புரட்சிக் கம்யூனிஸ்கழகமும் உலகெங்கிலுமுள்ள அனைத்து வகையறாக்களைச் சேர்ந்த குட்டி முதலாளித்துவ தேசியவாத தலைமைகளிடமிருந்து தொழிலாள வர்க்கத்தின் அரசியல் சுயாதீனத்திற்கும், அதை சோசலிசப் புரட்சியின் வெற்றிக்கு இட்டுச் செல்லும் புரட்சிகர தலைமையை நிர்மாணிப்பதற்காகவும் போராடுகின்றது.

இதைத் தொடர்ந்து பு.க.க. அங்கத்தவர்களை அவ்விடத்தைவிட்டு வெளியேற்றும் முயற்சியில் ஜேர்மன் தொழிற்சங்க சம்மேளனத்தின் மண்டப நிர்வாகிகள் எமக்கெதிராக தலைமை தாங்கிய விடுதலைப் புலிகளின் அங்கத்தவர்களால் கொண்டு வரப்பட்டனர். இது மிகவும் தெளிவாக ஜேர்மன் தொழிற்சங்க (DGB) சம்மேளனத்தின் அதிகாரத்துவங்களுக்கும், அதன் அதிகாரிகளுக்கும், விடுதலைப் புலிகளின் வெளிநாட்டுத் தலைமைக்கும் இடையேயுள்ள பிரிக்கமுடியாத முதலாளித்துவ வர்க்க உறவை தெளிவாக எடுத்துக் காட்டியது. புலிகளின் தலைமை தொழிற்சங்க சம்மேளன அதிகாரத்துவங்களுடன் இணைந்து பு.க.க. அங்கத்தவர்களை பொலிசில் பிடித்து கொடுப்போம் என மிரட்டியதுடன் பு.க.க. அங்கத்தவர்கள் தெருவில் நின்று பத்திரிகை விற்பதையும் தடை செய்யும் நோக்கில் புலிகளின் தலைமை மண்டபத்தை அண்மித்துள்ள சந்து, பொந்து, பல இடங்களிலும் தமது அங்கத்தவர்களை நிறுத்தி பு.க.க. எதிரான பிரச்சாரத்திலும், தொழிலாளர் பாதை பத்திரிகையை தொழிலாளர்கள், இளைஞர்களை வேண்ட விடாமல் தடுப்பதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

இந் நடவடிக்கையானது ஒடுக்கப்பட்ட தமிழ் மக்கள், தொழிலாளர்களை குட்டி முதலாளித்துவ இயக்கங்களான ரெலோ, புளட், ஈ.பி.ஆர்.எல்.எவ்., ஈரோஸ் போன்றவை பிரேமதாசா அரசாங்கத்துடன் இணைந்து செய்த காட்டிக்கொடுப்புகளையும் துரோகங்களையும் தமிழ் மக்கள் எவ்வாறு விளங்கிக் கொண்டு அவற்றை வெறுத்து ஒதுக்கினார்களோ அந்த திசையில் இன்று விடுதலைப் புலிகள் பயணம் செய்வதின் பகிரங்கமான வெளிப்பாடே இதுவாகும்.

மத்திய கிழக்கில் ஈராக்குக்கு எதிரான அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் யுத்தம் சர்வதேச தொழிலாள வர்க்கத்திற்கு ஒரு தீர்க்கமான அனுபவமாகவும், அதே சமயம் உலகெங்குமுள்ள ஒடுக்கப்பட்ட மக்கள், ஏழை விவசாயிகளை தனக்குப் பின்னால் அணிதிரட்டிக்கொள்ளவேண்டிய துரித கதியையும் அறிவிக்கின்றது. மறுபக்கத்தில் யுத்தத்தின் கோரமான அழிவுகளை நியாயப்படுத்திய ஸ்ராலினிசம் முதல் கொண்டு, சமூக ஜனநாயகம், மற்றும் ஏனைய மத்தியவாத, குட்டி முதலாளித்துவ தேசியவாத வீரர்கள் வரையிலும் இவ் யுத்தத்தின் பங்காளிகளாகவும், ஏகாதிபத்திய, முதலாளித்துவத்தின் ஏஜண்டுகளாகவும் தம்மை மாற்றிக் கொண்டுள்ளனர். இதற்கு விடுதலைப் புலிகள் தலைமை அடிமைப்பட்டுப் போவது ஒன்றும் ஆச்சரியமில்லை.

தொழிலாளர் பாதை இதழ் 40இல் மிகவும் சரியாக கூறியுள்ளபடி "விடுதலைப் புலிகள் இயக்கம் தாம் தமிழ் தேசிய இனத்தின் சுய நிர்ணய உரிமைக்காகப் போராடவில்லையெனவும், அவ்வாறு செய்வதில் தோல்வி கண்டுவிட்டதாகவும் நிரூபித்து பல காலம் கடந்துவிட்டது. உண்மையில் வெளி, வெளியாக யூ.என்.பி. அரசாங்கத்துடன் அணிதிரண்டுள்ள ஈ.பி.ஆர்.எல்.எவ் போன்ற ஏனைய தமிழ் குட்டி முதலாளித்துவ இயக்கங்கள் போன்று விடுதலைப் புலிகள் இயக்கத்தின் உள்ளும் தமிழ் தேசிய இனத்தின் சுய நிர்ணய உரிமைக்காக போராடும் வல்லமை உள்ளடங்கி இருக்கவில்லை. இது அதன் சமூகத் தன்மையில் இருந்து தோன்றியது, அரசியலில் வெளிப்பாடாகியது. குட்டி முதலாளித்துவத் தலைமைகள் தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடுவது முழுத் தேசிய இனத்தினதும், சிறப்பாக அத்தேசிய இனத்தின் ஒடுக்கப்படும் பிரிவினரின் விடுதலைக்காக அன்றி சிறு பான்மை தேசிய இனத்தின் தொழிலாள வர்க்கத்தைச் சுரண்டுகையில், ஏகாதிபத்தியத்தின் ஏஜண்டாகச் செயல்படும் சிறப்பு உரிமையைத் தாம் பெற்றுக்கொள்ளவே. லெனின் இதனைத் தமது 'சோசலிசப் புரட்சியும், தேசிய இனங்களின் சுய நிர்ணய உரிமையும்' என்ற கட்டுரையில் பின்வருமாறு தெளிவுபடுத்தினார். ஒடுக்கப்படும் நாடுகளின் முதலாளி வர்க்கம் தொழிலாளர்களை ஏமாற்றும் பொருட்டு தேசிய விடுதலை பற்றிய சுலோகத்தினை அடிக்கடி பயன்படுத்துகின்றனர். தமது உள்ளார்ந்த கொள்கைகளில் இவர்கள் இந்த சுலோகத்தின் மேன்மையை தேசிய இனத்தின் முதலாளி வர்க்கத்துடன் பிற்போக்கு உடன்பாடுகளுக்காகப் பயன்படுத்துகின்றனர். அவர்களின் வெளிநாட்டுக் கொள்கைகளில், அவர்கள் தமது பகற் கொள்ளைத் திட்டங்களை அமுல் செய்யும் பொருட்டு ஏகாதிபத்திய வல்லரசு ஒன்றுடன் உடன்பாட்டுக்குச் செல்ல முயற்சிக்கின்றனர்." (லெனின் நூல் தொகுதி தொ.22, பக்கம் 148, ஆங்கிலம்)

இதனால்தான் இத் தமிழ் தேசிய முதலாளித்துவத் தலைமைகள் தமிழ் விடுதலைப் போராட்டம் எங்கே கை நழுவிப்போய் ஒடுக்கப்பட்ட மக்கள், தொழிலாள வர்க்கத்தின் தலைமையில் ஒரு போராட்டமாக வெடிக்காமலும், தமது நலன்கள், சலுகைகளுக்கு ஆபத்து நேரிடாமலும் பார்த்துக்கொள்வதில் அக்கறையாய் உள்ளனர்.

இதுவே விடுதலைப் புலிகளின் தலைமை வளர்ச்சியடைந்துவரும் ஒரு சுயாதீனமான தொழிலாள வர்க்கத்தின் தலையீட்டைக் கண்டு பேரதிர்ச்சியும், கிலியும் கொண்டுள்ளது. இக் காரணிகளே அவர்களை பு.க.க. த்தின் மீதும், தொழிலாளர் பாதை மீதும் வெறுப்படைய வைத்தது. இந்நிலைமைகளில் விடுதலைப் புலிகளின் வெளிநாட்டுத் தலைமையும், அவர்களினதும் ஏஜண்டுகளினதும் ஆத்திரமூட்டல் பிரச்சாரத்தினை முறியடித்த ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களும், தொழிலாளர்களும் பு.க. கழகத்திற்கு தமது ஆதரவை வழங்கினர். இருபது தொழிலாளர் பாதையும், ஆறு "ஏகாதிபத்திய யுத்தத்தையும் காலனித்துவத்தையும் எதிர்!" - எனும் கடந்த மே மாதத்தில் வெளியான அனைத்துலகக் குழுவின் விஞ்ஞாபனமும் விற்கப்பட்டதுடன், துண்டுப் பிரசுரமும் (இது கடந்த 17 ஜூலை பொன்னில் நடைபெற்ற ஊர்வலத்தில் அரசியல் தஞ்சம் கோரியோரை நாடு கடத்தும் ஜேர்மன் முதலாளித்துவத் திட்டத்திற்கு எதிராக போராடிய ஒரேயொரு சர்வதேச தொழிலாள வர்க்கக் கட்சியான பு.க.கழகத்தால் விநியோகிக்கப் பட்டது) விநியோகிக்கப்பட்டு, நிதியும் சேகரிக்கப்பட்டது.

நாம் சில தொழிலாளர்கள், இளைஞர்களோடு எமது உலக சோசலிச வேலைத்திட்டத்தினடிப்படையில் கலந்துரையாடுகையில் அவர்களில் ஒருவர் ஏற்கனவே பு.க.க.த்தின் முன்னோக்குகள் சிலவற்றை படித்திருப்பதாகவும், எமது போராட்டத்தை அறிந்திருப்பதாகவும் கூறினர், அவர்கள் மேலும் கூறுகையில் "இலங்கையில் விசேடமாக ஒடுக்கப்பட்ட தமிழ், சிங்கள மக்களை இனவாதத்திற்கும், யு.என்.பி. அரசாங்கத்திற்கும் கீழ்ப்படுத்திய தொழிலாள வர்க்கத் தலைமைகள் முதல் தமிழ்த்தேசிய மக்களின் சுய நிர்ணய உரிமையைக் காட்டிக்கொடுத்த அனைத்து குட்டி முதலாளித்துவ தலைமைகள் வரையிலும் படு பிற்போக்கானவர்களே. இவர்களை நிட்சயமாக தொழிலாளவர்க்க இயக்கங்களிலிருந்து வெளியேற்றி தோற்கடிப்பதும், தமிழ், சிங்கள தொழிலாள வர்க்கத்தின் ஐக்கியத்திற்காகப் போராடுவதும் மிகவும் முக்கியமானது" என்றனர்.

இத் தொழிலாளர், இளைஞர்களது கருத்து மிகவும் அடிப்படையில் பு.க.க.த்தின் முன்னோக்குகளை நிரூபிப்பதுடன் தொடர்ச்சியான, விட்டுக்கொடுக்காத போராட்டத்தை தொழிலாளவர்க்கத்திற்கு விரோதமான அனைத்து போக்குகளிற்கும் எதிராக போராட வேண்டிய அவசியத்தையும் சுட்டிக் காட்டுகிறது.

ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களின்
சுய நிர்ணய உரிமைக்காக
டுவதாகக் கூறிக்கொண்ட
து குட்டி முதலாளித்துவ தமிழ் தே
விடுதலை இயக்கங்களான
ஈ.பி.ஆர்.எல்.எவ், புளட், ஈரோ
போன்றவை இன்று அப்பட்டமா
தமிழ் மக்களுக்கு எதிராக
பிரேமதாசா அரசாங்கத்துடன்
ந்து செயல்படுகின்றன. அமெ
ஏகாதிபத்தியின் பின்னணியில் ந
ற்ற இலங்கை-இந்திய ஒப்பந்த
ஏற்றுக்கொண்டு விடுதலைப் புலி
தமது ஆயுதங்களை முதலில்
டைத்தனர். பின்னர் நிர்ப்பந்த
ரணமாக இந்திய இராணுவத்
எதிரான ஆயுதப் போராட்டம்
நது. இந்திய இராணுவம் வடக்
க்கை விட்டு வெளியேறியதும்,
ப்புலிகள் பிரேமதாசா அரசாங்
டன் பேச்சுவார்த்தைக்கு சென்
தாம தமிழ மககளுக்கான மா
சுயாட்சிக்கு உடன்படுவதாக
க் கொண்டது. இது சுய நிர்ண
மைக்கான கோரிக்கையை
யாகத் தூக்கியெறிந்து துரோ
செய்ததின் வெளிப்பாடாகும்.
பின்னர் பேச்சுவார்த்தை முறிவ
தும் விடுதலைப் புலிகள் மீண்டு
தப் போராட்டத்தை முன்னெடு
நிர்பந்திக்கப்பட்டனர்.

விடுதலைப் புலிகளுக்கும், பிரேமதா
சக்கும் இடையேயான இப்பேச்ச
தையை ஒடுக்கப்பட்ட தமிழ் ம
முற்றாக வெறுத்து ஒதுக்கிய
வெளிப்பாடாகவே இந்திய இர
விலகலுக்குப் பின்னால் யு.என்
சாங்கத்தால் வடக்கு, கிழக்கு
லில் மறுபடியும் அமைக்கப்பட்ட
ல் நிலையங்கள், இராணுவ முக
ளை அவ்விடங்களை விட்டு அப்பு
த்தும் நோக்கில் தமிழ் மக்கள்
ற்றை சூழ அணிதிரண்டனர்
தாக்கத்திற்கு எதிராக விடுத
புலிகள் மீண்டுமொருமுறை
கை இராணுவத்திற்கு எதிரா
ஆயுதப் போரில் இறங்க நெருக்
டது. இவற்றிற்கு இடையே ஒரு
விடுதலைப் புலிகள் ஆழமான
கடியை முகம்கொடுக்கின்றன
புறத்தில் ஒடுக்கப்பட்ட தமிழ்ம
யும், தொழிலாள வர்க்கத்தை
விடுதலைப் புலிகள் ஒரு முட்டுச்
யில் கொண்டுவந்து நிறுத்தி
முர்கள் என்பதை தமிழ்மக்க
ந்து கொள்ளத் தொடங்கியுள்
இதேபோன்று விடுதலைப் புலி
சுய நிர்ணய உரிமைக்கான
டத்தை முன்னெடுக்க முடியா
பதையும் உணரத்தொடங்கி
ர்கள்.

(17-ம் பக்கம் பார்க்க)

படிப்பகம்

## 'இளம் சோசலிஸ்டுகள்' 10வது தேசிய மகாநாடு:

# "மகாநாடு ஒரு பலம் வாய்ந்த புரட்சிகரக் கூ

**இளம் சோசலிஸ்டுகளின் 10வது தேசிய மகாநாட்டில் இடம்பெற்ற கலந்துரையாடலுக்கு பதிலிறுத்து புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகசெயலாளர் தோழர், விஜே டயஸ் நிகழ்த்திய பதிலுரையின் சுருக்கம்'**

மகாநாட்டின் இறுதியில் நிகழ்த்தும் இந்தப் பதிலுரை சம்பந்தமான எனது பொறுப்பு இலகுவாகியுள்ளதை யிட்டு மகாநாட்டின் கலந்துரையாடலில் கலந்து கொண்ட சகல தோழர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டு பேச்சை ஆரம்பிக்கின்றேன். இளம் தோழர்கள் தத்தமக்குரிய பொருளாதார, சமூகத் துறைகளில் தாம் முகம் கொடுத்துள்ள சகிக்க முடியாத பிரச்சினைகளை மனந்திறந்து பேசினார்கள். அத்துடன் நின்றுவிடாது அவற்றுக்குப் பதில்காண புரட்சிகரத் தலைமையைக் கட்டி எழுப்ப புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்துடனும் 'இளம் சோசலிஸ்டுகள்' இயக்கத்துடனும் இணைந்து போராட அனைவரும் முடிவு செய்தமை பெரும் மகிழ்ச்சி தருகின்றது.

இந்நிலையில் இம்மகாநாட்டின் முக்கியத்துவத்தினையும் இதில் கலந்து கொண்டோரின் பணியையும் பற்றி நான் சற்றுசுருக்கமாகக் குறிப்பிடுகின்றேன். இம்மகாநாடு அதன் சேர்க்கை மூலமே இந்நாட்டின் தொழிலாள — ஒடுக்கப்படும் இளம் பரம்பரையினரைப் பிரதிநிதித்துவம் செய்கிறது. மாணவர்கள், நகர்ப்புற-கிராமப்புற வேலையற்ற இளைஞர்கள், பயிற்சி பெறும் தொழிலாளர்கள், கைத்தொழில், தோட்ட தொழிலாளர்கள், சுதந்திர வர்த்தக வலய தொழிலாளர் யுவதிகள் இம்மகாநாட்டில் கலந்து கொண்டனர். இது இந்நாட்டினுள் வளர்ச்சி கண்டு வரும் வர்க்கப் போராட்டத்தின் தன்மையை பறைசாற்றுகின்றது. அவர்கள் இம்மகாநாட்டில் தொழிலாள-ஒடுக்கப்படும் மக்களை படுகேவலமாகக் காட்டிக் கொடுத்தசமசமாஜ-கம்யூனிச-நவசமசமாஜ - இ. தொ. கா. தலைவர்களின் துரோகங்களுக்கு எதிராக நீண்ட அரசியல் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக அங்கத்தினர்களுடன் சேர்ந்துள்ளனர். இது பக்கம் பலம் வாய்ந்த கூட்டாகும்.

ஆதலால் இளம் சோசலிஸ்டுகளின் இந்த 10வது தேசிய மகாநாடு இலங்கை — தமிழ் ஈழத்தினைப் பொறுத்தமட்டில் மட்டுமன்றி முழு இந்தியத் துணைக் கண்டத்தைப் பொறுத்தமட்டிலும் — தீர்க்கமான ஒரு வழிகாட்டியாகும். ஏகாதிபத்திய அமைப்பினுள் ஒருபோதும்தீர்த்துக்கொள்ள முடியாத முரண்பாடுகள் வெடித்துவந்த இரண்டாம் உலக யுத்த காலத்தில் ஏகாதிபத்திய உலக யுத்தத்துக்கும் பிரித்தானிய காலனித்துவ ஆட்சிக்கு எதிராகவும் இந்தியத் துணைக் கண்டத்தில் தேசிய சுதந்திரத்தினையும் தேசிய ஐக்கியத்தினையும் ஊர்ஜிதம் செய்யும் சோசலிசப் புரட்சி வேலைத்திட்டத்தின் அடிப்படையில் தொழிலாள - ஒடுக்கப்படும் மக்களை அணிதிரட்டுவதில் இலங்கை ட்ரொட்ஸ்கிஸ்டுகளே முன்நின்றனர். இந்த வரலாற்றுப் புரட்சிகர பாரம்பரியங்களை இந்தியத் துணைக் கண்ட மக்கள் இயக்கத்தினுள் உயிரூட்ட வேண்டிய - உயிரூட்டக் கூடிய புறநிலை நிலைமைகளுக்குஇன்று நாம் முகம் கொடுத்துள்ளோம். இம்மகாநாட்டின் தீர்க்கமான தன்மை அங்கிருந்துதான் பெருக்கெடுக்கின்றது. மகாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள முன்நோக்குப் பத்திரம் - உலக சோசலிசப் புரட்சி வேலைத்திட்டத்தினை சகல தோழர்களும் அங்கீகரிப்பது அந்த விதத்தில் முக்கியம்.



பதிலுரை நிகழ்த்தும் தோழர் விஜே டயஸ்

## முன்நோக்கும் தொழிற்பாடும்

இத்துடன் இன்னுமோர் விடயத்தை தெளிவுபடுத்துவது எமது கடமை. முன்நோக்கினை நிறைவேற்றுவது ஏனைய நடவடிக்கைகளுக்காக தீர்மானம் செய்வதாகும் என்பதை வலியுறுத்த வேண்டும். அது வரலாற்று, புரட்சிகர சமூக சக்தியான தொழிலாள வர்க்கத்தையும் ஒடுக்கப்படும் மக்களையும் அரசியல் ரீதியில் அணிதிரட்டுவதற்கான அடிப்படையாகும். அந்த உயிர்த்துடிப்புமிக்க தொழிற்பாடில்லாது போகுமிடத்து முன்நோக்கு அடிமையாகிவிடுகிறது. அப்பொழுது தாமே நிறைவேற்றிய புரட்சிகர முன்நோக்கு, அதன் எதிரிடையாக இருந்து வரும் நிலைமையை நியாயப்படுத்தும் பிற்போக்கு மூடுதிரையாகி விடுகின்றது. உலகத்தினை ஆய்வு செய்வதில் இருந்து உலகினை மாற்றும் பணிக்கு நாம் முகம் கொடுத்துள்ளோம் என மார்க்ஸ் குறிப்பிட்டதன் அர்த்தம் அதுதான். தொழிலாள-ஒடுக்கப்படும் மக்களிடையே புரட்சிகர சிந்தனை, புரட்சிக் கட்சியின் அரசியல்தலையீடு ஊடாகவே வளர்ச்சி பெறுகிறது. இந்தப் புரட்சிகர சிந்தனைஒரே படியாக மக்களிடையே பரவி விடுவதில்லை. ஆனால் அதற்கான ஆரம்பிப்பில் ஈடுபடும் சிறுபான்மையினரின் பணி தீர்க்கமானது. இந்தப் புரட்சிகர முன்னணிப் படைதான் நான்காம்அகிலத்தின் அனைத்துலகக் குழு. நீங்கள் புரட்சிக்கம்யூனிஸ்ட் கழகத்திலும் இளம் சோசலிஸ்டுகள்இயக்கத்திலும் சேரும் போது உங்கள் கரங்கள் உலக சோசலிசப் புரட்சியின் அந்த முன்னணிப் படையுடன் இணைந்து கொள்கின்றது.

நவம்பர் 16-17ம் திகதிகளில் அனைத்துலகக் குழு பேர்ளின் நகரில் கூட்டும் உலகத் தொழிலாளர் மகாநாடு தீர்க்கமான ஒரு அம்சமாகும். மனித இனத்தை அணுவாயுத யுத்த அழிவுகளில் இருந்து மீட்டெடுக்கும் புரட்சிகர வேலைத் திட்டத்தினைக் கொண்ட ஒரே இயக்கம் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவே என்பது மீண்டும் ஊர்ஜிதமாகியுள்ளது. இந்நூற்றாண்டின் முற்பகுதியில் ஏகாதிபத்திய உலகம் முகம் கொடுத்த முக்கிய முரண்பாடுகள் அனைத்தும் இன்று மனித இனத்தின் எதிரில் வந்து நிற்கின்றன. உற்பத்திச் சக்திகளின் உலகளாவிய வளர்ச்சியும் தனிச் சொத்துடைமைக்கும் தேசிய அரசு அமைப்புக்கும் இடையேயான சீர்செய்ய முடியாத முரண்பாடுகளும் ஏகாதிபத்தியவாதிகளை உலக யுத்தங்களை நோக்கி இட்டுச் செல்கின்றது. இந்நூற்றாண்டின் முதல் அரைவாசியில் 11 ஆண்டுகள் இந்த அழிவு யுத்தத்திற்காகச் செலவிடப்பட்டது. எனினும் இந்த இரண்டு யுத்தங்களால்ஏகாதிபத்தியம் தனது முரண்பாடுகளை தீர்த்துக் கொள்ள முடியவில்லை. இன்று அவை மீண்டும் உலக அரசியல் நிலைமையை அச்சுறுத்தி வருகின்றன. இதிலிருந்து மீட்சிக்கானபாதையை 1917 ருஷ்யப் புரட்சி காட்டியது. ஏகாதிபத்தியத்தினை துடைத்துக்கட்டும் உலக சோசலிச புரட்சியின் முதல் அடியாக அது விளங்கியது. அதற்குலெனின்-ட்ரொட்ஸ்கி தலைமையிலான போல்ஷிவிக் கட்சி தலைமை தாங்கியது.

இன்று பூமியில் அந்த புரட்சிகர பாரம்பரியங்களின் ஒரே உரிமையாளர் அனைத்துலகக் குழுவே. சகல வகையறாவையும் 'சேர்ந்த தேசியவாத, சந்தர்ப்பவாத அதிகாரத்துவங்களுக்கு எதிரான ஸ்திரக்கமற்ற தத்துவார்த்த, அரசியல் போராட்டம் மூலம் அவ்வுரிமை வேண்டப்பட்டது. சமூக ஜனநாயக, ஸ்டாலினிஸ்டுக்கு எதிராகவும் நான்காம் அகிலத்தினுள் தோன்றிய பப்லோவாத திரிபுவாதத்தின் சகல வகையறாக்களுக்கு எதிராகவும் அனைத்துலகக் குழு போராடியது. அதன் மூலம் உலக சோசலிசப் புரட்சிக்குத் தலைமை தாங்கஅதற்கு இன்று பூரண அரசியல் தகுதி உண்டு. அனைத்துலகக் குழுவை நாசமாக்க முன்வந்த பிரித்தானிய தொழிலாளர் புரட்சிக் கட்சியின் ஓடுகாலிகளை தோற்கடித்ததன் மூலம் நான்காம் அகிலத்தின் பதாகையையும். வேலைத் திட்டத்தினையும் அனைத்துலகக் குழு பேணியது. இன்று பப்லோ - மண்டேல் தேசியவாத, சந்தர்ப்பவாதிகள் நான்காம் அகிலத்தினை கூறுபோடும் பிரிவினை உக்திகளில் குதித்துள்ளனர். பேர்ளின் மகாநாடு இதில் இருந்து தீர்க்கமாக வேறுபடுத்திக் கொள்ளும் உச்சக் கட்டம்.

## முரண்பாடுகள்

1914—19 முதலாம் உலக யுத்தத்தின் மூலம் ஏகாதிபத்திய அமைப்பினுள் இருந்து வந்த முரண்பாடுகள் தீர்க்கப்படாததுமட்டுமன்றி, தொடர்ந்து வந்த காலத்தில் புரட்சிக்கும் எதிர்ப்புரட்சிக்கும் இடையேயான மோதுதல் உக்கிரம் கண்டது. இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் சமூக ஜனநாயக ஸ்டாலினிச தலைவர்களுடனும் காலனித்துவ நாடுகளின் தேசிய முதலாளித்துவ தலைவர்களுடன் செய்து கொண்ட உடன்பாடுகளுடனும் பிரேட்டன்வூட்ஸ் உடன்படிக்கை, உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம். மார்ஷல் உதவி திட்டம் முதலான ஏற்பாடுகள் மூலமும் ஏகாதிபத்தியம் தற்காலிக உறுதிப்பாட்டினை ஏற்படுத்தியது. இன்று இந்த ஏற்பாடுகள் அனைத்தும் தகர்ந்து போய்விட்டன, இதன்காரணமாக இவற்றுக்குத் தோள் கொடுத்த சகல அதிகாரத்துவங்களும் தூக்கி வீசப்பட்டுள்ளன. கிழக்கு ஐரோப்பிய ஸ்டாலினிச ஆட்சியாளர்களைத் தொடர்ந்து இந்த அதிகாரத்துவங்கள் ஒன்றன் பின் ஒன்றாகத் தூக்கி வீசப்பட்டன. வளைகுடா யுத்தம் நாம் புதிய காலப்பகுதிக்குள்- யுத்தங்களதும், புரட்சிகளதும் — காலடி வைத்துள்ளதை எடுத்துக் காட்டுகின்றது.

யுத்தத்தின் பின்னைய ஏகாதிபத்திய அமைப்புக்கு அடிபணிந்து, அதனை வழிபட்ட சகல திரிபுவாதிகளுக்கும் எதிராகப் போராடிய நா. அ. அ. கு. மட்டுமே அந்த அமைப்பின் வீழ்ச்சியை தீர்க்கதரிசனமாகக் கண்டது என்பதை மீண்டும் கூறிவைக்க எனக்கு இடமளியுங்கள். ஏகாதிபத்தியத்தினதும் ஸ்டாலினிச' அதிகாரத்துவங்களதும் தேசிய முதலாளித்துவ ஆட்சியாளர்களதும் பலத்தைப் பெரிதுபடுத்திக் காட்டி அதன் மூலம் நெருப்பினுள் வீழ்ந்த பப்லோ-மண்டேல் போன்றவர்களதும் சமசமாஜ தலைவர்களதும் எதிர்ப்பின் எதிரில் புரட்சிகர முன்நோக்கினைப் பேணுவது அன்று சுலபமாக இருக்கவில்லை. ஆனால் இன்று நாம் அக்கட்டத்தை தாண்டிவிட்டோம். இம்மகாநாடு அத்தகைய ஒரு திருப்புமுனையில் நடைபெறுகின்றது.

நாம் கடந்து வந்த காலத்தைப் புரிந்து கொள்ளும் பொருட்டு நான் ட்ரொட்ஸ்கியின் 'மை லைப்' (MY LIFE) என்ற நூலில் இருந்து சில பந்திகளை வாசிக்கின்றேன் ... "எண்பதுகளில் (1880) மார்க்சிஸ்டுகள் அன்று நிலவிய வழக்காற்று மனோபாவத்துக்குள் சிறைப்பட்டுக் கிடந்தனர். அவர்கள் துணிச்சலுடன் ஆரம்பிக்க முடியாதிருத்தல் தடைகளின் எதிரில் ஸ்தம்பித்தல், நீண்ட தூர எதிர்காலத்துக்கு சோசலிசத்தை தள்ளிப் போடுதல், அத்தோடு சோசலிசத்தை பல நூற்றாண்டுகளின் வெளிப்பாட்டின் பணியென அங்கீகரிக்கப் பொதுவில் தள்ளப்படுதல் ஆதியனவற்றைக் காண்டிருந்தனர்.''

இன்று போல்ஷிவிக் புரட்சியில் லெனினுடன் இணைத் தலைவராக விளங்கி, இலட்சோப லட்சம் தொழிலாளர், ஏழைகளை செஞ்சேனையுள் அணிதிரட்டி, ஏகாதிபத்தியவாதிகள் தேசிய முதலாளி வர்க்கத்துடன் சேர்ந்து தொடுத்த எதிர்ப்புரட்சி தாக்குதலை தோற்கடிக்க ட்ரொட்ஸ்கி வழங்கிய தலைமையின் சகல இலட்சணங்களையும் கைவரப்பெறும் காலப் பகுதிக்குள் நாம் காலடிவைத்துள்ளோம். இதைப் புரிந்து கொள்ள வேண்டும். ட்ரொட்ஸ்கி வலியுறுத்திய விதத்தில் தொழிலாள-ஒடுக்கப்படும்மக்களின் அனுபவத்தைப் பெறுவதன் மூலமும், சளைக்காமல் செய்யும் மார்க்சிச ஆய்வுகள் மூலமும் எம்முன் நிலவக் கூடிய சகல சஞ்சலங்களையும் அகற்ற வேண்டும். புரட்சிக் கட்சியில் சேர உங்களுக்கு கதவுகள் திறந்துள்ளன. தொழிலாள-ஒடுக்கப்படும் மக்களுக்கும் புரட்சிக் கட்சிக்கும் இடையே உருவாகியுள்ள மாற்றங்கள் இதனைப் பலம் வாய்ந்த முறையில் நிரூபித்துள்ளன. அனைத்துலகக் குழுவும் அதன் கிளைகளும் உலகம் பூராவும் நடாத்தி வரும் அரசியல் போராட்டத்தில் இருந்து பெருக்கெடுத்துவரும் அனுபவங்கள் இதனை ஒழிவு மறைவின்றி பறைசாற்றுகின்றன. ட்ரொட்ஸ்கிஸ்டுகளை ஆயிரமாயிரமாகக்கொன்றும் சோவியத் யூனியனை ட்ரொட்ஸ்கிசத்தின் தடை செய்யப்பட்ட பிராந்தியமாக்கியும் 6 1/2 தசாப்தங்களுக்கு மேலாக ஸ்டாலினிஸ்டுகள் நடாத்திய ஆட்சி இன்று மரணநெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளது. ட்ரொட்ஸ்கிசத்துக்கு எதிராகப் போடப்பட்ட இரும்பு வேலிகள் இற்றுண்டு போயின. இதைத் தொடர்ந்து அனைத்துலக குழு அங்கு அரசியல் நடவடிக்

கையில் ஈடுப... ட்ரொட்ஸ்கிய... ஆய்வு, வே... யில் தொழிலா... பட்டுள்ளதை... முடிந்தது. அ... வுக்குதினமும்... வரும் நூ... கடிதங்கள். இ... பகர்கின்றன. ... துள்ள நேரத்... களில் இருந்து... வாசிக்க வி... இது கிழு ந... கிடைத்துள்ள...

## ருஷ்ய...

"நான்காம்... யீடுகளின் மதி... யர்களே, நா... தத்துக்கும் சி... ட்ரொட்ஸ்கிய... களுக்கும் என... தெரிவிக்கின்... வாய்ந்த சிந்... உறுதியான... புனருத்தாரன... டமை எம்மை... மட்டில்-சோவி... சமூகஅபிவிரு... முடியாத... ஒரு சில வருட... னர் கூட... பெயர், அவ... விபரங்களை... உள்ளடக்கியுத்... கொண்டு எஞ்... சில ஆயிரம்... வழங்கினர். ... னாரைப் பே... 1919லும் 192... ஸ்கி பன்முக... க்கு உரை நிக... டிருக்கிறார்க... புரட்சிகரக்... வரின்-ட்ரொ... சின் பின்னர்... வாடிய, உரிய... உரியமுறையி... டப் படாத... கள் தமது க... தை வெற்றி... போக்கு... கும் ஏகாதிப... காரர் களுக்கு... போராட்ச... தினை என்... முறை எலக்... ஆனால் சோச... உள்ள பலரு... புத்தகபூசி... சத்தின் ப... ட்ரொட்ஸ்கி... எதிர்க்கட்சி... னதும்... எதிரி... யேல் பிளர்... களின்படி... ருஷ்ய மக்கள்...

"எல். டி... தனியானுவை... செயற்படுத... நசுக்குவதன்... எதிரிகள்... கருத்துக்களி... முக்கி... செய்தொர... கிடம்மாக... பிரஞ்சோவ... கட்சியோ... காரத்துவமே... வர்க்கத்தின்... கூறிக் கொ...

www.padippakam.com

www.padippakam.com

# ட்டாகும்”

ள்ள மூலம்
அரசியல்
திட்ட வழி
கள் ஈர்க்கப்
நரில் காண
த்துலக குழு
நக்கெடுத்து
க்கணக்கான
குச் சாட்சி
க்கு கிடைத்
சில கடிதங்
பந்திகளை
புகின்றேன்.
தில் இருந்து
தம்.

டிதம்

லெம் ’வெளி
க்குரியஆசிரி
தங்கள் கடி
ாக எல்.டி.
கட்டுரை
நன்றியைத்
பலம்
னயாளரும்.
சியாளரும்
செய்யப்பட்
பொறுத்த
யூனியனின்
ன் தவிர்க்க
பெறாகும்,
ளுக்கு முன்
ரட்ஸ்கியின்
பற்றிய
ரட்சியிலும்
திலும் பங்கு
நக்கும்
மட்டுமே
பாட்ட
அவர்கள்
ட்ரொட்
சஞ்சேனை
தைகேட்
இராணுவ
டி தலை
யின் பேச்
ட்டினியால்
சிபெறாத
அணிதிரட்
டை வீரர்
பு, அச்சத்
ண்டு பிற்
படைகளுக்
அடுருவல்
எதிராகப்
ற விதத்
னார் பல
யுள்ளார்.
யூனியனில்
லினிச
உபதே
இன்னமும்
ளாளித்துவ
ர்; லெனி
த்தினதும்
இல்லை
ட் காரார்
ஏஜன்ட்.
திரி.

ட்ஸ்கியின்
ருத்துக்கள்
முழுமனே
அவரின்
இன்றைய
உறுதி
ச்சர்ச்சைச்
டாலினிச
ம்யூனிஸ்ட்
கட்சி அதி
முதலாளி
களைக்
புதிய



பதுளையில் இருந்து வந்த தோட்டத் தொழிலாளி மகா நாட்டின் கலந்துரையாடலில் பங்கு கொள்கிறார்.

லிபரல்வாதிகளோ சோவியத் யூனியன் உழைக்கும் மக்களின் ஆழமான தேவைகளை தீர்த்து வைக்கப்போவதில்லை. கட்சி வலதுசாரிகளும் பிளாக்ஹன்றட் வலது சாரிகளும் எல்.டி. ட்ரொட்ஸ்கியின் பெயருக்குக் கூட அவ்வளவு பலத்த எதிர்ப்புக் காட்டுவதற்குக் காரணம், சோவியத் யூனியனுள் இன்று எல்.டி.. ட்ரொட்ஸ்கி போன்ற ஒரு வரலாற்று புருஷரை புனருத்தாரணம் செய்வதானது புரட்சியையும் உள்நாட்டு போரையும் பற்றிய உண்மையையும் அரசியல் சிந்தனையாளரையும் நான்காம் அகிலத்தின் ஸ்தாபகரையும் புனருத்தாரணம் செய்வதாலாகும். இதானது புரட்சிகரத் தொழிலாள வர்க்கத்தையும் சகல மானிட பெறுமானங்களையும் கைவரப் பெற்று உலகத் தொழிலாளர் இயக்கத்துடனான பிணைப்பினை பலப்படுத்தும் போராட்டமாக விளங்குவதாலாகும்.’’

ஆங்கிலத்தில் எழுதப் பெற்ற மற்றுமோர் கடிதத்தின் ஒரு பகுதியை வாசிக்கின்றேன். ‘‘ஒரு சில தினங்களுக்கு முன்னர் தங்களது கடிதம் கிடைத்தது. மிகுந்த நன்றி. எமது நாட்டின் நிலைமை பற்றி தாங்கள் தொடர்ந்து ஆய்வு செய்வது பற்றி நான் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன். அது ஆழமானது. நான் உண்மையில் தங்களுடன் உடன்படுகின்றேன், நான் ருஷ்யாவில் வாழும் அதே சமயம் நீங்கள் அமெரிக்காவில் வாழ்ந்த போதிலும் பெரொஸ்ரொயிகா தொடர்பான சம்பவங்கள் தொடர்பாக எமது கருத்துக்கள் இணைந்து கொள்வது அதிசயமானது. சில வேளை விடயம் தொடர்பான உள்ளடக்கத்தை நன்கு புரிந்து கொண்டது அதற்கான காரணமாகவாம். நீங்கள் எந்தவிதத்திலும் தொழில் சார் அரசியல்வாதி.

‘‘எவ்வாறெனினும் நிலைமையைப் புரிந்து கொள்ளவும் எனது எதிரிகளுடன் வாதிடவும் எனது நண்பர்களுக்கு அரசியல் வாழ்க்கை பற்றிய எந்தவொரு விடயத்தையும் தெளிவுபடுத்தவும் தாங்கள் எனக்கு உதவினீர்கள். நான் அறிந்த விதத்தில் தங்கள் கடிதத்தின் கீழ்க்கண்ட பகுதி அதிசயமானது: ‘‘கொர்பச்சேவ், அதிகாரத்துவத்தினுள் முதலாளித்துவ புனருத்தாரண குழுவின் தலைவராக விளங்கும் அதே சமயம், யெல்ட்சின், தலைநீட்டி வரும் ருஷ்ய கொம்பிரதோர் முதலாளி வர்க்கத்தின் இன்றைய தலைவராவார். சொர்பச்சேவுக்கும் யெல்ட்சினுக்கும் இடையே இடம்பெறுவதாகச் சொல்லிக் கொள்ளப்படும் போராட்டம் என்பதை விளங்கிக் கொள்ள இது திறவுகோலாக உள்ளது. இரண்டாவதாக தங்கள் கடிதம் மனவுறுதியை வழங்குகின்றது. இறுதியாக உள்ளதும் அதுஇல்லாமல் போகும் ஆபத்தின் கீழ் சகலரும் வாழ்ந்து கொண்டுள்ள குழம்பிப்போன சமுதாயத்தில் வாழ்வது சிரமமானது என்பதைப் புரிந்து கொள்ள உதவுகின்றது. பெரொஸ்ரொயிகா குட்டையினுள் வாழ்வது சிரமமானது, சிறப்பாக நீங்கள் சுற்றவாளியனால் அது சிரமமானது. சகலரும் எதிரிகளாகிறார்கள். சகலரும் தம்மைப் பற்றியே சிந்திக்கிறார்கள். எமது நகரத்திலும் நடப்பது அதுவே. நிலைமை அவ்வளவுக்கு சிக்கலானது.’’

கடிதத்தின் இறுதியில் இத் தொழிலாளி தோழர். நோர்த்தின் கடிதங்களை மொழி பெயர்த்து நகரின் பத்திரிகைகளுக்கு வழங்கவா எனவும் கேட்டுள்ளார், எமக்கு சோவியத் பத்திரிகைகளை அனுப்புவது அவசியமா எனவும் வினவியுள்ளார்.

மற்றுமோர் கடிதம் பின் வருமாறு குறிப்பிடுகின்றது: ‘எனக்கு உங்கள் முதல் கடிதம் கிடைத்ததும் நான் பாய்ந்து கையில் எடுத்தேன். நான்காம் அகிலத்தின் வெளியீடு இன்னும் கிடைக்கவில்லை. எனினும் அது நாசமாகாமல் என் கைக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கையை நான் இழந்து விடவில்லை. எனினும் நீங்கள் தற்சமயம் எனக்கு அனுப்பி வைத்துள்ளவை கூட அழிக்க முடியாத எண்ணங்களை ஏற்படுத்துகின்றது. சிறப்பாக ட்ரொட்ஸ்கி சோவியத் யூனியனுக்கு எழுதிய கடைசிக் கடிதம் பற்றிக் குறிப்பிடுகின்றேன், அந்தக் கடிதத்தினை வாசித்ததுதான் தாமதம் அக் கடிதத்தினை அன்றைய காலகட்டத்தில் விநியோகித்தவர்கள் உயிர்த்தியாகம் செய்ய ஏன் நேரிட்டது என்பதை நன்கு புரிந்து கொள்ள முடிந்தது. அத்தோடு அக்கடிதம் இன்றைய காலத்துக்கு நன்கு பொருத்தமானது. இன்று அது 50 வருடங்களுக்கு முன்னர் இருந்ததற்கு எந்த விதத்திலும் குன்றிநிந்ததாய் இல்லை.’’

அனைத்துலகக் குழுவின் அரசியல் தலைமையின் கீழ் சோவியத் யூனியன் தொழிலாள வர்க்கத்திடையே ஏற்பட்டு வரும் புரட்சிகர மாற்றங்களை புரிந்து கொள்ள இக்கடிதங்கள் உங்களுக்கு உதவுவது நிச்சயம். சோவியத் யூனியனுள் ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் சகல பிரிவினருக்கும் எதிராக ட்ரொட்ஸ்கிச வேலைத்திட்டத்தினை சூழ இடம்பெறும் இந்த அணிதிரளல் உலக புரட்சிகர முக்கியத்துவம் பெறுகின்றது. ஸ்டாலினிச அதிகாரத்துவம் ஏகாதிபத்தியவாதிகளுடனும் பின்தங்கிய நாடுகளின் தேசிய முதலாளித்துவ ஆட்சியாளர்களுடனும், கட்சிகளுடனும் கொண்டிருந்த வர்க்க சமரசப் பிற்போக்குக். கூட்டுக்கள் இன்று வெடித்துச் சிதறியுள்ளன. இது உலகத் தொழிலாள வர்க்கத்தினை அனைத்துலக அடிப்படையில் அணிதிரட்டப் பிரமாண்டமான வாய்ப்புக்களை வழங்கியுள்ளது. இந்த அரசியல் வாய்ப்பினை குறைந்து மதிப்பிடுவதோ அல்லது சந்தேகிப்பதோ இன்றைய புறநிலை உலக அபிவிருத்திகளின்கீழ் சாத்தியமானதல்ல,

கடந்த தசாப்தங்களில் மாதிரி ஏகாதிபத்திய நாடாக ஏகாதிபத்தியகையாட்களால் பூதாகாரப்படுத்திக் காட்டப்பட்ட அமெரிக்கத் தொழிலாள—ஒடுக்கப்படும் மக்கள் முகம் கொடுக்கும் வாழ்க்கை நிலைமைகள் இளம் சோசலிஸ்டுகளின் முன்நோக்கு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது; இந்நிலைமை எமது நாட்டில், தொழிலாள - ஒடுக்கப்படும் மக்கள் முகம் கொடுக்கும் நிலைமையில் இருந்து வேறுபடுவது—இந்நாடு அமெரிக்காவில் பார்க்க ஜனத்தொகையில் பெரிதும் சிறியதாக விளங்கும் நாடானதால் உள்ள எண்ணிக்கை பற்றிய வேறுபாடு மட்டுமே. இருபுறத்திலும் தொழிலாள - ஒடுக்கப்படும் மக்கள் மனிதர் என்ற ரீதியில் இனியும் சகித்துக் கொள்ள முடியாத நிலைமைக்கு முகம் கொடுத்துள்ளனர்.

முதலாளித்துவ புனருத்தாரணத்தின் கீழ் ஸ்டாலினிச அதிகாரத்துவமும் அவர்களின் ஆட்சி முறையும் வீழ்ச்சி கண்ட இடங்களில் இன்று வேரூன்றியுள்ள புதிய வேடம் பூண்ட கொம்பிறதோர் ஸ்டாலினிச ஆட்சிகள் கிழக்கு ஐரோப்பா, சோவியத் யூனியன், சீனா வீயட்னாம் முதலான நாடுகளில் தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களுக்கு வழங்குவது இவற்றிற்கு ஒன்றும் குறைந்த கெடுதியை அல்ல. ஏகாதிபத்திய அமைப்புள் மீண்டும் கொணரப்பட்ட கிழக்கு ஜெர்மனியில் இவ்வாண்டு இறுதியில் நூற்றுக்கு 50% தொழிலாளர் வேலை நீக்கம் செய்யப்படவுள்ளனர். இது தொழிலாளரின் பலத்த எதிர்ப்புக்கு மத்தியில் அமுல் செய்யப்படவுள்ளது.

தேசிய சுதந்திரத்துக்கு தேசியப் பாதைகள் இல்லாதது போன்றே சோஷலிசத்துக்கும் தேசியப் பாதைகள் கிடையாது. தேசிய பாதையில் [illegible] தேசிய விடுதலையை வெற்றிகண்டு விட்டதாக செய்யப்பட்ட வாயடிப்புக்கள் அம்பலமாகியுள்ளதைப் போன்றே தேசிய எல்லைக்குள் சோசலிசத்தினை - நிர்மாணித்துவிட்டதாக ஸ்டாலினிஸ்டுகள் எழுப்பிய கூச்சல்களும் முழுமனே அம்பலமாகியுள்ளன. காலனித்துவத்தில் இருந்தும் முதலாளித்துவ அழிவில் இருந்தும் மீட்சிபெற தொழிலாள ஒடுக்கப்படும் மக்கள் எடுக்க வேண்டிய பாதையை ட்ரொட்ஸ்கியின் நிரந்தரப் புரட்சிக் கோட்பாடு சுட்டிக்காட்டுகின்றது. ஏகாதிபத்திய, காலனித்துவ,

அரைக் காலனித்துவ நாடுகளின் புரட்சிகர இயக்கங்களுக்கு இடையேயான உறவினையும் சார்பு தன்மையையும் ட்ரொட்ஸ்கி இதில் தெளிவுபடுத்தினார்,

உதாரணமாக இம்மகா நாட்டில் சுதந்திர வர்த்தக வலயத் தொழிலாளர்கள் முகம் கொடுத்துள்ள பிரச்சினையை விபரித்த தோழியின் பேச்சினைக் கவனியுங்கள். ஏகாதிபத்தியவாதிகள் அந்த நிலைமைகளை உலகளாவிய விதத்தில் தொழிலாளர் மீது திணிக்க முயற்சிக்கிறார்கள். கடந்த மாதத்தில் இந்நிலைமைகளை அவுஸ்திரேலிய தோழர்களுடன் கலந்துரையாடும் வாய்ப்புக் கிடைத்தது. அத்தோழர்கள் இதையிட்டு பெரும் அக்கறையும் ஆர்வமும் காட்டினர். காரணம், இதற்குச் சமானமான மிலேச்சநிலைமைகளை திணிக்க அவுஸ்திரேலிய ஏகாதிபத்திய ஆளும் வர்க்கம் முயன்று வருவதே. 1860புது களில் அவுஸ்திரேலிய ஆளும் வர்க்கம் சிட்னி. மெல்போர்ண் நகரங்களில் டசின் கணக்கான தொழிலாளர் குடும்பங்களை ஒரு வீட்டில் தள்ளி, காட்டுமிராண்டித் தனமாக சுரண்டியதை நாம் அவர்களுக்கு நினைவுபடுத்த முடிந்தது. இந்நிலைமையின் கீழ் உலகத் தொழிலாள வர்க்கத்தினை அனைத்துலக அடிப்படையில் ஐக்கியப்படுத்தவுள்ள பிரமாண்டமான வாய்ப்புக்களை நாம் புரிந்து கொள்ளவேண்டும். இந்நிலைமையிலேயே சமூக ஜனநாயக, ஸ்டாலினிச தலைவர்களின் நச்சுத்தனமான பாத்திரம் கொடிய வடிவம் எடுக்கின்றது. ஆதலால் சமசமாஜ — கம்யூனிச — நவசமசமாஜ — இ.தொ.கா. தலைவர்களை தொழிலான வர்க்க தலைமையில் இருந்து துரத்திஅடித்தல் மிகவும்அவசரப் பணியாகிறது அதை உலக ரீதியில் தொழிலாள வர்க்கத்தினை சோசலிசப் புரட்சிக்கு அணிதிரட்டப் போராடும் தலைமையின் கீழேயே சாதிக்க முடியும்,

இந்தியாவில் இராமர் ஜன்ம பூமி இயக்கத்தின் இலக்கு 1947ல் சிருஷ்டித்த இரத்த வெள்ளத்தினை தூண்டும் ஹிந்து முஸ்லிம் மோதுதல்களையும் இனப்படுகொலை இயக்கங்களையும் தூண்டுவதே. தமிழ்நாடு ஜெயலலிதா அரசாங்கம் காவேரி தண்ணீர் பிரச்சினை மீது கர்நாடக—தமிழ் நாடு மாநிலங்களுக்கு இடையே மோதுதலை சிருஷ்டிக்கின்றது. பின்தங்கிய நாடுகளில் ஏகாதிபத்திய சார்பு முதலாளித்துவ ஆளும் வர்க்கங்கள் தேசிய சுதந்திரத்தினையும். தேசிய ஐக்கியத்தினையும் உண்டு பண்ண இலாயக்கற்றவை மட்டுமன்றி, அந்தந்த நாடுகளில் இன, மத மோதுதல்களை தூண்டும் ஏகாதிபத்திய தரகர்களாகவும் செயற்படுவது இன்று அம்பலமாகியுள்ளது.

## தமிழர் விரோத யுத்தம்

இலங்கையில் தமிழர் விரோத யுத்தத்தில் ஈடுபட்டுள்ள யூ. என். பி. அரசாங்கமும் ஏகாதிபத்திய சார்புமுதலாளித்துவ ஆளும் வர்க்கமும் இதை முன்னதை விட இன்று நன்கு தெளிவாகக் காட்டியுள்ளது. தமிழ் தேசிய இனம் பிரிந்து சென்று வேறான அரசினை அமைக்கத் தள்ளப்பட்டதற்கு காரணம் அத்தேசிய இனத்தின் தேசிய ஜனநாயக உரிமையை புறக்கணித்த சமசமாஜ - கம்யூனிச - நவசமசமாஜ - இ. தொ. கா. தலைவர்களின் கடைகெட்ட காட்டிக்கொடுப்புக்கு மத்தியில் தமிழ்தேசிய இனத்துக்கு எதிரான இன வேறுபாடுகளை உக்கிரமாக்க யூ. என், பி - சி. ல. சு, க அரசாங்கங்கள் செயற்பட்டதே இதனை நாம் பலமுறை சுட்டிக் காட்டியுள்ளோம். தொழிலாள வர்க்கத்தின் பழைய தலைமையின் இத் துரோகத்தின் ஆதரவுடன் தமிழ் தேசிய இனத்தினர் மேல் தமிழ் முதலாளித்துவ, குட்டி முதலாளித்துவ குழுக்கள் தமது ஆளுமையை திணிக்க முடிந்தது. இந்த தமிழ் முதலாளித்துவ, குட்டி முதலாளித்துவ கட்சிகளும் குழுக்களும் சிங்கள முதலாளித்துவ, குட்டி முதலாளித்துவக் கட்சிகளுக்கு எந்தவிதத்திலும் அரசியல் வங்குரோத்திலும், பிற்போக்கிலும் குறைந்தவை அல்ல என்பது இன்று தெளிவாகி உள்ளது. இன்று ரேலோ, ஈபீஆர்எலஎப், புளொட் ஈரோஸ். ஈஎன். பீ.பி. ஈ. பீ. டீ; பி என்ற நானாவித இயக்கங்கள் பிரேமதாச அரசாங்கத்தினதும் இனவாத முதலாளித்துவ இராணுவத்தினதும் கையாட்களாகச் செயற்படுகின்றன. இனவாத முதலாளித்துவ அரசு சம்பந்தமாக தமிழ் ஒடுக்கப்படும் மக்களிடையே நிலவும் ஆத்திரம், சமரசமின்மை காரணமாக இராணுவ நடவடிக்கையில் இறங்கத் தள்ளப்பட்டுள்ள விடுதலைப் புலிகள் இயக்கம், இந்தியப் பிற்போக்கு ஆட்சி தொடர்பாகவும் யூ. என். பி. ஆட்சி தொடர்பாகவும் அரசியல் வங்குரோத்தினையும் அடிபணிவையும் காட்டிக்கொள்கின்றது. தமிழ் தொழிலாள - ஒடுக்கப்படும் மக்களின் இழப்புக்களின் மூலம் பிற்போக்கு ஆளும் வர்க்கங்களுடனும் கூட்டுக்குச் செல்வதன் மூலம், தமிழ் முதலாளிகள் தமிழ் மக்களை சுரண்டுவதற்கான சிறப்புச் சலுகைகளை வென்றெடுப்பது அவர்களின் இலக்காக உள்ளது, அவர்களின் வர்க்க நிலைப்பாடு அதுவே, அது ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் சார்பில் பேசிக் கொள்ளும் சகல முதலாளித்துவ இயக்கங்களதும் நிலைப்பாடு; சக்லவிதமான ஒடுக்கு

(25-ம் பக்கம் பார்க்க)

# தொழிலாளர் பாதை

விலை 1-50

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவுடன் ஐக்கியம் கொண்ட சோசலிசத் தொழிலாளர் கழகத்தின் மாத வெளியீடு

இதழ் எண் 40 ★ ஜூலை, 1991 ★


நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவினால் நடத்தப்பட இருக்கும் பெர்லின் சர்வதேச தொழிலாளர் மாநாட்டிற்கான

**முன்னோடி மாநாடு**

''ஏகாதிபத்தியப் போரையும் காலனி ஆதிக்கத்தையும் எதிர்ப்போம்''

29-09-91 ஞாயிறு, காலை 10மணி

ஸ்ரீ பாலாஜி திருமண மண்டபம்
1, தேவராஜ முதலி தெரு,
(மகாலட்சுமி திரை அரங்கு அருகில்)
பட்டாளம், சென்னை-12.

# ஏகாதிபத்திய வங்கிகளின் பொம்மை ஆட்சி கோரும் தியாகங்களை நிராகரி! சோசலிச வேலைத் திட்டத்திற்கு போராடு!

இந்திய முதலாளித்துவ பொருளாதார நெருக்கடிக்கு தொழிலாளர்களையும். ஏழை விவசாயிகளையும் இளைஞர்களையும் பலிக்கடாக்களாக்க, முதலாளித்துவ ஆட்சியாளர்கள் எடுக்கும் அனைத்து நடவடிக்கைகளையும் தொழிலாள வர்க்கம் எதிர்க்க வேண்டும். தொழிலாள வர்க்கம் தனது வரலாற்றுக் கடமையை நிறைவேற்ற வரலாற்று ரீதியாக திவாலான முதலாளித்துவ லாப உற்பத்தி அமைப்பை அகற்றி மனித சமுதாயத்தின் தேவைகளை அடிப்படையாக கொண்டு இயங்கும் சோசலிச பொருளாதார அமைப்பை உருவாக்க — போராட வேண்டும்.

நாடு மோசமான பொருளாதார நெருக்கடியில் இருப்பதால் ''நாம் மிகக் கடுமையான முடிவுகளை எடுக்க வேண்டும், நாம் எடுக்கும் முடிவுகள் மக்கள் மத்தியில் செல்வாக்கு உடையதாக இருக்க மாட்டாது.'' என்றும் ''மென்மையான எண்ணங்களுக்கு இனிமேல் இடமில்லை. மக்கள் பல தியாகங்கள் செய்யத் தயாராக இருக்க வேண்டும்'' என்றும் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற மறுநாள் தொலைக் காட்சியில் புதிய பிரதமர் நரசிம்மராவ் கோரிக்கை விடுத்துள்ளார். அதே தொனியில் அதற்குப் பின்னர் நிதி அமைச்சரும், ஜனாதிபதியும் கூட கோரிக்கை விடுத்துள்ளனர். மேலும் புதிய தொழில் அமைச்சரான வாழப்பாடி ராமமூர்த்தி, தொழிலாளர்கள் தொழிற் சங்க நலனைவிட தேசிய நலனையே மேலாக கருதி தியாகங்கள் புரிய வேண்டுமென்று'' கூறியுள்ளார்.

இந்தியா எதிர்கொண்டுள்ள மிகப்பெரும் பொருளாதார நெருக்கடி, தேசியப் பிரச்சினை என்றும் அதனால் அனைத்து மக்களும் அதற்கான பொறுப்பை ஏற்க வேண்டும் என்று கோரும் முதலாளித்துவ ஆட்சியாளர்கள் கடந்த 44 வருட வர்களது ''சுதந்திர'' ஆட்சியின் சாதனையாக காட்டக்கூடியது என்ன? நாட்டில் பாதிக்கு மேற்பட்ட மக்கள் வறுமைக் கோட்டிற்கு கீழே தள்ளப்பட்ட நிலைமை 2½லட்சத்துக்கும் அதிகமான ஆலைகள் நலிவுற்று மூடப்படும் நிலைமை, நகர்ப்பகுதியில் 3 கோடிக்கும் நாட்டுப்புறத்தில் 9 கோடிக்கும் அதிகமானோர் வேலையின்றிஇருக்கும் நிலை, சுமார் 2 கோடி சிறுவர் உழைப்பாளர்கள், பல கோடி தொழிலாளர்களின், ஏழை விவசாயிகளின் வாழ்க்கைத் தரம் மேலும் மேலும் மோசமாகிச் செல்லும் நிலைமைகள் முதலியனவையே!

இவற்றுடன் ஆளும் வர்க்கத்தினர் திருப்தி அடையவில்லை! மக்கள் கடுமையான உழைப்பின் மூலமாக, வேர்வையையும். இரத்தத்தையும் சிந்தி இந்த தேசத்தை காப்பாற்ற வேண்டும் என்று அறை கூவல் விடுக்கின்றனர், ஏகாதிபத்திய வங்கியாளர்களின் ஏஜண்டுகளாக ஆட்சி புரியும் காங்கிரஸ் அரசாங்கம் அவற்றின் கட்டளைப்படி ஏகாதிபத்திய பல்நாட்டுக் கம்பெனிகள் இந்திய தொழிலாள வர்க்கத்தை வரையறையின்றி சுரண்டுவதற்கு வசதியாக புதிய தொழிற் கொள்கையை அறிமுகப்படுத்த இருக்கிறது. இந்தியாவில் பன்னாட்டு கம்பெனிகளின் முதலீட்டுக்கு இடையூறாக இருக்கும் ''சிலந்தி வலைகள்'' அகற்றப்படும் என்று நிதியமைச்சர் மன்மோகன்சிங் கூறியுள்ளார், தேர்தலுக்கு முன்னர் அவரது சொந்த கட்சியாக் காங்கிரஸ் கட்சி 100 நாட்களுக்குள் விலைஉயர்வுகளை குறைப்போம் என்று கூறிய வாக்குறுதியை யதார்த்தமற்றது என்று கண்டனம் செய்துள்ளார் இந்திய முதலாளித்துவ பொருளாதாரத்தின் நெருக்கடி நிலைமையை தீர்க்க உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் (ஐ எம்.எப்.) முதலிய ஏகாதிபத்திய நிதி நிறுவனங்களின் 'ஆலோசனைப்படி' உணவு. உரம், போக்குவரத்துக்கான மானியங்களை வெட்டி. ரூபாயின் மதிப்பை குறைத்து தொழிலாளர்கள் ஏழை விவசாயிகள் மீது பெரும் தாக்குதலை தொடுக்க காங்கிரஸ் அரசாங்கம் கங்கணம் கட்டிநிற்கிறது,

ஏகாதிபத்திய வங்கிகளிடம் வாங்கிய கடனுக்கான வட்டியைக்கூட செலுத்த முடியாதிருக்கும் நிதி நெருக்கடியை தற்காலிகமாக 'தீர்ப்பதற்காக? காங்கிரஸ் அரசாங்கம் இதுவரையில் 46.91 டன்கள் எடையுள்ள தங்கத்தை இங்கிலாந்து வங்கியில் 'அடகு' வைத்து ஒரு மாத காலத்துக்கு சுமார் 400மில்லியன் டாலர்களை கடன்வாங்கியுள்ளது,

காங்கிரஸ் அரசாங்கத்தின் இந்த நடவடிக்கைகள் சோசலிசத் தொழிலாளர் கழகத்தின் முன்னெச்சரிக்கையை ஊர்ஜிதப்படுத்தி உள்ளது, சோசலிசத் தொழிலாளர் கழகம் அதன் தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டதாவது: ''இன்றைய ஆழமான முதலாளித்துவ பொருளாதார நெருக்கடி நிலைமையின் மத்தியில் தேர்தலுக்கு பின்னர் ஆட்சி அமைக்கும் எந்த ஒரு அரசாங்கமும் ஏகாதிபத்திய வங்கியாளர்களின் ஏஜண்டுகளாக தொழிலாளர் விவசாயிகளுக்கு எதிராக இதற்கு முன் கண்டிராத தாக்குதல்களை தொடுப்பார்கள்'' (தொழிலாளர் பாதை. ஜூன் 1991).

## நெருக்கடியின் பின்னணி

இந்திய பாராளுமன்ற தேர்தல் வரலாற்றிலேயே மிகவும் பலாத்காரங்கள் நிறைந்தஇத்தேர்தலுக்கு பின்னர் கடந்த 20 மாதங்களில் மூன்றாவது தடவையாக ஒரு சிறுபான்மை அரசாங்கம் அமைக்கப்பட்டுள்ளது. 1947ல் ஏகாதிபத்தியத்தின் இந்திய முதலாளித்துவத்தின் எதிர்ப் புரட்சி சதியின் மூலம் மதவாத அடிப்படையில் கூறு போடப்பட்ட அரசுகளில் ஒன்றான இந்தியா பல்வேறு கூறுகளாக மேலும் பிளவுபடும் அபாயத்தை எதிர் கொண்டுள்ளது. 1947இலிருந்து 40 வருடங்களாக இந்திய முதலாளித்துவத்தின் பாரம்பரிய முதலாளித்துவ கட்சியாக ஆட்சி புரிந்து வந்த காங்கிரஸ் கட்சியின் நேரு குடும்பவழி ஆட்சி ராஜீவ்காந்தியின் மரணத்துடன் ஒரு முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது, இன்று காங்கிரஸ் கட்சி அதன் நீண்டகால ''சுயசார்பு'' பொருளாதார கொள்கைகளை கைவிட்டு வெளிப்படையாகவே 'ஏகாதிபத்திய சார்பு' கொள்கைகளை அமல்படுத்த தீர்மானித்துள்ளது சோவியத் ஸ்டாலினிச அதிகாரத்துவம், அதன் காட்டிக் கொடுப்புகளின் உச்சக் கட்டமாக சோவியத் யூனியனுக்குள் முதலாளித்துவத்தை மீட்டெடுக்கும் முயற்சியில் உலக ஏகாதிபத்திய சக்திகளுடன் நெருக்கமான உறவை ஏற்படுத்தியுள்ளது. இம்மாற்றம் குறிப்பிடத் தக்க அளவு சோவியத் யூனியனின் ஆதரவில் தங்கியிருந்த இந்தியா போன்ற நாடுகளை முழுமையாக ஏகாதிபத்திய அரவணைப்புகுள் தள்ளியுள்ளது

இந்நிகழ்ச்சிகள் எடுத்துக் காட்டுவது இரண்டாம் உலக யுத்தத்திற்கு பிற்பாடு ஏகாதிபத்திய ஒழுங்கை சர்வதேச ரீதியாக நிலைநாட்ட முக்கியமான தூண்களாக செயலாற்றி வந்த ஸ்டாலினிசமும் தேசிய முதலாளித்துவமும் மதிப்பிழந்து திவாலாகிப் போயுள்ளன, அதுபோலவே இவற்றின் அரசியல் காட்டிக் கொடுப்புகளை பயன்படுததி யுத்தத்தால் சீரழிக்கப்பட்ட முதலாளித்துவ பொருளாதாரத்துக்கு புத்துயிர் அளிக்க அன்று அமெரிக்க முதலாளித்துவத்தின் சார்பு ரீதியான பொருளாதார பலத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட பொருளாதார அமைப்புக்களாக உலகவங்கி, பன்னாட்டு நிதியம், வர்த்தகம், வரியில் பொது உடன்பாடு (GATT) அனைத்துமே இன்று ஆழமான நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளன. இவ்வாறாக பொருளாதார வீழ்ச்சிகளுக்கும், அரசியல் கொந்தளிப்புகளுக்கும் ஊற்றுக்காலாக இருப்பது இந்த இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் இரண்டு உலக யுத்தங்களை தோற்றுவித்த இந்த ஏகாதிபத்திய சகாப்தத்தின் அடிப்படையான முரண்பாடுகளாகும். சமூக உற்பத்திக்கும் தனி உடைமைக்கும் பூகோள ரீதியான உற்பத்தி முறைக்கும் தேசிய அரசு அமைப்புக்கும் இடையிலான முரண்பாடுகளே இவை. இந்த முரண்பாடுகளை அழக்கி வைப்பதற்கு எடுத்த அனைத்து நடவடிக்கைகளுமே செயலற்றுப் போய் அவை மறுபடி பூகம்பமாக வெடிக்கும் தன்மையுடன் வளர்ச்சியடைந்துள்ளன. இவற்றின் வெளிப்பாடுகளாகவே உலக யுத்தத்திற்கான பதட்டங்களும், உள்நாட்டு யுத்த நிலைமைகளும் உலகளவில் தோன்றி வருகின்றன, பின்தங்கிய நாடுகளில் தீர்க்கப்படாத ஜனநாயகப் புரட்சி சம்பந்தப்பட்ட பல பிரச்சினைகள் வெடித்தெழுந்து முதலாளித்துவ ஆட்சிகளை ஆட்டம் காண வைத்துள்ளன.

இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், பர்மா முதலிய நாடுகளில் வெடித்தெழுந்துள்ள தேசிய இனப்பிரச்சினைகளும் விவசாயிகளின் அடிப்படையான பிரச்சினைகளும் முதலாளித்துவ அமைப்பின் நெருக்கடியினால் பன்மடங்கு உக்கிரப்படுத்தப்பட்டுள்ளன. இத்தகைய போராட்டங்கள் தொழிலாள வர்க்கப் போராட்டங்களுடன் ஒன்றிணைந்து முதலாளித்துவ ஆட்சி அமைப்புக்கு பெரும் அச்சுறுத்தலாக வளர்ந்துள்ளன.

## பாரதீய ஜனதாக் கட்சியின் வளர்ச்சி

ஏகாதிபத்திய வங்கியாளர்களின் பொருளாதார திட்டங்களை தொழிலாளர்கள், ஏழை விவசாயிகள் மேல் திணிப்பதற்கு எதிராக வளர்ச்சியடையும் வர்க்கப் போராட்டங்களை திசை திருப்பவும், ஒடுக்கவும் ஆளும் வர்க்கத்தின் பிரதான கட்சிகளினுள் தொழிற்பங்கீடு செய்யப்பட்டுள்ளன. இதன் முக்கிய பாகமாக இந்துமதவாத வெறியை வாந்தி எடுக்கும் பாரதீய ஜனதாக்கட்சி முன்னணிக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. 1989க்கு முன்னர் மக்களவையில் 2 தொகுதிகளை மட்டுமே கொண்டிருந்த பா.ஜ. கட்சி 1989 தேர்தலில் அதன் எண்ணிக்கையை 89 ஆகவும், 1991 தேர்தலில் 117 ஆகவும் உயர்த்தியுள்ளது 16ம் நூற்றாண்டு பள்ளிவாசலை உடைத்து அந்த இடத்தில் ராமர் கோயிலை கட்டப் போவ

(17ம் பக்கம் பார்க்க)

**தமிழீழ தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரி!**
**தமிழீழ அகதிகளை நாடு கடத்தும் திட்டத்தை முறியடி!**

www.padippakam.com
படிப்பகம்